சுபமஸ்து.

ஸ்ரீ கதிர்காமன் றுணை.

---

இலங்கையிற் கண்டிமாநகரி லரசுபுரிந்த

# கீர்த்திசிங்கமஹாராஜன்

சரித்திரமென்னும்

# கண்டிராஜா நாடகம்.

இஃது

கொழும்பு - ஸ்ரீமான், க. சி. வே. நா. சின்னயப்பிள்ளை அவர்களும்,

சென்னை - இந்து வினோதசபைத் தலைவர்,

ம-ா-ா-ஸ்ரீ, தி. நாராயணசாமிபிள்ளை அவர்களும்

கேட்டுக்கொண்டபடி,

ஸ்ரீமத் அருளானந்த சுவாமிகள் மாணாக்கர்

ம-ா-ா-ஸ்ரீ,

**ஏகை - சிவசண்முகம்பிள்ளை**

அவர்களால்

இயற்றப்பட்டு,

கா. சுப்பராயமுதலியார் அண்டு கம்பெனி

தமது

திரிபுரசுந்தரிவிலாசம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

REGISTERED COPY-RIGHT.

---

இதன் விலை] *December 1906.* [ரூபா. 0-12-0

உ

கதிர்காமக்கடவுள் துணை.

---

கீர்த்தி சிங்கமஹா ராஜ னென்னு -

# கண்டிராஜா நாடகம்.

## விநாயகர் துதி.

### எழுசீர் விருத்தம்.

நீர்க்கண்டி வலையெறிக்க நிலவெறிக்கு மணிகொழிக்கு
நெடியநேமிப்
பார்க்கண்டி சைகளனைத்தும் புகழ்வளஞ்சேர் தென்னிலங்கைப்
பதிக்க ணார்ந்த
தார்க்கண்டி புனைகண்டி நகர்க்கீர்த்தி சிங்கமன்னன்
சரிதந் தன்னைச்
சீர்க்கண்டி நாடகமா யிசைக்கவொரு சிவகளிற்றைச்
சிந்தை செய்வாம்.

## கதிர்காமக்கடவுள் துதி.

### எழுசீர் விருத்தம்.

முதிர்காம நறவருந்தி முகிற்கார்மர்க் குழலணங்கின் மோகத்தாலே
விதிர்காம வினைவிளைத்த வியன்காம னிகர்கண்டி வேந்தன்காதைக்
கதிர்காமச் சுரும்புமுர லருங்காம விரும்பொழில்வா னளவளாவுங்
கதிர்காம மருவுகுறக் கனிக்காமக் கந்தன்மலர்க்கழல்காப்பாமே.

## முதலங்கம். முதற்களம்.

இடம்—கண்டியில்—இராஜசபை.
காலம்—பகல்.
நிகழ்ச்சி—இராஜன் நகர்வளம் வினவுகிறான்.

### கண்டிராஜன் கடவுளைப்போற்றல்.

### எழுசீர் விருத்தம்.

சீர்தருவேதவேள்விகள் செழிக்கத்திங்கண்மும் மாரியேபொழியப்
பார்தரு முயிர்களின்புடன் வாழப்பகருமெண் ணான்கறம் பல்கப்
பேர்தரு செங்கோல்பிசகிலாதென்றும் பிரபலமடைந்தினிதோங்க
வார்தரு சிகர வரைக்கதிர்காம வள்ளிநா யகன்பதம் பணிவாம்.

## முதன்மந்திரி எலப்பளை, அரசனைப்போற்றல்.

### எழுசீர் விருத்தம்.

மருவளர் மாலை யணிபுயா சலனே மருவிலாச் சத்யவா சகனே
தருவள ரிந்த்ர போகவைபவனே சற்சன சமுகரஞ் சிதனே
செருவள ராமற் பகைவரைச் செயிக்குஞ் சீர்த்திசேர்கண்டிமா நகர்வாழ்
திருவளர் கீர்த்தி சிங்கமாராஜ தீரனே நின்பதம் போற்றி.

## இரண்டாவது மர்திரி முள்ளிக்கொடை,

## அரசனைப்போற்றல்.

### எழுசீர் விருத்தம்.

திண்டிறன் மன்னர் திறையளந் திறைஞ்சுஞ்
செம்மலே தஞ்சமென் றன்னை
யண்டினோர் தம்மை யாதரித் தருளு
மையனே மெய்யனே யடல்சே
ரெண்டிசை யணைத்து மிரும்புக ழோங்க
வினியசெங் கோலினைச் செலுத்துங்
கண்டிமா நகர்வாழ் காவலா நினது
கழலிணை தமியனேன் போற்றி.

## * திசைநாயகன் அரசனைப் போற்றல்.

### எழுசீர் விருத்தம்.

† முடுகியே வந்த தரியல ராவி
முடிவுற வெகுண்டெழு வுலகுங்
கிடுகிடென் றதிர வாக்ரமித் தெழுந்து
கெடிபெறுங் கொடியவெஞ் சமரிற்
கடுகவே சென்று ஜெயங்கொளு மரசே
கருதருங் கண்டிமா நகர்வாழ்
வடுகரா ஜேந்த்ர வள்ளலே நினது
மலரடி தமியனேன் போற்றி.

## கட்டியர், அரசனைப்போற்றல்.

### எழுசீர்ச் சந்தவிருத்தம்.

படியுளோர் புகழ்தீர பகைவர்போற் றிடுவீர
பருணிதர்க் கருளு தாரா

---

* சேனாபதிக்குத் திசைநாயகனென்ன வழங்குதல் அத்தேச வழக்கு.
† இதனை இருவர் இரண்டிரண்டடிகளாகப் பாடுக.

வடிவகுந் தரமார வதனசந் திரசில
மனின்மெல் லடிகள் போற்றி
முடிவிலா வருண்ஞான வொளியெனுங் கதிர்காம
முருகனைப் பணிகு ணாளா
நெடியவா ரிதிசூழு மினியகண் டியின்மேவு
நிருபனின் னடிகள் போற்றி.

---

## நடனமாதர் நடனம்.

அபிநயபதம்.

இந்துஸ்தானி பியாக் - ஆதி.

பல்லவி.

அணைய ஜாலமினி யாகுமோ வாகுமோ
அதிபதியேசுப குணநிதியே

சரணங்கள்.

இணையிலாச் சுகிர்த வின்பந்தரு மதனா
இனிய கருணைநிகழ் மலர் வதனா
மணிமகுட வரசர் புகழும் கன நிபுணா
மங்கள ரஞ்சித நய சுகுணா (அ)

மதன சரமெனது மார்பைத்துளைத் திடுதே
மனதி லதிகமயல் விளைந் திடுதே
மதுரக் கனிரசமும் பாலுங் கசந்திடுதே
வாவா வெனவுடல் பசந் திடுதே (அ)

தென்றற் புலியென்மேல் சினந்திதோ பாய்ந் திடுதே
திங்களு மனல்போலக் காய்ந் திடுதே
நன்றி யற்றகுயிலும் நடுங்கத் தொனித் திடுதே
நாயகாவிருப்பமுஞ் செனித்திடுதே (அ)

இராஜன் எலப்பனையை நாட்டுவளம் வினவுதல்.

எழுசீர் விருத்தம்.

பாரினைப் புரக்கும் நீதிதே ரோலப்
பனையெனு மந்திரியே கேளாய்
சீரியல் நமது நாட்டில்வாழ் மாந்தர்
சீவன சுகமும்விற் பனமார்

நேரியல் வணிகர் செய்யும்வர்த் தகமு
நிகரில்தே வாலயச் சிறப்பும்
மாரியின் வளமும் மற்றவை பவமு
மனமகிழ்ந் தெனக்குரை செய்வாய்.

வசனம்.

எலப்பனே * அதிகாரம்? நமது நாட்டுக்குடிகளின் சுகஷேமங்களெப்படி? வணிகர்கள் கிரமப்படி வர்த்தகஞ் செய்கிறார்களா? பற்பல தர்மங்களும் குறையாமல் நடந்துவருகின்றனவா? கண்டிமாநகரத்தில் ஒரு குறையுமில்லையென்று ஜனங்கள் சொல்லுகிறார்களா? நமக்குச்சேரவேண்டிய பகுதிப்பொருளைச் சரியாய்க் கட்டிவருகிறார்களா? எப்படியாவது பகுதிப்பொருளிற் கவனமிருக்கட்டும்.

மந்திரி எலப்பனே நகர்வளங் கூறல்.

சந்தச்சிந்து - ஆதி.

அதிபதி கேளும் நகர்வளம் யாவு
மன்பினு வந்துவி ளம்புவ னின்று
வருமறை யோதி விதிமுறை வேள்வி
யாரியர் செய்திட மாரிபொ ழிந்து
படியி லிலாவி தடமுத லேரி
பண்ணைக ளெங்கு நிறைந்து
பள்ளர்கள் சிந்தைம கிழ்ந்துசெ றிந்த
பால்முளை வீசிவி ளைந்தெழு செந்நெல்
வரையென வேய்ந்து வரகிறை யீந்து
வர்த்தவி ருந்துட னுண்டுபொ ருந்த
வியசிய ரென்று முயர்பொருள் கொண்டு
வாணிப மேபுரி வார்கள்சி றந்து
திறல்மிக வாழு மறிவின ரான
சிங்களர் சோனக ரெங்களு முண்டு
திகழும ருந்த திணைமிகர் கின்ற
தேன்மொழி மாதர்கள் மேவுவ ரின்பு

* மந்திரிகட்கு அதிகாரமென்று வழங்குதல் அத்தேச வழக்கு.

குவலய மெங்கு முள பலபண்ட
மும்வரு திங்கெழு கின்றம லிந்து
கொலைகள வாதி பவமினி யேது
கோளுரை யேதினி யோர்குறை யேது
இந்நக ரிந்திரநகர் போலுமே.

வசனம்.

மஹாராஜா! மகான்களுடைய சற்கிரியா தர்மவிசேடத்தினால் மாதமும்மாரிபொழிந்து நாடுசெழித்து எல்லோருக்குஞ் சுகமுண்டாய், நமக்கும் இறைப்பொருள் சரியாய்க் கட்டப்பட்டு வருகிறது. வைசியர் பல பண்டங்களும் நயவிலையாகவே விற்றுப் பொருளீட்டிச் சுகித்துவருகிறார்கள். நமது சுதேசிகளாகிய சிங்களபூமான்களும், சோனகச் சீமான்களும் எங்கும் நாளுக்குநாள் விருத்தியாகி யாதொரு குறையுமின்றி வாழ்ந்துவருகிறார்கள். அருந்ததிக்குச் சமானமான கற்புடைய ஸ்திரீகள் இல்லறதர்மத்தைக்கைக்கொண்டு சகல சுகங்களும் அநுபவித்து வருகிறார்கள். கொலைகளவு முதலிய பாதகங்களொன்றும் கிடையாது. நமது நகரை தேவேந்திரனுடைய அமராவதியென்றே சொல்லத்தகும் பிரபு.

அரசன் வசனம்.

சரி. எந்தவிதத்தும் இராச்சியம் நல்ல நிலைமையிற் குறையாதிருக்கும்படி நடத்திவருவதிற் கண்ணாயிருக்கவேண்டும். துரைத்தன காரியங்களில் இப்போது அதிகச் செலவுநேரிடுகிறது. வரிகளை இன்னும் உயர்த்தவேணுமென்று நினைக்கிறேன். உமது கருத்தென்ன.

எலப்பலைசொல் வசனம்.

மகாராஜாவுடைய கருத்தின்படியே நடக்கத் தடையில்லை. ஆனால் இப்பொழுது விதித்துள்ளவரிகளையே குடிகள் தாங்கத்தக்கதாயில்லையென்று முறையிடுகிறார்கள். அன்றியும் நீதியைக் கவனிக்கவில்லையென்றும் வதந்தி யுலாவுகிறது. இதற்கிடையில் வரியையு முயர்த்தினால் உசிதமாயிராதென்பது தான்.

அரசன் வசனம்.

குடிகள் அநேகம் சொல்வார்கள். அதைக் கவனித்து முடியுமா? நல்லது பிறகு யோசிப்போம்.

## இரண்டாங்களம்.

இடம்—எலப்பளை—அரண்மனை.
காலம்—மாலை.
நிகழ்ச்சி—குடிகள் முறையிடல்.

### குடிச்சனங்கள் வசனம்.

பிரபு? நமஸ்கரிக்கிறோம்.

### எலப்பளை வசனம்.

மகாஜனங்காள் க்ஷேமந்தானா? என்னவிஷயமாய் இங்கு வந்தீர்கள்.

### சிந்து.

ஐய என்ன சொல்வோம் நாங்கள் - நம
தரசன் செய்யுங்கொடுமை யுரைக்கப்போமோ
தூய்யசிவ பூசை மறந்தான் - நிதம்
சுத்தமான ஸ்நானபான முற்று மறந்தான்
தெய்வபத்தி தன்னை மறந்தான் - காமச்
சிந்தை கொண்டு சந்ததமு நொந்து மெலிந்தான்
பையரவு போல வெழுந்தான் - மது
பானமுண்டு ஞானம்விண்டு ஈனமடைந்தான்.
தன்சமூக ஏவலாளர் - சம்ம
சம்பளம்பெற் றுண்கிறாரென் றெண்ணி யிகழ்ந்தான்
தன்மநெறி யாவுங் கடந்தான் - பல
தையலர்மேல் மையல்கொண் டணைந்திட வந்தான்
வந்தணைந்த பேர்க்கிதமாய்த் - தங்கள்
மானம்விற்று நோயும்விற்கும் வேசையரோனும்
சுந்தரி மாரைப் புணர்ந்தான் - மனந்
தண்ணெனவே வியாதிபல நண்ணி மெலிந்தான்
பிரிமித் தனையென்றும் - நல்ல
போதிவு மந்திரியை யாருயிர்கொன்றான்
குடிவெறி யதனாலே - ஊரில்
குடிவரி போட்டுப்பொருள் பெறநினைத்தான்
சிறுபிழை செய்தோரை - ஐயோ
தேகத்தை யிருபிளவு தாகச்செய்கிறான்
பெரும்பழிக் கஞ்சாமல் - கண்ணைப்
பிடுங்கி மலைபிலுருட் டிடச்செய்கிறான்

இது மன்னர் முறைதானே - ராஜன்
  இப்படிக்குச் செய்வதற நெறிதானே
விதிமுறை யறியானே - இந்த
  வேந்த னமைச்சர்மொழி கேளானே
கதியென்ன வடைவானே - இரு
  கண்ணுங்கெட்டு மண்ணிலவன் தவிக்கானே
ஆண்டவன் சகிப்பானே - அர
  சன்று கொன்றால்தெய்வ நின்றுகொல்லாதோ
உற்றபெருங் குடியாலே - சற்றும்
  உன்னிப்பாரா மலேபாரிற் சின்னப்பேர் பெற்றான்
முற்றிலு முமக்கு ரைத்தோம் - இந்த
  மூர்க்கனுஞ்சன் மார்க்கமுற மார்க்கஞ்செய்குவீர் (ஐய)

வசனம்.

ஐயனே? ராஜபயத்தைக்கொண்ட எங்களுக்கு எப்படிச்சுகமுண்டாகும். மகராஜாசெய்கிற கொடுமைக் களவில்லை அவர் தம் ஆசாரத்தையும் மறந்தார். தெய்வபத்தியுமொழிந்தது. குடியுங் காமமுந்தான் அவருக்கு மிகுந்தது. குடித்து விட்டால் பாம்பு போலச் சீறி விழுகிறார். உத்தியோகஸ்தரை, சும்மா சம்பளம் வாங்கியுண்கிறாரென்று வைகிறார். தாசிவேசைகளுடைய பழக்கமே அதிகமாய்விட்டது. பிரிமித்தளையதிகாரத்தின் கதியே முன்பு அப்படியாய்விட்டால், எங்கள் கதி என்னாகும்? ஒருவர் ஒரு சிறுபிழை செய்தாலும் அவரைக் கடுந்தண்டனை விதிக்கிறார். எப்படி இந்த ராச்சியம் முன்னுக்குவரும்; எங்களுக்கு எப்படிச்சுகமுண்டாகும், தங்களிடம் முறையிட்டாலும் ஒரு நன்மை கிடைக்காதாவென்றுதான் முறையிடவந்தோம்.

ஏலப்பனை குடிகளுக்குச்சொல்

சந்த விருத்தம் - சாப்பு.

அன்பின்மிகுங் குடிகாள்நம தரசன்செயுந் துயர்தீர்த்திட
முன்பின்னுணர்ந் தாலோசனை முழுதும்புரிந் திடவேண்டுமே
என்சொற்படி நீங்கள்நடந் திடுவோமென விசைவீரெனில்
இன்புற்றிடும் வண்ணமுமக் கினிதேயினி யாம்செய்வமே.

வசனம்.

நீங்கள் சொல்வது சரிதான். எனக்குந் தெரிகிறது. என்ன செய்யலாம். திடீரென்று ஒன்றை எண்ணிப்பாராமற் செய்து

விடக்கூடாது. மேல்வருங் காரியாகாரியங்களை நன்றுயோசித்துத்தான் செய்யவேண்டும், அன்பர்காள்? அதற்காகவேண்டிய தந்த்ரோபாயங்களை நான் ஒருவனே செய்யச் சாத்தியமாகுமா? உங்கள் உதவியும் ஒற்றுமையு மிருந்தால்தான் முடியும். நீங்கள் என் சொற்படி நடப்பீர்களாயின் அரசனைத் திருத்திவிடலாம். உங்களுக்கும் நன்மை யுண்டு.

குடிகளிற் றலைவன் வசனம்,

பிரபு? தங்கள் கட்டளைப்படி நடக்கக் கடமைப்பட்டவர்களா யிருக்கிறோம். தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்.

எலப்பளை வசனம்,

நல்லது, இங்கு நாம் பேசிய ரகசியம் ரகசியமாகவே இருக்கட்டும் இது வெளிப்பட்டால் நமக்குத்தான் கேடாய் முடியும். ஜாக்கிரதை. இதைப்பற்றி இன்னொருசமயம் வாருங்கள்.

குடிச்சனங்கள்.

தெரியும், தெரியும், விடைபெற்றுக் கொள்கின்றோம்.

---

மூன்றுங்களம்.

இடம்—இராஜனரண்மனை.
காலம்—காலை.
நிகழ்ச்சி—ஏலப்பிளளை அரசன் கோபிக்கிறன்.

இராஜன் வசனம்,

மந்திரீ? என்காரியம். ஏதேனும் யோசிக்கவேண்டியதுண்டா! தனித்து இங்கே வந்ததைநோக்க அப்படித்தான் புலப்படுகிறது.

எலப்பளை

சந்த விருத்தம் - திசிரம்.

செகத்தி லுயர்ந்த குணத்திற் சிறந்த
திறத்தின் மிகுந்த மகிபனே
செழித்த புகழை விரித்த வுசித
செயங்கொள் சுகிர்த விபவனே
இகத்தி னமது குடிகட் கனர்த்தம்
விளைக்க மனத்தில் நினைத்திராம்
எவர்க்கு மிடுக்க ணியற்றி மகளி
ரினிய கற்பை யழித்திராம்

சுகத்தைக் கெடுக்க வரிகள் வகுத்துத்
துயரச் கொடுமை யிழைத்திராம்
தடுக்காய்ப் பெருந்தண் டனைகள் விதித்துத்
துடிக்க வுயிரை வதைத்திராம்
சகிக்க முடியா தெனவே பலருந்
தயங்கிப் பயந்து புலம்பினர்
தமியன் வேண்டு கோளுக் கிரங்கித்
தயவா யரசு புரிகவே.

வசனம்.

பிரபு! துரைத்தனகாரியங்களிற் சில அநீதியான வதந்தியுலாவுகிறதென்று, சமுகத்தில் முன்னும் அறிவித்திருக்கிறேன். நேற்று மாலையில் குடிகளுட் சிலர்வந்து குறை கூறினார்கள். குடிகட்குத் துன்பத்தைத் தரத்தக்க சிலகாரியங்கள் செய்யப்படுகின்றனவாம். நற்புடையா ரென்றும் பாராமல் திருநோக்கம் பலவிடத்துஞ் செல்லுகிறதாம். நூதனமாய் விதிக்கப்பட்டவரிகளால் அவர்களுக்குச்சுகமே யில்லையாம், குற்றத்திற்குத் தக்கதா யில்லாமல் தண்டனை மிகுந்து விட்டதாம். அஞ்சி நடுங்குகிறார்கள். பாவம், ஏழைகள்.

அரசன் ஏலப்பனைமேற் கோபிக்கிறான்.

சந்த விருத்தம் - ஆதி.

தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன-தனதான.

எனக்கு மந்திரி யெனமிகு புகழுற
யிருக்கு முன்றனெ டிவைபல மொழிசொலி
யெதிர்க்க வந்திடு மதிகெடு குடிகளின்— வலுவாலே

மனத்தி ரண்டக நினைவுட னெனையவ
மதித்து மிஞ்சிய தயிரிய மொடுமதி
வழுத்த வந்தனை யினியொரு தரமிதை—மொழிவாயேல்

சினத் தெழுந்தொரு கொடியினி லரிகொடு
சிரத்தி னுன்றலை துணிசெய்வ னினிவரு
தெவர்க்கு மஞ்சுவ னெனவுன துளமதி— னினையாதே

தனத்தில் மிஞ்சிய மமதையை விடுவிடு
க்ஷணத்தில் விட்டிவண் விலகிடு விலகிடு
சமர்த்த னென்றெதி ரனுகிலே யடவிது— சதுராமோ.

வசனம்.

ஏலப்பளே ? ஹா ஹா என்ன சொன்னாய், நான் செய்யும் அநீதியைத் திருத்தவந்தனையோ? அறிவில்லாத அற்பக் குடிகளின் பேச்சைக்கேட்டு என்னையு மதியாமல் என்னென்னவோகேட்க வந்துவிட்டனை? என்ன துணிவு. நான் செய்வது அநீதியா ? அதை இன்னொருகால் சொல்வாயாகில் நொடியில் உன்சிரசைத் துண் டித்து விடுவேன் இனி உனக்குத்துணையாய்ப் பகைவர் வரினும் அஞ்சேன். அஞ்சாமல்சொல்லவந்தாய்? என்னமமதை. சீசீ, என் னெதிரில் நிற்காதே போய்விடு.

ஏலப்பளே வசனம்.

பிரபு ? ஏழைமீது இப்படிக் கோபிக்கலாகாது. இங்கொன் றும் கள்ளமில்லை. இராஜசமுகத்தில் துரோக சிந்தையோடொன் றைச் சொல்லவருபவ னல்லவென்று சமுகம் என்னை நன்றாயறி யும். குடிகளுடைய முறைப்பாட்டையறிந்து கூறவந்தேனே யன்றி வேறில்லை. மன்னிக்கவேண்டும்.

அரசன் வசனம்.

ஏலப்பளே ? தாமே நினைத்துப்பாரும், நான் அவ்வளவுகொ டியனா ? என் குணம் தமக்கு நன்றாய்த்தெரியும். வரியை நானெ ன்ன அதிகமாக்கி வருத்தினேன். துரைத்தன காரியங்களுக்காக இவ்வருடத்திற்செலவு அதிகமாய் நேர்ந்ததும் உமக்குத்தெரியும். வரியை உயர்த்தாவிட்டால் இனி நடக்கவேண்டிய துரைத்தன காரியங்கள் எப்படி நடைபெறும். தண்டனைவிதிக்காவிடில் குடி கள் அடங்குவரோ ? வரியே யில்லையென்றுசொல்லி விட்டால் எங்கள் அரசனைப்போ லில்லையென்று புகழ்வார்கள். அது சா தியமான காரியமா ? யோசித்துப் பாரும்.

(ஏலப்பளே வ-ம்.) மகாராஜா சொல்வது சரிதான்.

ஏலப்பளே. சந்தவிருத்தம் - சாப்பு.

சப்ர காமத்த லத்தினி லுள்ளவர்
கப்பங் கட்டிட வில்லையென் காவலா
இப்போ தந்தவி றைப்பொருள் பெற்றிட
அப்ப திக்கனே ராள்விட வேண்டுமே.

அரசன். சந்தவிருத்தம்-அடதாளம்.

சீல சுகுணவு தாரனேயதி தீரனே திறல்சேர்
ஏலப் பலையதி காரனேயவ னேகியே விரைவாய்
கால விறைஞ்சி யேதரா ததோர் காரணம் வினவி
சால வுத்தர வாங்கி யேதவ றுமலே வருவாய்.

ஏலப்பலை. சந்தம் - அடதாளசாப்பு.

உமது சொற்படி யிறைவனே-உரிய வப்பதி யடைவனே
அமையு மிறைஞ்சி பெறுவனே-அதிகவிரைவினில் வருவனே.

(விடைபெற்றுச் சொல்கிறான்.)

---

நான்காங் களம்.

இடம்—ஏலப்பலை அரண்மனை.

காலம்—நண் பகல்.

நிகழ்ச்சி—ஏலப்பலையும் மனைவியும் சம்பாஷணை.

ப்ரியே? குடிகள் முறையிட்டதைப்பற்றி, நான் மகாராஜாவுக்குரைத்து நீதியைக் குறிப்பாயுணர்த்தினேன். அவர் என்மீது தன்பெயர்க்குத் தக்கவாறு கோபித்துக் கொண்டார். செங்கோலுக்குமுன் சங்கேதமாவென்று வந்துவிட்டேன்.

குமாரிஹாமி வசனம்.

நமக்கென்ன? நாமேன் பொல்லாப் படைய வேண்டும். அரசன், மந்திரிகள் சொல்லைக் கேட்டால் நன்மைதான். கேட்கிற வழியாயில்லையென்று தெரிந்தால், தாம் அதை விட்டுவிட வேண்டும். அரசர்களெல்லாம் முத்தங்கொடுக்கிறவர்கள்போல் முகத்தைக்கடிக்கிறவர்கள்.

ஏலப்பலை வசனம்.

அது சரியல்ல. அவர் இஷ்டப்படியே விட்டு விட்டால் காரியங்கெட்டுப்போகும். ஒருவேளை அவர் அறிவுமயங்கினாலும் பக்கத்திலிருக்கிற நாம் எடுத்துச்சொல்ல வேண்டுவது நமது கடமை. கடமைப்படி சொல்லிவிட்டேன். எப்படியாவது போகட்டும். பிரியே? இன்னொரு விஷயம் சொல்கிறேன்.

சந்தம் - ஆதிதாளம்.

மயிலே சுபமங் களசுந் தரமா
மணியே யொளிரென் னிருகண் மணியே

குயிலே குணரஞ் சிதமே நவிர்பைங்
குழலே எனதா ருயிருக் குயிரே
வயல்சூழ் தருசப் பிரகா மமதில்
வண்மைப் பகுதிப் பொருள்வந் திலையால்
சயமா யதுபெற் றிடவிப் பொழுதே
நான்போய் வருவேன் விடைநீ யருளே.

வசனம்.

கண்மணி? சப்ரகாமத்திலிருந்து சிலகாலமாய் பகுதிப்பொருள் வரவில்லை. அதை வாங்கிவரும்படி அரசனுத்தரவு செய்திருக்கிறார். நான் போ[illegible]ங்கிக்கொண்டு விரைவில் வந்துவிடுகிறேன். சயினியமும் சித்தமாயிற்று விடைகொடு.

குமாரிஹாமி

சந்தம் - ஆதிதாளம்.

அன்பு மிகுத்திடு மென்றுரையே
ஆசை விளைத்திடு மென்றுரையே
இன்ப மளித்திடு மென்னிறையே
என்னுயிர் தனைநிக ரென்னிறையே
நன்று யுகன்றனை யென்பதியே
நானிங் கிருக்கவோ வென்பதியே
சென்று வருவது மெப்பொழுதே
சீக்கிரம் போய்வர விப்பொழுதே.

வசனம்.

பிராணபதி! என்ன அப்படிச் சொல்லுகிறீர்களே? நான் தனித்து எப்படியிருப்பேன். ஆனாலும் மகாராஜாவுத்தரவுபடிப்போகாமலுமிருக்கப்படாது. போனால் எப்பொழுது வருவீர்களோ? சீக்கிரம் வந்துவிட வேணும்.

எலப்பலை வசனம்.

வாராமலென்ன. காரியமுடிந்தால் அங்கு தாமதிக்கமாட்டேன். உயிரிங்கும் உடலங்குந்தானே. இரஞ்சிதபூஷணி எங்கே.

(இரஞ்சிதபூஷணி வந்துநின்றாள்.)

(எலப்பலை) கண்ணி-சாமா-சாப்பு.

சகிர்தவிபவமுறும்-குண

தங்கமே ரஞ்சித பூஷணியே-அம்மா
இங்கித மாம்ருது பாஷிணியே

புகழும் நெறிதவறு-அம்மா
பொற்புள்ள ரஞ்சித பூஷணியே-பாரில்
கற்பின் மிகுத்தவி சேஷணியே

இறைவன் மொழிப்படியே-நானும்
இன்றே சப்ரகாமம் போரே னம்மா-அங்கே
சென்றேகப்பம் பெற்று வாரே னம்மா

உன்றன் தமக்கையொடும்-பால
ரோடும் விளையாடிக்கொண் டிரம்மா-மனம்
வாடிடா மல் மகிழ்வா யிரம்மா

சகிமார் தமை விடுத்து-எங்கும்
தனியாகநீ போக லாகா தம்மா-ஊருக்
கினிதாக நான்சென்று வாரே னம்மா.

வசனம்.

இரஞ்சிதபூஷணி! சப்ரகாமப் பகுதிப்பணம் சிலநாளாய் வரவில்லை. அதைவாங்கி வரும்படி அரசனுத்தரவு. நான்போய் சீக்கிரம் வந்துவிடுகிறேன். பிள்ளைகளுடன் பத்திரமாய் விளையாடிக் கொண்டிரு. தோழிகளில்லாமல் தனியே தோட்டத்திற்குப் போகாதே. நீ புத்திசாலி. உனக்கு நான்சொல்லவேண்டுமா?

(இரஞ்சிதபூஷணி) சந்தவிருத்தம்-ஆதிதாளம்.

அத்தா னெனதா ருயிருக் குயிரே
யறிவாசரமே புவன தரமே
கொத்தா ரணிதிண் புயபூ தரனே
குணமா மணியே வரசுக் கனியே
எத்தாய் பகுதிப் பொருள்பெற் றினிதா
யிவண்வந் திடுவீர் விரைவாய் விரைவாய்
முத்தார் மொழியின் மனையா ளுடனே
முறையா யுறைவேன் நீர்போய் வருவீர்.

வசனம்.

அத்தான்? தங்கள் சொற்படியே நடக்கிறேன். நீங்கள் மாத்திரம் சீக்கிரம் வந்துவிடவேணும்.

(ஏலப்பிள்ளை) கட்டளைக்கலிப்பா.

[illegible]ன்னி னஞ்சிறை யன்னமே மென்மொழிப்
பூவையேகிளி யேயளியேபுகழ்

என்னருந் துணையே இணையேயிலா
யென்கண் மாமணியே மணியேதிகழ்
கன்னியுன் தங்கை சின்னஞ்சி றியவள்
கைவி டாமலே காத்திடு வாய் நம
துன்ன ருந்தவ மைந்தரையும் பண்பா
யுபச ரித்திடு நான்போய் வருகிறேன்.

வசனம்.

பிரியே! உன்தங்கை இரஞ்சிதபூஷணி ஒன்றுமறியாதபெண். ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள், வெளியில் எங்கும் போக விடாதே, பிள்ளைகளையும் கவனமாய்ப்பார் நான் போய் வருகிறேன்.

---

ஐந்தாங் களம்.

இடம்—எலப்பளை அரண்மனை.
காலம்—மாலை.
நிகழ்ச்சி—இரஞ்சிதபூஷணி தோழிகளுடன் சம்பாஷிக்கிறாள்.

இரஞ்சிதபூஷணி

கட்டளைக்கலிப்பா.

பாலைத் தேனைநற் பாகை யமுதினைப்
பழித்த மென்மொழிப் பாங்கியரே யின்று
காலைப் போதுக ழிந்திட வம்மனை
கழங்கு மாடிக்க ளித்தனம் வாசப்பூஞ்
சோலைக் குட்சென்று நாமும்வி நோதமாய்ச்
சுற்றிப் பார்த்து மலர்கள்ப றித்திந்த
மாலைப் போதுக ழிப்போ முலாசமாய்
வருவி ரென்ற னுடனினி தாகவே.

வசனம்.

சகிகாள்! இதுவரையுந்தான் பந்தாடினோமே, மாலைப்போதும் வந்து விட்டது வாருங்கள் பூஞ்சோலைக்குப்போய் நல்லபுட்பங்கள் பறித்து அந்திநேரத்தை அங்கே உல்லாச[illegible]கக்கழித்து வரலாம்.

தோழிகள் சந்த விருத்தம்.

ஆதிதாளம்.

செந்திரு வுஞ்சசி யும்ரதி யும்புகழ் திருமேனி
சுந்தர ரஞ்சித பூஷணி யாமெங் தோகாய்நீ
நந்தவ னம்போ யுன்னத மியாவும் நனிகண்டு
வந்திடு வோமென் றுன்னிய வண்ணம் வருவாயே.

வசனம்.

இரஞ்சிதபூஷணீ! நந்தவனம் காண்பதற்குத் தடையென்ன போய்வரலாம். உன்னுடைய விருப்பப்படி நாங்களும் வருகிறோம் புறப்படு.

ஐந்தாங் களம்.

இடம்—ஏலப்பளை நந்தவனம்.

நிகழ்ச்சி—மூவரும்புட்பம்பறித்தல்.

இரஞ்சிதபூஷணி கண்ணி.

வராளி - ரூபகம்.

மலர்பறிப்போம் வாரீர் தோழி மார்களே யின்று
மாசிலாப்பூங்காவனத்தில் மகிழுடன் சென்று

தோழிகள்.

ரஞ்சிதபூ ஷணியேயப ரஞ்சியே நாமே
வஞ்சமின்றி யும்முடனே மலர்பறிப் போமே

இரஞ்சிதபூஷணி.

அன்னநடை சின்னவிடை யானந்த வல்லி
உன்னதமாய் மலர்ந்திருக்கு தோர் கொடி மல்லி

வசனம்.

சகி ஆனந்தவல்லி? அதோ ஒரு கொடிமல்லி பூத்திருக்கிறது பார், என்ன அழகு என்னமணம்.

ஆனந்தவல்லி.

கொஞ்சுமொழி யஞ்சுகமே கோகிலமே சீர்
விஞ்சுமுல்லை மலரின்மணம் வீசுதுநீ பார்

வசனம்.

அந்த மணமென்ன இந்தமுல்லையைப்பார், அதைவிட மணம் கமகமவென்று வீசுகிறது.

இரஞ்சிதபூஷணி.

சித்தசனை யெத்தும்விழி திகழும்வன ஜாக்ஷி
செவ்வலரி சண்பகமும் என்னகண் காக்ஷி

வசனம்.

அடீ வனஜாக்ஷி? இந்த சண்பகமலரைப் பார், எவ்வளவு கண்காக்ஷியா யிருக்கிறதடீ.

வனஜாக்ஷி.

பெண்ணுக்குப்பெண்ணாசைகொள்ளும் பேழில் மானே
புன்னைநறுங்கொன்றைபல புட்பங்கொய் தேனே,

வசனம்.

நானொரு கொன்றைமலர் பறித்தேன் அதன் அழகையும் வாசனையையும் பார்.

---

வேறுக் கண்ணி-முகாரி-ரூபகம்.

வனஜாக்ஷி.

சேனுலாவிய லோசனீயென்றன் தேவிரஞ்சிதபூ ஷணி
மானுலாமிருள் வந்ததேமதி வருமெவாரும்பொவோ மினி

வசனம்.

இரஞ்சிதபூஷணீ, பொழுதுபோய் விட்டது, இருள் வந்து விட்டது வீட்டிற்குப் போகவேண்டாமா, சந்திரோதயமாகப்போகிறது புறப்படுங்கள்.

இரஞ்சிதபூஷணி.

வேலுலாம்வன ஜாக்ஷியேயிங்கு வீற்றிருக்கிலென் தாக்ஷியே
பாலைப்போல்மதி காயுமிக்கணம் பாரடியதன் மாக்ஷியே

வசனம்.

வனஜாக்ஷீ, என்ன அவசரப்படுகிறாய், இங்கிருந்தால் என்ன மோசம், பகலைப்போல நிலவெறிக்கப் போகிறது. அந்த நிலவிற்கும் நாமிங்கே விளையாடுவதற்கும் எவ்வளவு மனோல்லாசமாயிருக்கும் இதற்குள்ளென்ன அவசரம்.

ஆனந்தவல்லி.

சரசரஞ்சித பூஷணியின்ப சம்பிரமுறு பாஷிணி
இரவுமாச்சுதிங் கிருப்பதுநீது எம்முடன்வரு வாமினி.

வசனம்.

கண்மணீ? நீ தெரியாமையாற் பேசுகிறாய். இரவில் நாமிங்கிருப்பது சரியல்ல. போவோம் வா.

இரஞ்சிதபூஷணி.

சுரதவின்சுகச் சொல்லியே யென்றன் தோழியானந்த வல்லியே
மருமலர்ப்பொழில் தன்னைவிட்டுநான் வந்திடமன மில்லையே

வசனம்,

அடீ ஆனந்தவல்லி? இந்தச் சோலையைவிட்டு வர எனக்கு மனமில்லையே.

{ கீர்த்திசிங்கமஹாராஜன் உலாவருகிறான் }
{ இரஞ்சிதபூஷணியை நந்தவனத்திற் காண்கிறான். }

அரசன் சொர்சகம்.

பாரோ மகவான் பதியோபொற் பங்க யத்தோன்
ஊரோ திருமா லுலகோ வுலைவறுதெண்
ணீரோ நன்னகை நிலமோ வறிந்திலனே
ஏரோர் வடிவா யிலகு மிவள் வாழிடமே.

வசனம்.

ஆஹா, இவள் யார். நாம் எப்பொழுதும் எங்குங்காணாத பேரழகியாயிருக்கிறாள் மானிடஸ்திரீயோ, இந்திராணியோ, சரஸ்வதியோ, இலக்ஷ்மியோ, நீரமகளோ, நாககன்னிகையோ, யாரோ தெரியவில்லை.

சிந்து.

ஊர்வசியேயிவள் தானோ
ரம்பை தானோ
ரதி தானோ—பிரமன்
உலகைவெல்லப்படைத்தானோ—இவள்
ஊர்தானெது பேர்தா னெது
யார்தானறிவார்தா னிது
உன்னதமாகவேவவர் தான்—காதற்
சன்னதம்யானுறத்தந்தாள்

வசனம்.

இவள் என் அறிவை மயக்கவந்த ஊர்வசியோ, ரம்பையோ, ரதியோ, உலகில் என்னைப்போன்ற காளையரை வெல்லும்படி கருதிப் பிரமன்இவளைப்படைத்தானே! இவள் ஊரும் பேரு மின்னதென்று தெரியவில்லை. எனக்குக் காதலைத்தரிந்து, என்ன மகோன்னதமாய் நிற்கிறாள்.

கொஞ்சுஞ்சகிமார்கள்கூடி
வணம்நாடி
விளையாடி—சோகங்
கொண்டிருக்கின்றாளோ வாடி—இடை
கொடிபோலசைந் திடவேயன
நடையாமென நடந்தே மனங்
கூசியே யிங்கொளிக் கின்றாள்—ஒன்றும்
பேசாமடைந்தைபோல்நின்றாள்

வசனம்.

தோழிகளோடு விளையாடிக் களைத்தவள்போல் காண்கிறாள், தன் மெல்லிய இடைமுறியும்படி அன்னம்போல்நடந்து ஒதுங்குகிறாள். கூசியொளிக்கிறாள், பேசாமடந்தையைப்போலிருக்கிறாள், இவள் முகவிலாசத்தைக் கண்டு என் கண்களின்புற்றதுபோல, இனிய மொழியைக்கேட்டு என்காது மின்பமடையக்கூடாதா?

அன்புடன்யாரென்றுகேட்போம்
பேரைக்கேட்போம்
ஊரைக்கேட்போம்—நம்மேல்
ஆசையுண்டோவென்று பார்ப்போம்—முக
வழகும்இடை யழகும் உடை
யழகும்நடை யழகும் மெனை
அல்லற்படுத்துதென் செய்வேன்—மனக்
கல்லுமுருகுதெங் குய்வேன்

வசனம்.

இவளை, நீயார் உன் ஊரென்ன பேரென்னவென்று விசாரித்தால் அவளுக்கு நம்மீது அன்பு உண்டு இல்லையென்று தெரிந்துகொள்ளலாம். ஆஹா! என்னமுகம், என்னரூபம், என்னஇடை, என்னஉடை, என்னநடை, என்னைத் துன்பப்படுத்தவென்றே இவ

ளுக்கு இந்த அழகமைந்ததோ. இவளைக்கண்டாற் கல்லுமுருகு மே; யார்தானிவளைக் கண்டு மயங்காதார்?

கலித்துறை.

பார்த்தாலுங் காதற் பசிபோம்பக் கத்திற் பரிந்திருக்கச்
சேர்த்தாலு மின்பஞ் செனித்தெழு மேசெழும் பொன்னுருக்கி
வார்த்தாலனைய திருவனை யாள்செழு மாமணிச்செஞ்
சீர்த்தாமரைத்தாள் பணிந்தாலு மென்னெண்ணஞ் சித்திக்குமே.

வசனம்.

இவளைப் பார்த்துக்கொண்டே யிருந்தாலும் பசியடங்கும் இவளைச் சுகிப்பதைவிடப் பேரின்பமும்வேறுண்டா?

ஓரடித்தரு-மோகனம்-ஆதி.

பல்லவி.

சீதமதிவதன சிங்காரமடமாது
சேர்வாளோ தெரியாது

அநுபல்லவி.

மாதர்க் கரசி யிவள் வலியவென் முன் வந்தாள்
மனது முருகிப்பர வசமுற மையல் தந்தாள்
மஞ்சுல வும்மலர் நந்தவ னந்தனில்
வஞ்சியர் தம்மோடு கொஞ்சியு வந்தெழில்
மயில்போ லொயிலாய் மயங்கி நிற்கிறாள்
கயல்நேர் விழியால் கடைக்க ணிக்கிறாள் (சீத)

சரணம்.

காமன்கணைகள் மேவுதே—செங்
கழைவில்லேந்திய (கா)
கனிமொழி யிரதியோ டனவர தமுமன
மினிதொடு மிகவனு பவசுக முறுகன (கா)
கதித்த புலனையு மொடுக்கி விழியிணை
புதைத்த ரியகிலை யிருத்து சுழிமுனை
கண்ட யோகியர் தஞ் சிந்தையு மயங்கிமெல்லக்
கொண்ட யோகமுங்க லைந்திடச்செய் திடவல்ல
காமன் கணைகள் மேவுதே—தென்றல்
கடும்புலி போலு லாவுதே
சோம னனலைத் தூவுதே—இந்த
சோலைக் குயிலுங் கூவுதே

தாமதஞ் செய்தாலுயிர் தாளுமோ தாளாதே
தழுவா விடிலவள்பால் சார்ந்தமன மீளாதே
சரசி யெனக்கினிய வரசி யெனச்சொ லிவள்
பருவத் திருவைநிக ருருவத் திருவழகைப்
பார்த்துப் பார்த்தரிய விழிவரியி னலருந்திப்
பூத்துக் காய்த்தமலர் வனவீதி லேபொருந்திப்
பலவின் கனிமாங் கனிசெங் கதலிக்
கனிபைங் கழையின் ரசமும் விரவிப்
பனித்த கடலெழு மமுதமுங் கலந்து
லினித்த தெனவென தகமகிழ் நிறைந்து
பண்புட னின்பநு கர்ந்துமெய் மறந்து
நண்புட னன்புமி குந்திட வியந்து
பார்புகழ் சிவசண்முகன் சீரருளி தாருமென
யாவரு முவந்திடவென் னேரில்வந்தி டுமோகன (சீத)

வசனம்.

சந்த்ரவதன செளந்தரியாகிய இவள் நமக்குவசமாவாளோ? புதையலெடுத்தத்திரவியம்போல வலியவந்து என் கண்ணுக்கு இன்பமளித்த இம்மங்கையர்க்கரசி, என்மனதையுருக்கிப் பரவசப்படுத்திவிட்டுத் தான் தோழியரோடு ஒய்யாரமாக வுலாவிக்கொண்டு யாரையோ கண்டு மயங்கினவள்போல் நிற்கிறாளே! என்னைக்கண்டு தான், என்னைப்போல் அவளும் மயங்கினாளோ? அவள் பார்க்கும் கடைக்கண்பார்வை என்மீதுதானே வந்துவிழுகிறது. என்னைத்தான் பார்த்து மயங்கிநிற்கிறாள். மன்மதனுடைய வலிமையே வலிமை. என்னபாடு படுத்துகிறான்! ஐம்புலப்பகையைவென்று துரியநடுவில் விழியைச்சொருகி அறிவுமயமாய் நிற்கும் மகாயோகீஸ்வரர்களையும் விடாதவனா என்னைச் சும்மாவிடுவான் இவளை முன்காட்டி அவன்படுத்தும்பாடுபோதாமல் போதாக்குறைக்குத் தென்றற்காற்றென்றுவந்து புலிபோலே பாய்கிறதே. என்னைவெல்லச்சந்திரன் ஒருவனா! மன்மதனார்க்கு இவைகள்போதாதா? குபிர்சத்தத்தை விடுத்துமா என்னை வருத்தவேண்டும். ஏதேது இனித் தாளாது, இவளை ஒருமுறை கட்டியணைர்தாலொழிய மயக்கந்தீராது. ஆஹா இந்தச் சரசியை லீலாவினோதஞ்செய்து அனுபவிக்காவிடில் என்னுயிர் நிற்காது.

சந்தவிருத்தம்.

அடதாளசாப்பு.

வடஞ்சுமந்த தனஞ்சுமந்த மருங்குலொசிந் திடநடந்து
படஞ்சுமந்த வணிநிறைந்த ரதஞ்சுமந்து பசுங்கலப
நடஞ்சுமந்த மயில்பிறந்த நலஞ்சுமந்த பதியெதுமா
னிடஞ்சுமந்த தெவர்மயங்க வேவர்தியங்க வோநெடிதே.

வசனம்.

என்ன அழகி! இரத்தினப்பொன்னாபரணங்களைத் தரித்துச் சுமந்த இடைமுறியத்தளர்ந்து நடந்து செல்லும்பச்சைப்பசுங்கலாபி நடனமயிலேபோல் நிற்கின்றாள் இவளுடைய திவ்யஸ்தலம் யாதோ. இவ்வினிய அழகைத்தாங்கி யாரைமயக்கப்பிறந்தாளோ? யாரைவருத்தவந்தாளோ தெரியவில்லை. முள்ளிக்கொடை அதிகாரம்? இவள் உமக்குத்தெரியுமா?

முள்ளிக்கொடை சந்தவிருத்தம்.

தருமத் துரையெனு முயர்விற பனகுண ஜயபூபா
பிரிமித் தளவையி னொருமைத் தவமது பிசகாதே
யருமைத் திருவென வுலகுற் றனளிவ ளணியாருங்
கருமத் திருமண மிலைகற் பியல்மிகு கனிதானே.

வசனம்.

மகாராஜா? இந்தப்பெண் பிரிமித்தலையின் அருந்தவப்புதல்வி. இன்னும் விவாகம் நடக்கவில்லை. மகாபுனிதவதி. கற்புக்கனியென்றே இவளைச் சொல்லவேண்டும்.

அரசன் கலித்துறை.

கன்னலுந் தேனுங் கனியின் ரசமுங்கற் கண்டேனே
இன்சுவைப் பாகுங் குழைத்துண்ணநாவிற் கினிமைதரும்
அன்பிற் கினியவிப் பெண்ணமு தக்கண்ட யார்க்குமவ
ரென்புறு மூனு முடலுமுயிரு மினித்திடுமே.

வசனம்.

முள்ளிக்கொடை. கரும்புந், தேனுங், கனியின்ரசமும், கற்கண்டும், பாகும், எவ்வளவு சுவையாயிருந்தாலும் உண்டபின் நாவிற்குத்தானே சுவையைத்தரும். இப்பெண்ணமுதம், கண்டமாத்திரத்தில் எப்படிப்பட்டவர்க்குமென்பும் ஊனும் உயிரும் இனித்திடும். இப்பெண்ணமுதிற்குமுன் தேவாமுதமென்னத்திற்கு.

இதுவும் அரசன்சொல்.

கலித்துறை.

அல்லெனுந் தேரு மணிநுதல் வில்லுங்கண் ணம்புமிக
வெல்லும்விறற்றுணை யானையு மெல்லியர் சேனையொடுங்
கொல்லுங்குயிற்குரற்காளமுங்கிண்கிணிப்பேரியுங்கொண்
டெல்லுண்குழலியென்முன்னேசமரிற்கெழுந்தனளே.

வசனம்.

அல்லென்னுந் தேருடன், நுதல்வில்லைத்தாங்கிக், கண்ணம்பையேவி, துணையானைமுற்புகத் தோழியர்சேனை தன்னைச்சூழக் குயிலோசைகாளமாகவும், கிண்கிணிச்சத்தம் பேரிகையாகவுமொலிக்க, இக்கூந்தலழகி என்சத்துருவைப்போல் என்னுயிரைவருத்த இங்கே என்முன் வந்தனளே! நான் என்னசெய்வேன்! முள்ளிக்கொடை? வாரும் போகலாம்.

---

ஆறங்களம்.

இடம்—இராஜன் அரண்மனை.

காலம்—இரவு.

நிகழ்ச்சி—இராஜனும் இராணியும் சம்பாஷணை.

கொச்சகம்.

கண்ணுங் கருத்துங் களிக்கவருங் காதலரே
உண்ணும் உணவும் வெறுத்தே யுறங்காமல்
பண்ணுந் துறந்து படுத்துநெடு மூச்செறிந்தீர்
எண்ணமறியே னெனக் கறியச்சொல்வீரே.

வசனம்.

பிராணேசா, என்ன இன்னும் படுத்திருக்கிறீர்கள். நித்திரை செய்யவுங்காணேன். போஜனவேளையாயிற்று. ஏதோ ஒருஎண்ணத்தோ டிருக்கிறீர்களென்று காண்கிறது. பெருமூச்சுவிடுகிறீர்கள். என்னகிலேசம்? எனக்குச் சொல்லலாகாதா.

இராஜன் கொச்சகம்.

கண்ணுங் கருத்துங் களிக்கவரு காதலியே
உண்ணும் உணவு வெறுத்தவிதம் யானுரைப்பேன்
நண்ணும் புரவியினில் நான்பவனிவந்தமையால்
வண்ணத்திருமேனி வாடி மெலிந்தனனே.

வசனம்.

பிரியை? விசேஷமொன்றுமில்லை. வீதியுலாப்போய்வந்த அயர்ச்சியேயன்றி வேறொன்றுமில்லை.

இராணி-கண்ணி.

பொய்வார்த்தை சொல்லாதீர் நாதா-பாரில்
புருடர்மனந் தெரி யாதா

இராஜன்.

பொய்யல்ல குதிரைச்ச வாரி-நான்
போனது மெய்யேயென் பாரி

இராணி.

காமவினைவுன் னகத்தில்-வரக்
காணு தருவே முகத்தில்

இராஜன்.

பேதையேவொன்றும் பேசாதே-மனம்
பேதித்தேனீ யேசாதே

இராணி.

உத்தமரே யிரு வோரும்-அன்னம்
உண்டுசுகிக்கலாம் வாரும்

இராஜன்.

தூக்கமும் ஏக்கமுந் தீர-சற்றே
தூங்கிவாறேன் பசியார

அரசன்-வ-ம்-சேவகா திசைநாயகனை அழைத்துவா.

திசைநாயகன், சந்தவிருத்தம்.
ஆதி தாளம்.

கேடிலாத நீதிவாய்ந்த கீர்த்திசிங்க பூபனே
வாடுகின்ற சிந்தையின் மலர்முகம் புலர்வதேன்
நாடியென்னை வரவழைத்த நல்லசெய்தி யோர்கிலேன்
ஓடிவந்தே னோடிவந்தே னுற்றதென்ன கூறுவீர்.

மகாராஜா? என்ன, திருமுகம் வாடியிருக்கின்றது. அடியேனத் தருவித்தவிதம் தெரியவில்லை. உத்தரவுக் கெதிர் பார்த்திருக்கிறேன்.

இராஜன் சந்தவிருத்தம்.

அடதாளசாப்பு.

திரல்மேவு மதிகார நிலைதேரு திருவாக திசைநாயகா
உரமேவுநமதூரி லேதுவேனுமொருசேதி யுளதோசொலாய்

திசைநாயகன் ஷெ சந்தம்.

கதிர்காம வடிவேல னருள்மேவு சுகுணாள கனநாயகா
இதுகால நமதூரில் நிகழ்சேதி யறியேனி யானில்லையே

வசனம்.

மகாராசா, நான் ஊரிலில்லை விசேஷமும் ஒன்றும் புலப்பட வில்லை,

அரசன்.

கலிவெண்பா-கீலாம்பரி.

சீரார்ந் திலகுந் திசைநா யகனேநற்
பேரார்ந் திலகும் பெருந்தகையே—நீரார்ந்த
நெஞ்சினே னந்தோ நெடுங்காம பாணத்திற்
கஞ்சினே னோர்பெண்ணி னாசையால்—மிஞ்சியே
கூறுவே னேற்றுக் குதிரைச் சவாரிசென்று
ஊரெலாஞ் சுற்றி யுலாவிவரும்—நேரமதில்
நந்தவனந் தன்னில் நடனமயில் போலநந்தம்
பைந்தொடிமார் சூழவொரு பாவையாள்—வந்திருந்தாள்
கண்டேன் களிகூர்ந்தேன் காத லெனுநறவ
முண்டேன் மூருண்டே னுருகினேன்—அண்டையிற்போய்
நின்றேன் நெடுநேரம் நேசியவள் பேசாமற்
சென்றாள் மறைந்தாள் தியங்கியுடல்—குன்றிமனங்
கன்றிமுள் ளிக்கொடையைக் கன்னி யிவ ளாரென்றேன்
சென்றபிரி மித்தனைவைச் செல்வியென்றாள்—அன்றுமுதல்
உண்ணேன் உறங்கேன் உடுக்கேன் உடல்மெலிந்தேன்
எண்ணாத வெண்ணமெலா மெண்ணினேன்—வண்ணமலர்
வல்லி யவளழகை வர்ணிக்க வேண்டுமென்றாற்
புல்லியவென் னாவொன்று போதாதே—வல்லமையால்
மங்கை தனைச்சுகிக்கு மார்க்க மதைவிரைந்து
இங்கெனக்குச் சொல்வா யிசைந்து

வசனம்,

திசைநாயகா ? நேற்றுமாலையில் குதிரைமேல் உலாப்போனேன். அங்கே ஒரு பெண்மணி நின்றாள். அவளழகை நான் எப்படி சிறப்பித்துச்சொல்வேன். ஒருபூஞ்சோலையில் தோழிமார்கள் சூழ மயிலைப்போல்நின்ற அவளைக்கண்டு, நான் மயங்கினேன் கனிகூர்ந்தேனென்றால் அதைக்காணாத உமக்கு என்வார்த்தை அவ்வளவு சுவையாயிராது. அவளருகிற்சென்று நெடுநேரம்நின்றேன். அவள் ஒருவார்த்தையும் பேசவில்லை. கொஞ்சநேரத்தில் எங்கேயோபோய் மறைந்துவிட்டாள். அவள் யாரென்று முள்ளிக்கொடையைக்கேட்டேன். பிரிமித்தனையின் மகளென்று அவர்சொன்னார். அதுமுதல் எனக்கு உண்ணமனமில்லை. உறக்கம்வரவில்லை. என்னென்னவோ எண்ணமுண்டாகிறது எப்படி அவளை இசையச்செய்யலாம், எனக்கொன்றுந் தோற்றவில்லை.

திசைநாயகன்.

கண்ணி.

சுத்தசாமா-ஆதி.

கீர்த்திசிங்க பூபதியே நாளும்
கேடானபழிவந்தூறு மென்சொல்லைக் கேளும்
எலப்பனையிதையறிந்தால் துன்பம்
எய்தும்வேண்டா மிதனால்வரு மின்பமோகிற் றின்பம்
எலப்பனை மைத்துனியம் மாது
ஏற்காதிது நீதியல்ல இச்சித்தல் தகாது
கொண்டமனை யாளிருக்க விந்த
குற்றமான செய்கைவேண்டாம் விட்டுவிடு மூந்த

வசனம்,

தங்களுக்கு நான் என்ன சொல்லப்போகிறேன். கொண்டஎண்ணம் அவ்வளவு சரியல்லவென்று நினைக்கிறேன். வீணானபழி வந்துசேரும். அவள் நல்லகுணவதி. எலப்பனையின் மைத்துனி. அவருக்குத்தெரிந்தால் கௌரவக்குறைவும் மனவருத்தமுமுண்டாகும். மகாராணியவர்களிருக்க மற்றப்பெண்களை இச்சிப்பது தங்கட்குத் தகுதியல்ல. நாமே குற்றத்திற் கிடம்வைத்துக்கொண்டால், நமதுதேசமுழுதுங் குற்றமயமாகிக்கெடும். தாங்கள் தயவுசெய்து அந்த இச்சையை விட்டுவிடவேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரசன் சந்தவிருத்தம்.

அடதாளசாப்பு.

வடிவானமார னலர்வாளிவந்தெ னுரமேபுகுந்த வழியே
குடிபோகுதாவி யினியேதுபாவி கொடுவேதை யின்றுசகியேன்
அடியோடுவேகு மனல்போலளாவி யுடல்வேகு திந்தவுலகின்
முடிவானகால மிதுவாகுமீள முடியாது கன்மவினையே.

வசனம்.

திசைநாயகா? நீர்சொல்லுவது உண்மையென்றாலும் அவளாலே நான்படுந்துன்பத்தால் என் உயிர்போகுதே! என் தேகமெல்லாம் காமாக்கினியால் வேகுதே! நானவளைக்கூடாவிடில் என்னுயிர் நில்க்காது. இதுதான் முடிவுகாலமென்று நினையும்.

திசைநாயகன் சந்தவிருத்தம்.

சாப்புதாளம்.

மாதின் மேல்மய லாகிவ ருந்துமென் மன்னனே
ஏதுகூறினும் நான்வின வேனினி யென்கிறீர்
தீதி லாவவள் சிந்தைக்கு றிப்பைத்தெ ரிந்திடத்
தூது நாம்விடுத் தேயறி வோமவள் சூழ்ச்சியே.

வசனம்.

நான் எவ்வளவுசொல்லியும் தாங்கள் கேட்கவில்லை. தங்களிஷ்டம் அப்படியானால் தூதரையனுப்பி அவளுடைய கருத்தையறிந்து வரச்சொல்லிப் பார்க்கலாம்.

திசைநாயகன், சந்தவிருத்தம்.

திசிரம்.

சொந்தமான காரியம்போல் துணைவர்காரி யங்களைச்
சூழ்ச்சியாய் முடிக்கவல்ல தேர்ச்சியான தூதர்காள்
விந்தைசேரு நமதுமன்னன் ரஞ்சிதப்பெ ண்ணொளனும்
விற்பனஞ்சேர் கன்னிமீது மிக்கமையல் கொண்டுதன்
சிந்தைநொந்து வந்தயர்ந்த செய்தியைநீ ரின்றுபோய்
தேன்மொழிக்கு மனமிரங்கச் செவ்வையாகக் கூறியே
அந்தமாது சம்மதிக்க வநந்தமான போதனை
அன்புடன்பு கன்றியாவு மிங்குவந்து சொல்லுவீர்.

வசனம்.

தூதர்காள்? நான் சொல்லப்போகிற நமது அரசனுடைய காரியங்களை உங்களுக் குரித்தானதாயெண்ணி வெகுதந்திரமாய் முடிக்கவேணும். ஏலப்பளை அதிகாரத்தின் மைத்துனியான இரஞ்சிதபூஷணியைக்கண்டு அரசன் சவாரிவருந்தருணத்தில் நந்தவனத்தில் உம்மைக்கண்டதுமுதல் இச்சைகொண்டவராய் உண்ணாமலும் உறங்காமலும் வருந்துகிறார் இந்தச்செய்தியை உமக்குஅறிவித்து, கருத்தை அறிந்துவரும்படி எங்களை அனுப்பினாரென்று சொல்லி அவள் சம்மதியைக் கேட்டுவாருங்கள்.

தூதர் சந்தம்.

சொன்னதுபோலவே தோகையைக்கண்டு
மன்னவனடையு மனத்துயர்தீர
நன்னயமாக நங்கைசம்மதிக்கப்
பண்ணுவோம்சூழ்ச்சி பார்த்திபாவின்றே.

வசனம்.

ஐயா? தாங்கள் சொல்லியவண்ணம் அந்த மாதுசிரோமணியைக்கண்டு அரசனடையும் துன்பம்நீங்க எங்களுடைய தந்திரோபாயங்களாற் பலவிதமாய்ப் போதித்து இணங்கும்படியான மார்க்கஞ் செய்துவருகிறோம்.

---

ஏழாங்களம்.

இடம்—ஏலப்பளை அரண்மனை.

காலம்—அதிகாலை.

நிகழ்ச்சி—தூதுவர்க்கும் இரஞ்சிதபூஷணிக்கும் தர்க்கம்.

தூதர் வசனம்.

அம்மா? இரஞ்சிதபூஷணி அம்மாளைக்காண அரசனிடத்தி லிருந்து வந்தோம்.

தோழிகள் வசனம்.

நல்லது இங்குத்தானே நில்லுங்கள்.

(உட்சென்று) வசனம்.

அம்மணி? இராஜனிடத்திலிருந்து இரண்டு தூதர் தங்களைக் காணவந்திருக்கிறார்கள்.

இரஞ்சிதபூஷணி வசனம்.

ஆ ? இதென்ன இராஜனிடத்திலிருந்து தூதர் வந்திருக்கிறார்களா ! என்னகாரணம் வொருநாளுமில்லாமல் அரசன் என்னிடத்திற் தூதுஅனுப்புவானேன். இருக்கட்டும் வந்தவர்களை வரப்படாதென்று மறுக்கவும்படாது. தெய்வச்செயலெப்படியாகுமோ தெரியவில்லை. நல்லது வரவிடுங்கள்.

தோழிகள் வசனம்.

தூதுவரே வரும்படியாய் உத்திரவாயிற்று.

(தூதர் இரஞ்சிதையைக்கண்டு) தாயே நமஸ்கரிக்கின்றோம்.

இரஞ்சிதபூஷணி வசனம்.

நீங்கள்யார்? எங்கிருந்துவந்தீர்கள். யாரால் அனுப்பப்பட்டீர்கள் என்னவிசேஷம்.

தூதர் கண்ணி.

இந்துஸ்தானி தோடி.

பொற்பிலகுரஞ்சிதபூஷணியெனும்பெண்மணியே
புண்ணியமேகண்ணியமே போற்றருங்கண்மணியே
விற்பனமே கற்பகமே மெல்லடிவந் தனமே
வேந்தன்விட்டதூதரொன்று வேண்டியேவந்தனமே.

வசனம்.

அம்மணி? நாங்கள் மகாராஜாவின் தூதர்கள். அவராணைப்படி யொருகாரியமாய்த் தங்களிடம் வந்தோம்.

இரஞ்சிதபூஷணி.

வந்தவிதமின்னதென்று வகுத்துரைக்க வேணும்
மன்னவனுக்கென்னிடத்தில் ஆவதென்ன காணும்

வசனம்.

என்னகாரியம் ? அதை இன்னதென்று சொல்லுங்கள். மேலும் இராஜனுக்கு என்னிடத்திலாகவேண்டிய காரியமென்ன.

தூதர்.

நந்தவனத்தன்னிலுனை நாயகியே கண்டார்
நாணம்விண்டார் மானம்விண்டார் நவியமையல் கொண்டார்

வசனம்.

அம்மணி? சாந்தமாய்க்கேட்கவேண்டும் சவாரிவரும்போது நந்தவனத்திற் தங்களைக்கண்டநாள்முதல் இராஜகாரியமும்பாராமல் ஆகாரமித்திரையின்றி நாணமானம்விட்டுத் தங்களால் மையல்கொண்டு வருந்துகிறார்.

இரஞ்சிதபூஷணி.

மையல்கொண்டாரென்று துஷ்ட வார்த்தையைச்சொல்லாதீர்
வம்புசெய்யவந்தீர்களோ என்முன்னே நில்லாதீர்

வசனம்.

என்னவார்த்தை பேசுகிறீர்கள். வேண்டாம் இந்த வம்புவார்த்தைகளை விட்டுப்போய்விடுங்கள்.

தூதர்.

மன்னவனை நீபுணர்ந்தால் வைபவமுற் றிருப்பாய்
மனம்வெறுத்துத் தடுக்காமல் நல்வார்த்தை யுரைப்பாய்

வசனம்.

அம்மணி? அப்படி கோபிக்கலாகாது. அவரோ மகாராஜா அவருடைய கருத்துப்படி நடந்தால் நல்லசம்பத்துண்டு தீர்க்காலோசனைபண்ணிச் சரியான விடையளிக்கவேண்டும்.

இரஞ்சிதபூஷணி.

வைபவமும்மற்றெவையும் தெய்வச்செய லன்றோ
மன்னவனாலாவதென்று வழுத்துவது நன்றோ

வசனம்.

சம்பத்தும் ஆபத்தும் கடவுள்கிருபையால் வருவதேயன்றிச் செத்துப்பிறக்கும் மனிதரால்வருமென்பது ஆச்சரியம். வாயாடாதீர் செல்லுங்கள்.

தூதர்சொல் தரு.

சொன்னதெல்லாம்மெய்தானம்மா மன்னன்படுஞ்சிரமம்
சொல்லமுடியாததையை செய்வதுதான் தருமம்

வசனம்.

அம்மணி? தாங்கள் சொல்வதெல்லாம் உண்மைதான். ஆயினும் மஹாராஜாவின் அன்பத்தையொழிப்பது அவர்களுடைய குடிகளுக்குக் கடமையாதலால் இணங்குவதுதான் தருமம்.

இரஞ்சிதபூஷணி.

தருமமென்று சொல்வது தருமமல்ல வுமக்கே
அருமையான புத்திசொல்வீ ரந்தமன்ன வனுக்கே

வசனம்.

இதைத் தருமமென்றுசொல்வது உங்களுக்குத் தருமமா. இது தகுதியல்லவென்று அவ்வேந்தனுக்குச் சொல்லுங்கள். இது தான் உங்களுக்குத் தருமம் போய்விடுங்கள்.

இரஞ்சிதபூஷணி.

இந்துஸ்தானி-தோடி-ஆதி.

என்னசெய்வே னிந்தநகர் மன்னன்செய்த தீவினைக்கு
எங்குதே யெனதுமனம் சகிமாரே-அடி
அர்த்தமாய்தூதர்வந்துசொன்னசொல்லைக்கேட்கவுமோ
அங்கம்பதறுதடி சகிமாரே-அடி

வசனம்.

தோழிகளே, நான் என்னசெய்வேன் நமது அரசன் என்ன இப்படிப் புத்தியில்லாமற் சொல்லியனுப்பினர் அவர்கள் சொன்னசொல்லை நினைக்கநினைக்க மனம்பதறுதடி.

தோழிகள்.

அமீர்கல்யாணி.-மிசிரம்.

ரஞ்சித பூஷணியே நாயகமே நீமனம்
அஞ்சிடவேண்டாமம்மணி யார்தான்நம்மை என்னசெய்யலாம்

வசனம்.

அம்மணீ ? அஞ்சவேண்டாம் நம்முடைய கற்பின்முன் இந்த அரசனுக்கினி என்ன பயன்படுமென்று நினைக்கிறீர்கள். நாம்மாத்திரம் கற்பின்வழிநின்றால் யார்தான் என்னசெய்யக்கூடும்.

இரஞ்சிதபூஷணி.

ஆக்கினைவருமென்றெண்ணி அஞ்சுதேயெனதுநெஞ்சம்
ஆருந்துணையில்லையே சகிமாரே-அடி

வசனம்.

சகிகாள் ? கற்புக்குத் தெய்வந் துணைநிற்ப துண்மைதான். தெய்வம் நின்றுதானே கொல்லும் அவன் அரசனாயிருப்பதால் ஏதேனும் வலிந்து செய்துவிடுவானானால் நாமென்செய்வது. எனக்கு இப்போ யார்துணை. என்மைத்துனரும். இங்கில்லையே. இப்பொழுது என்மானங் குலையுமேயென்று அஞ்சுகிறேன்.

தோழிகள்.

திக்கற்ற பேர்களுக்கு தெய்வந் துணையல்லவோ
சிந்தையில் கதிர்காம வேலனைநீ தியானம்புரிவாய்

வசனம்.

கண்மணி ? நீ ஏன் அஞ்சவேண்டும். தெய்வம் நின்றுகேட்கு மென்பதுண்மையேயாயினும் நம்முடைய கதிர்காமவேலவர் அப்படிப்பட்டவரல்லர். கண்கண்டதெய்வம். சிறினோரைச் சீக்கிரங் கேட்பார். இடைவிடாத உள்ளன்போடு அவரைத் தியானித்தால் அவரது திருக்கைவேல் ஒன்றேபோதும் அதுவந்து முன்னிற்கும். அந்த ஞானசத்தி வடிவேலன்முன் இந்த நல்லறிவற்ற ஆக்கினையும் அதிகாரமும் என்படும்.

இரஞ்சிதபூஷணிசொல்-தரு.

நந்தவனம்பார்க்கப்போன திந்தப்பழிக்குத்தானோ
நாணமில்லாப்பாவியானேன் சகிமாரே-சகி

வசனம்.

எனக்கு என்னகாலம்வந்தது. நான் ஏன் நந்தவனம் பார்க்கப்போகவேண்டும். மைத்துனர் சப்ரகாமம் போகும்பொழுது சொல்லிவிட்டுப்போனாரே, அவர் சொன்னதுபோ லிருந்தேனாகில் அவன்தான் நம்மைப் பார்ப்பானா ? இந்தப் பழிக்குத்தானா நான் அங்கே போனேன்.

தோழிகள்.

நந்தவனஞ்சென்றுடனே வந்துவிட்டாலிந்தப்பழி
வந்திடாதம்மாயினியதைச் சிந்திப்பதிலென்னலாபமே

வசனம்.

நந்தவனம்போனதி லென்னபிழை, உடனே வந்துவிட்டால் ஒரு துன்பமுமில்லை, நாங்களும் அப்பொழுதேசொன்னோம் நீ கேட்கவில்லை. நடந்ததைப்பற்றி இனிச் சிந்திப்பதிற் பயனென்ன.

இரஞ்சிதபூஷணி.

சாதிமுறைபாராமலே சற்பனைசெய்யநினைத்தான்
தப்பித்துக்கொள்வதெப்படி சகிமாரே-அடி

வசனம்.

அடி ? போனால்தானென்ன ? இருந்தால்தானென்ன ? உலகில் அப்படிப்போய் விளையாடுவாரில்லையா ? இந்தச் சண்டாளனைப் போலவா எல்லாருஞ்செய்கிறார்கள். இவன் உலகத்தைத்தாங்கும்

அரசன். இவனுக்கு எவ்வளவு அறிவிருக்கவேண்டும். உலகத்துப் பெண்களை யெல்லாம் தன் மக்களென்று நினைக்கவேண்டியவன் முறைதவறி என்னசதிசெய்ய நினைத்தான். இவனுக்கிது அடுக்குமா? சாதிமுறையையாவது நினைத்தானா? சற்றேனும் எண்ணாமல் இவனே இப்படிச்செய்யத் துணிந்துவிட்டால் இனிநாம் யாரிடத்திற்போய் முறையிடுவது. எந்த உபாயத்தினால் இந்த ஆபத்தினின்று நீங்கலாம்.

தோழிகள். சந்தவிருத்தம்.
சண்டசாதி.

கோலத்திரு வனையாயதி குணரஞ்சித மயிலே
ஏலப்பனை மனையாட்குநீ யிளையளெனு முறையால்
நீலக்கயல் விழியாளிட நீசென்றிது பகரில்
ஆலத்தினும் வலியானனை யனுகா வகைபுரிவாள்.

வசனம்.

இரஞ்சிதபூஷணீ? இப்பொழுதேபோய் உமது அக்காளிடம் இந்தச்சொல்லி முறையிட்டால் அவர்கள் ஏதேனும் ஒரு சூழ்ச்சியினாலே அந்தக்கொடும்பாவி உம்மைத் துன்பப்படுத்தாவண்ணம் வழிதேடுவார்கள்.

இரஞ்சிதபூஷணி.

சகிகாள்? உற்றசமயத்தில் நல்லயோசனை யெடுத்துச்சொன்னீர்கள். நான் இதோபோய் அக்காளிடம் சொல்லுகிறேன். (செல்கிறாள்)

---

எட்டாங்களம்.
குமாரியாயி அந்தப்புரம்.
குமாரியாயிசொல் வசனம்.

இரஞ்சிதபூஷணீ? ஏன் முகவாட்டமாய் நிற்கிறாய். கண்மணி உனக்கு யாராலே என்ன தீங்குநேர்ந்தது. இதுஎன்ன! கண்ணில் நீர் தளும்புகிறதே. நடந்ததென்ன. யார் என்னசொன்னார்கள்.

இரஞ்சிதபூஷணி.
கலித்துறை.

அடுத்தார் தமையென்று மன்பாக வஞ்செலென் றேயபயம்
கொடுத்தா தரிக்குங் குணவதியே மலர்க் கொம்பனையாய்
வடுத்தா னிலாதநின் சேவடிக் கேசரண் மண்ணிலெவர்
தடுத்தாலுந் தங்கையைக் காப்பதுன் பாரம் தயாநிதியே.

வசனம்.

அக்காள், எனக்குப் பயமாயிருக்கிறது. என் அங்கம்பத... றது. மனந்துடிக்கிறது, எனக்கு உன்னைவிட இந்த வுலகில் ய... துணை, உலகத்திற்குத் தாய்போலுந் தயாநிதியாகிய உனக்கு... தங்கைநான். இந்தச் சமயத்தில் நான்படுந் துன்பத்தினின்று... என்னைக் காக்கவேண்டும் நீயேகதி.

குமாரியாமி, கட்டளைக்கலிப்பா.

வாருலாவிய பூண்முலையாய் மலர்
வல்லி யேநிகர் மெல்லிடையாய்நறுந்
தாருலாவிய பூங்குழலாயென்றன்
தங்கையேயருஞ் சிதப் பெயர்வஞ்சியே
சீருலாவு மதிமுகம்வாடியே
சிந்தைநொந்து மெலிந் திவண் வந்ததேன்
நீருலாவுமு லகிலுனக்கெவர்
தீங்கைசெய்தனர் நீயுரைசெய்வையே.

வசனம்.

இரஞ்சிதபூஷணீ? என்இப்படிப்பரிதவிக்கிறாய். உனக்கு யார் என்னசெய்தார்கள். சீக்கிரம் சொல்.

இரஞ்சித பூஷணி.

சுந்தரத்திருவே மருவே குண
துல்ய மேருக் மேலெழுஞ் செல்வமே
சந்த மென்குயி லேமயி லேநல்ல
தாயைப் போன்றவள் பானதமக்கையே
நந்த னத்திலு லாவினன் மன்னவன்
நாடி மோகித்துத் தூதரை யேவினன்
வந்த வர்க்கும றுத்துரைத் தேனினி
வந்திடும்பழி யாதோவ றியெனே.

வசனம்.

அக்காள், நானென்னசொல்வேன் எனக்குவந்தபழியை. நா... ன் நேற்றுமாலையில் தோழிமார்களுடன் நந்தவனத்திற்குப்போய் விளையாடிக்கொண்டிருந்தேன். அப்பொழுது நமது ... மகன் வ...

தூதர்களை யனுப்பினான். அவர்கள் வந்து அரசன் கருத்தை
ரத்தார்கள் நான் அவர்கட்குத் தக்க புத்திகூறி மறுத்தனுப்பி
டேன். அதனால் அரசன் என்னென்ன செய்வானோ? எதி
ால்வானோ? என்ன சம்பவிக்குமோ? இந்தப் பழிக்கு நானெ
ன செய்வேன்.

குமாரியாமி. சந்த விருத்தம்.

தனியாகவந்து மனமேமெலிந்து தளர்கின்றவென்றனிளையாய்
அநியாயமாக வரசன்மயங்கி யணிகொண்டவின்னையவனும்
முனிவாயெதிர்ந்து துயர்செய்யுமுந்திமுழுதும்விரைந்துதுணையா
யினியானிருந்து காப்பேனுவந்து யேனஞ்சுகின்றையபிலே.

வசனம்.

தங்காய், நீ பயப்படாதே. அரசன் அறிவில்லாமல் அந்தயெ
ண்ணம் எண்ணினாலும் அதற்காக நாமவன்மீது கோபிக்கலாகாது
ஒருவேளை துணிந்து ஏதேனும் செய்ய முயன்றாலும், நாம் நம்மை
க்காத்துக்கொள்ளவேண்டும். நல்லவேளையாய் என்னிடத்தில் அறி
வித்தாய். நான் இனி அதற்கு ஏதேனும் சூழ்ச்சிசெய்கிறேன். நீ
மனந் தளராதிரு.

---

ஒன்பதாங்களம்.

இடம்—இராஜமண்டபம்.

நிகழ்ச்சி—இராஜன் கோபிக்கிறான்.

தூதர். சந்தவிருத்தம்.

அடதாளசாப்பு.

ஐயனே நின்மொழிப் படியிரஞ் சிதமெனும் மரிவையாள்முன்
பையவே மன்னவன் மயலெலா நயமுறப் பகரலானோம்
தெய்வமா தீனயவம் மின்னனாள் சிறியே சிந்தைநொந்து
வெய்யவார்த்தைகள்சொன் னையகோவிதுதகாதெனவெறுத்தாள்

வசனம்.

ஐயா? இரஞ்சிதபூஷணியாரிடஞ்சென்று மகாராஜாவின் திரு
... வார்த்தைகள் எடுத்துச்சொல்லியும், அந்தப்

திசைநாயகன். சந்தவிருத்தம்.

அடதாளசாப்பு.

மலர்வாளி பாய வலிதாவி சோர வருகாதல் மீறுமகிபா
வலமேவு தூதர் முனமீபுகன்ற மடமாதி ஞேடுபரிவாய்
நலமா புனைவல் தனைநேரி லோத நயவாது சிறியவள்தான்
பலகீதிகூறி முடியாதுபோவி ரெனவந்து நின்றுதொழுதார்.

வசனம்.

பிரபு! நமது தூதர்கள் இரஞ்சிதபூஷணியிடம்போய் உமது
தற்கருத்தையறிவித்து அவர்களாலியன்றமட்டும் போதித்தார்
ாம். அவள் இணங்கவில்லையாம். தூதர்களைச் சீறிச்சினந்து
ஜன் கருத்து,நன்றல்லவென்று மறுத்துப் பலகீதிகளைப்போ
து அனுப்ப அவர்கள் வந்துவிட்டார்கள்.

அரசன் தரு.

இந்துஸ்தானி-பியாக்-ஆதி.

அட-ஒப்பேனென்றவள் சொன்னளா
ஆ - என்னசொன்னள்மாகெர்வி
ஆகட்டும்நான்பார்க்கிறேன்
ஆருக்கும்நானஞ்சேனே - விட்டால்
ராஜனைவேனே (அட ஒப்பே)

மிகு - காதகநெஞ்சகனுன்மார்க்கி
என் - காதல்தீர்க்கேனென்றளா
கண்டதுண்டமாகவே
கத்தியால்ஓர்வெட்டாக - வெட்டாமல்
நான்விடுவேனே (அட ஒப்பே)

அட - அப்படியுமவள்சொன்னளா
ஆர் - என்றேயென்னைமதித்தாளோ
ஆகட்டுமாகட்டுமவள் - என்
ஆக்கினைக்குமஞ்சாளோ (அட ஒப்பே)

சந்தவிருத்தம்.

ஆதிதாளம்.

அங்கவங்கமுதலெங்குமென்பெயா றைந்திடின் னுயிர்நடுக்குமே
வங்கணத்தின்மிகுசிங்களச்சி நபிலஞ்சம்வைத்தெனை மறுத்ததால்
இங்கவட்கிறுதிவந்ததென்கையி லங்குவாள்கொடுதுணிந்துமே
பொங்குசெங்குருதிசிந்தவன்றலை புரண்டாற்றநனிகொய்வனே.

வசனம்.

அடடா, ஒப்பமாட்டேனென்றாளா? என்னகெர்வம். இருக்
ம் அப்படியா? இவளை விட்டால் நானும் ஒரு இராஜனா? நல்
து நல்லது. ஒரு நொடியில் அவள் அகங்காரத்தை அடக்கிவிடுகி
றன். என்பெயரைக்கேட்டமாத்திரத்தில் எல்லாவுலகும் நடுங்கத்தக்கதாயிருக்க ஒருசிங்களச்சிறுமி, இவள் யோக்கியதையென்ன? என்னைமதியாமல் மறுத்தனளா? ஹ, ஹா எனக்குதவாத இவள் என்னுடைய இராச்சியத்திலிருந்து பயனென்ன. ஒரேவெட்டாய் வெட்டி இரத்தக்கடலில் அவள் தலையைப் புரளும்படி கொய்ய
ட்டால் நான் ஒருவீரவானா? திசைநாயகா நீர்போம்.

சந்த விருத்தம்.

ஆதி.

ஓலக்கடல்சூழு லகிற்புகழே
புருவாயிலகும் முள்ளிக்கொடையே
சீலத்திருநாள் சிதபூஷணியின்
திகழ்சே ரெழிலால் துன்புற்றனன்யான்
ஏலப்பளையின் மனையாளையழைத்
திவணுற்றிடில்யா னெள்ளாதவள்பால்
சாலத்தமியேன் துயரைச்சொலியே
சரசக்குயிலைத் தாவென்பனனால்.

வசனம்.

முள்ளிக்கொடியதிகாரம், பார்த்தீரா! என்ன அவளுடைய இறுமாப்பு. சிறிதும் நம்மை லட்சியஞ்செய்யவில்லையல்லவா? நான்படுந் துன்பத்தைச் சற்றேனுங்கவனித்தாளா? நினைத்தால் நான் ஒருநொடியில் அதஞ்செய்துவிடுவேனென்று அவள்நினைக்கவில்லை மடைச்சிறுமி. பேதையென்றஞ்சுகிறேன். நல்லது நாம் அவசரப்பட்டு ஒன்றையும் செய்துவிடலாகாது. இன்னும் நயத்தினால் வேண்டியவரையும் பார்த்துவிட்டுத்தான் தண்டோபாயத்தைச் செலுத்தவேண்டும். ஏலப்பளையின்மனைவி நல்லவிவேகி. அவளை அழைத்து நம்முடைய துன்பத்தைச் சொன்னாற்கேட்பாள். இரஞ்சிதையை யெப்படியும் இணங்கும்படி செய்துவிடலாம். இதுநல்லயோசனை. சீக்கிரம் குமாரியாமினியை இங்கேதருவியும்.

முள்ளிக்கொடை.

வண்ணச்சந்த விருத்தம்-ஆதி.

மகிபதி யிஃதற நெறியல வுமது மனம்போலே
புகழுறு பதிவிர தையையொரு சிவிகையில் பொன்போலே
விகசித கிளதுச முகமதில் விடுகிறே னன்பாலே
அகமகிழ் வொடுமித மொழிபுக லுவிரவள் பெண்பாலே,

வசனம்.

மகாராஜா, தங்கள் இஷ்டப்போல் இதோ ஒரு நொடியிற் குமாரியாமியைச் சமுகத்திற் றருவிக்கிறேன். அவளும் வந்துவிடு வாள். ஆனால் தாங்கள் கொண்டகருத்து தருமமல்ல. தங்கட்குத் தெரியாததொன்றுண்டா? நானொன்று வேண்டிக்கொள்ளுகிறேன் குமாரியாமி ராஜசபைக்குபயந்தூடுங்குவாள் இனியமொழிகளால் அன்பாய்ப்பேசி அனுப்பினால் அவள் தங்கள் எண்ணத்தை முற்று விப்பாள்.

அரசன் வசனம்.

நான் ஏன் கடிந்துபேசுவேன். கடிந்துபேசினால் காரியசித்தி யாகுமா? மாதர்க்கிதம் என்பது எனக்குத் தெரியாதா?

முள்ளிக்கொடை-வசனம்.

ஆம் வாஸ்தவந்தான் பிரபு. தூதர்காள்? ஏலப்பனே அதிகா ரத்தின் மனைவியாகிய குமாரியாமியை மகாராஜா அழைத்து வரச்சொன்னதாக அழைத்து முத்துச்சிவிகையிற் கொண்டுவாருங்கள்.

தூதர். சித்தம் பிரபு. (போகிறார்கள்.)

---

பத்தாங்களம்.

இடம்—குமாரியாமி அந்தப்புரம்.

நிகழ்ச்சி—தூதுவரழைக்கின்றனர்.

தூதர். சந்தம்-ஆதி.

அன்ன மெனையாள் டருளுந் திருவே
மின்னார்க் கரசே மிளிர்சுந் தரமே
இந்நாள் நமதேந் தனுமுன் னைவரச்
சொன்னார் வருவீர் குணதல் லியமே.

வசனம்.

அம்மணி! தங்களை அழைத்துவரும்படி மகாராஜாவின் கட்டளை. முத்துச்சிவிகையும் சித்தமாயிருக்கிறது. தயவுசெய்ய வேண்டும்.

குமாரியாமி சிந்திக்கிறாள்.

என்னகாரணமின்று மன்னவன் — என்னை
ஏனோ அழைத்தானென்றுந் தெரியேனே
கன்னி இவள்மேல்கொண்ட மயலாலே — என்னைக்
கண்டேனவத்தானோ அறியேனே
ஆளனில்லாதவேளை மகிபாலன் — என்னை
அழைத்தானங்கு போவதுசரிதானோ
மீளமினைந்த அவன் சபைதன்னில் — என்னை
நேராய்வரச்சொல்லுதல் சரிதானோ
செங்கோல்தனக்குமுன்னே சங்கேதம் — ஒன்றும்
செல்லாததுபோல் நம்மாலென்னாகும்
அங்கேசென்றுதான்பார்ப்போம்இப்போது — எல்லாம்
ஐயனருள்போலல்லவோ முடிவாகும்.

வசனம்.

காரணந் தெரியவில்லை. இராசன் நம்மை அழைப்பதற்கு நியாயமென்ன, இரஞ்சிதபூஷணிமேற்கொண்ட காதலாலோ; அதைப்பற்றி யாதேனும் வினவுதற்கோ; நமது காதலர் கிருகத்திலில்லாதபொழுது நாம் அங்கே தனித்துப்போகலாமா? அரசன் ஒரு பெண்பிள்ளையை தன்சபைக்கு வரும்படி காரணமின்றிக் கட்டளையிடலாமா! இதென்ன அறிவற்ற ஆலோசனையாயிருக்கிறது. நாம் போகாமலிருப்பதும் சரியல்ல. இந்த நியாயங்களெல்லாம் ராசாக்கினைக்கு முன்னிற்காது? நாம் வீண்யோசனை செய்வதிற் பயனில்லை போய்த்தான் தீரவேண்டும். போய்த்தான்பார்ப்போம். என்னதான்சொல்லுவான். அதுதான் தெரிந்துகொள்ளுவோம். எல்லாவற்றிற்குந் தெய்வச்செயல் ஒன்றிருக்கிறது. அதன்படிதான் நடக்கும். நாமேன் கவலைப்படவேண்டும். யாரடி அங்கே, இரஞ்சிதபூஷணியை அழைத்துவா (இரஞ்சிதபூஷணிவந்தாள்).

குமாரியாயி. சந்தவிருத்தம்.

அஞ்சுகமஞ்சுறு மின்கவை யஞ்சொலி ரஞ்சிதபூஷணியே
நெஞ்சினில்மன்னவன் வஞ்சகமென்னவி னைந்தனனோவறியேன்
வெஞ்சினவொற்றர்கள் வந்தெனை வம்மென வேண்டினர்போய்வரு
மெஞ்சதலின்றிவ ரும்பரியந்தமி சைத்திருபெண்மணியே. [வேன்

வசனம்.

தங்காய் ? அருகில்வா, இதென்னகொடுமை. இராஜ[illegible] னையழைத்துவரும்படி கட்டளையிட்டிருக்கிறானாம், தூதர் வந்திருக்கிறார்கள். என்ன நினைத்துச்சொன்னானோ ஒன்றாகதெரியவில்லை. போகாதிருப்பதும்சரியல்ல, போனால்என்னகேட்கிறானோ ? எதை செய்யச்சொல்லுகிறானோ ? உனது அத்தானவர்களும் வீட்டிலில்லை. என்னசெய்யலாம். எதுவந்தாலும்வரட்டும். கதிர்காமவேலர் இருக்கிறார். நீ அஞ்சாமலிரு. நான்போய்வருகிறேன்.

இரஞ்சிதபூஷணி-வ-ம்.

ஏனக்கா. இராஜன் உங்களை அழைக்கவேண்டிய நிமித்தமென்ன ? எதாயினும்கேட்டால நீங்கள்என்னசொல்வீர்கள். அவனுடைய எண்ணத்திற்கு மாறாகச்சொன்னால்உங்களை யாதேனும் ஆக்கினைக்கு உட்படுத்துவானே ? நானென்னசெய்வேன். (கண்பிசைந்துவிசனிக்கிறாள்).

கண்மணி ? நீ விசனப்படாதே. அப்படி அவன் கேட்கவந்தால் என்னாலியன்றவரையில் யுத்திவாதத்தால் தந்திரமெல்லாம் செய்துபார்ப்போம், அதற்குமேல் தெய்வச்செயல். நாமென்ன செய்யலாம் நம்மால்ஆவதென்ன ? நீ கவலைப்படாதே. நான்போய்வருகிறேன். யாரடி அங்கே? பல்லக்குச் சித்தமாயிருக்கட்டுமென்றுசொல்லு. (சென்றாள்).

இரஞ்சிதபூஷணி (சிந்தித்தல்).

கண்ணி.

நவரோஜ்-சாப்பு.

மன்னனென் தமக்கையைவரச்சொல்லி ஆள்விட்டமாயமேதோ-பா
என்னைக்கருதியவள் தன்னையேகேட்கவோ யேதாரூதோ [வி
அத்தானும்ஊரிலில்லாதசமையத்தில் அண்ணல்தானே - எந்தன்
அக்காளைத்தானழைத்தென்னைக்கைப்பற்றவோ அறிகிலேனே
நந்தவனத்திற்போயிந்தப்பழியாச்சு நங்கைமாரே-இனி
எந்தவிதத்திலெனது கற்பைக்காப்பேன் தங்கைமாரே
முருகாவென்றொருதரம்மொழிந்தகன்னியைகாத்தாய்உலகிலென்று
எந்தன், அருகாகவந்துகாத்தருள்வாய்கதிர்காமத்தரசேயின்று
சரவணபவசிவ சண்முகனேயுமை தந்தபாலா-நல்ல
கருணையில் வினைநிகர்பவருளரோ கதிர் காமவேலா

வசனம்.

தற்காக அக்காளை அழைத்தானோ. என்னைப்பற்றித்தானோ ஒன்றுந்தெரியவில்லை ! அத்தானுமில்லாதசமயத்தில் இவன் இப்படி வம்புசெய்கிறான். ஒருகால் என்னை நினைத்ததுபோல் அக்காளையுங் கருதியிருப்பானோ ? இந்தப்பழிக்கு நாமென்னசெய்யலாம். எல்லாம் நம்மால் வந்ததுதானே. நாம் நந்தவனத்திற்குப் போகாவிட்டால் இவ்வளவு தொந்தரையில்லையே ! நான் எப்படி என்கற்பைக்காக்கப்போகிறேன்; கதிர்காமவேலவரே? நீரே துணை. நீர் கிருபாமூர்த்தியென்பதுண்மையானால் என்னையும் என் அக்காளையும் இவ்வேளை காத்தருளவேண்டும் ' ஒரு முருகாவென்றுள்ள முருகிய ஒருத்தியைக்காக்க வருமுருகா ' இவ்வேளை என் அருகிலிருந்து காத்தருளும் திருமுருகா, சரவணபவனே, சிவசண்முகனே, நீயேதுணை. உன்னையன்றி உறுதுணை யொன்றில்லேன்.

---

பதினோராங்களம்.

இடம்—இராணி அந்தப்புரம்.

நிகழ்ச்சி—குமாரியாமிக்கும் இராணிக்கும் சம்பாஷணை.

குமாரியாமி.

காவலன்மனமே களிக்குமோகனமே
பூவில்வாழனமே புரிந்தேன்வந்தனமே.

இராணி. சீசபத்தியம்.

நீதிநெறிதவறாத முதன்மந்திரி மனைவியே
நின்வரவு நல்வரவ தாகவின்று
ஏதுகாரியமாக வந்ததோ புகலுவாய்
இனியவுன் புதல்வரும் க்ஷேமமேயோ
கோதிலாவுனதுகொழு நன்றங்கை முதலினோர்
குறைவிலாச் சுகமுற்றிருக்கிறாரா
காதலுடன் யாவையும் யானறிய விப்போது
கனிவாய் திறந்து மகிழ் வாயுரைப்பாய்
காதளாவிச்சிறந்தரிபரந்துலவுங்க டைக்கணியிலே
மாதரார்புகழுமா மகிமைசேர்கற்பின்வ யங்குகுயிலே
தீதிலாத்திவ்விய சவுந்தரவிரஞ்சிதசொ ரூபவொயிலே
ஓதருஞ்சுகுணநற் குமரியாமினியெனும் முயர்பெண்மயிலே.

வசனம்.

குமாரியாமி! ஏது இவ்வளவுதூரம். எல்லோரும் சௌக்கியமா? இரஞ்சிதபூஷணி சுகந்தானா? இரஞ்சிதபூஷணிக்குக் கலியாணமெப்பொழுது? உம்முடைய காதலர் சப்ரகாமத்திற்குப் போயிருக்கிறார்போலும்! என்னகாரியமாய் இவ்வளவுதூரம் இங்கே நோக்கினது. ஏன் நிற்கிறாய் உட்காரம்மா.

குமாரியாமி. சிசபத்தியம்.

ஞாலமதில் துதிபரவு மென்றன்மாராணியே
நம்பினே னுனது பத மலர்கள் துணையே
ஏலவார்குழலி யீர் தேவரீர்சுகமோ
யானறிய தயைசெய்தி யம்புமம்மா
பாலர்முதல் யாவரும் சுகமேயி ருக்கிறார்
பார்மன்ன னீதியால் குறையும் வருமோ
மாலனைய வரசரெனை வரவழைத் திட்டதால்
வந்தனன ழைத்திட்ட செய்தியறியேன்
சீலவிற்பனசுலட் சணவிலட் சணமிகுசு பாங்க வுருவே
திவ்வியகற்பினிலருந் ததிநிகர்ந் தெழில்சிறந் திலகுதிருவே
நீலலோசனகுண தயாளநன்னியமமிகு மலரின் மருவே
நினையடுத் தவர்தமக் குதவுமற்புலவுபொற் கற்ப தருவே.

வசனம்.

தேவி? மகாராஜாவினுடைய அனுக்கிரகசெங்கோல் ஆளுகையில் அடியாளும் எல்லோரும் சுகமேயிருக்கிறோம். தங்களை நம்பின அடிமைகளாகிய எங்களுக்கு என்னகுறை அம்மணி? மகாராஜா அவர்கள் ஏதோ என்னை அழைத்தார்களாம். தூதர்கள் வந்துசொன்னார்கள். எனக்குக் காரியம் ஒன்றும் விளங்கவில்லை அதற்காகத்தான் ஓடிவந்தேன்.

இராணி. சீசபத்தியம்.

அன்னமே மன்னவன் உன்றனை வரச்சொல்லி
அன்புடன ழைத்திட்ட செய்தியாதோ
என்னுடன் அவரொன்று மோசிக்கவில்லையே
யேந்தல்தன் னுள்ளக்கருத்து மெதுவோ
அன்னமும் புசியாம லமளியிற் றுயிலாமல்
அரசாங்க கார்யமும் விசாரி யாமல்

உன்னியுள் ளுருகிடும் உன்மத்தர் போலவே
ஓயாத பிரம்மையால் வாடுகின்ருர்
இன்னதென் றறிகிலேன் யென்செய்வேன்தெய்வமே இந்தமாயம்
என்னவென் றுரைசெய்வே னென்மனம்வேகுதேயின்று நீயும்
மன்னனைக்கண்டபின் அன்னவர்சொல்லிடும் வார்த்தை யாவும்
நன்னயத்துடன் மனங்கொண்டு நீவினயமாயதைவி ளுவும்.

வசனம்.

அப்படியா ? எனக்கு அவர் உன்னை அழைத்தவிஷயம் தெரியாதே. அவர் என்னிடத்திற் சொல்லுகிருரா, நேற்றுமுதல் அவர் எதோ பிரமைகொண்டவர்போ லிருக்கிருர் உண்ணவுமில்லை உறங்கவுமில்லை. காரியமுமில்லை. எதையோமனதில் நினைத்து நினைத்து உருகுகிருர். எனக்கு ஒன்றுந் தெரியவில்லை. நானும்போய் என்னுற் கூடியவரையுங் கேட்டும்பார்த்தேன். ஒன்றும் சொல்லவில்லை, ஆர்குத்தியும் அரிசியாகட்டுமே ? நீயாவதுபோய் தயவுசெய்து துன்பத்தைமாற்றிவந்தால் நீதான்தெய்வம் அறிந்துவா அம்மா.

குமாரியாமி. சிசபத்தியம்.

தாயினுங்கருணைமிகு சற்குணவதியான
தையலர்க்கரசியே சாந்தவதியே
நேயமாயுன்னிடத் தொருசெய்திசொல்கிறேன்
நீதயைபுரிந்து வெகு ளாமல்கேட்பாய்
சீயமன்னவர்நாட்டு வளமைகண் டிடஅன்று
சிங்காரமாகவரும்வேளைதனிலே
தூயநந்தவனமதிற்றேழிமாருடன்
சுகமாயுலாவுரஞ்சிதையின்மீது
தீயமோகங்கொண்டு மன்னவன் விரைவுடன் வீடு செலஃருர்
பாயும்வெந் தூதர்விட் டவளையிங் கேயழைத் தெய்து மென்ருர்
வாய்மைசே ரவள்சம்ம திக்காமை யால்மனம யங்கி னின்ருர்
நோய்மைசேர் துன்பமினி யேதுவருமோ துணையெனக்குமின்றுள.

வசனம்.

அம்மணீ. ஒரு விண்ணப்பம் என்மீதுகோபிக்கலாகாது. நாங்கள் உங்கள் அடிமை. எங்களைக் காக்கவேண்டுவது உங்கள் கடமை. இவ்வேளை இந்த ஏழையைக்காப்பீர்களென் றுநம்பியே சொல்லுகிறேன். எங்கள் நந்தவனத்தில் என் தங்கை இரஞ்சிதபூஷணி

தோழிகளோடு பூக்கொய்து விளையாடிக்கொண் டிருந்தாளாம் மகாராஜா உலாப்போகும்போது அவளைப்பார்த்து விரும்பித் தூதர்களையனுப்பி அவளை இணங்கும்படிக் கேட்டுவரச்சொன்னார்களாம், அவள் பக்குவமாய்ச் சொல்லியனுப்பத்தெரியாமல் வந்தவர்களைக் கடிந்தனுப்பினளாம், அதனால் மகாராஜா அவர்களுக்குக் கோபமாஎன்னையழைத்தாரென்றுநினைக்கிறேன்அம்மணீ, நானென்னசெய்வேன், ஏழை, மகாராஜா அவர்கள்என்ன நினைத்திருக்கிறார்களோ, என்னசொல்லப்போகிறார்களோ, தகாதசெய்கைக்கு என்னை உடன்படுத்துவிக்கக் கட்டளையிடுவார்களானால்நானென்ன செய்வேனம்மணி.

இராணி. கொச்சகம்.

இந்தவிதம்நானறியே னென்னசெய்வேன் பெண்ணியே
அந்தமன்னனுன்னிடத்தில் அடாதமொழி தானுரைத்தால்
சிந்தைவருந்தாம லுன்றன்சிரமசைத்து வோமெனவே
தந்திரமாய்ச்சொல்வாய் தகுந்தபடி யிப்பொழுதே.

வசனம்.

குமாரியாமி, கவலைப்படாதே, எனக்கும்அது விசனமாகத்தானிருக்கிறது. அதுஅடாதசெய்கைதான், என்னவோ இராஜாநினைத்துவிட்டார், உன்னையும் தருவித்துவிட்டார், நீ போகாமலுமிருக்கப்படாது, ஒரேமூர்க்கமாய் நிற்கிறவரிடத்தில் இடையில் ஒருவர் போய்த்தடுத்து வார்த்தை சொல்லவுங்கூடாது, நான் போய்த்தடுத்தாலும் இப்பொழுது அவர் கேளார், சமயம்பார்த்துப் பக்குவமறிந்து நயவசனத்தால் நான் சொன்னால் அதைத் தள்ளிவிடமாட்டார், நான் அப்படியே செய்கிறேன், நீ அஞ்சாமற்போ அல்லது ஒருகால் மூர்க்கமாய்க் கோபித்துக் கொண்டாலும் நீ வருந்தாமல்நின்றுசயமாய்ப்பேசி ஒன்றும் மறுத்துரையாமல் தந்திரமாய்த் தப்பித்துக்கொள்.

குமாரியாமி.

உத்தரவுப்படி செய்கிறேன், கதிர்காமவேலவர் இருக்கிறார் தேவா, மகாராஜாஅவர்களுடைய திருவுள்ளம்புனிதமடையவேண்டுகிறேன். நீயேதுணை. அம்மணீ? நான்போய்வரஉத்தரவா. (இராஜன்மண்டபமடைகிறாள்.)

பனிரண்டாங்களம்.

நிகழ்ச்சி—அரசன் குமாரியாமியைக்கோபிக்கிறன்.

அரசன் சந்தம். ஆதி.

மடவன நடையொடு மடமயி லெனவரு மடமானே
சுடர்விடு மதிமுக விளநகை யிலகிய தோகாயென்
னிடமிகு தயையுடன் வருமுன தெழில்வர வினிதாக
தடமுல வியவொளி திகழ்தவி சினிலினி தமர்வாயே

வசனம்.

குமாரியாமி, வருகவருக, ஆஹா, என் புண்ணியம் இப்பொழுதுதான் பலித்தது. நீ நல்லபுனிதவதி. புனிதவதிகள்பிரவேசித்த இடமெல்லாம் புனிதமாகும். உன்னுடைய வருகை சபைக்கும் மனதிற்கும் களிப்பைத்தந்துநிற்கிறது. உட்கார். உட்கார்.

குமாரியாமி. சந்தம்.

தந்தைநீ தாயுநீ தமயனீ தமருநீ .
எந்தைநீ இறைவநீ இசைமிகும் அரசனீ
தொந்தமா யென்றனைத் தூதரைவிட்டுமே
இந்தவேளையி லிவண் ஏனழைத் திட்டதோ.

வசனம்.

மகாராஜாஅவர்கள், ஏழைமீது அருள்கூர்ந்து அழைத்த காரியம் ஒன்றும் அறியேன் மகாப்பிரபு. எங்களுக்குத் தந்தை, தாய், தமையன்முதலானசகலமும் இந்தச் சமுகமேயென்று நம்பியிருக்கிற பேதைநான். தூதர்வந்து சொன்னார்கள். ஓடிவந்தேன்.

அரசன். கண்ணி - கேதாரம் - ஆதி.

அருமைபெருமையுற்ற மாதரசே - அம்மா
அன்புமிகுத்தநல்ல மாதரசே
தருமநெறிதவறு மாதரசே - மிகு
தயைதாட்சணியமுள்ள மாதரசே
சுந்தரப்புதல்வர்களும் குறையேது - மின்றி
சுகமேயிருக்கின்றரோ நீயோது
உந்தன்கணவனங்கே இப்போது - க்ஷேமம்
உனக்கறிவிக்கின்றரோ தப்பாது
ஆலப்பனை மனைவியே உன்தங்கை - சுக
மாகயிருக்கின்றளோ மடமங்கை
சிலனந்தமந்த்ரியைப்போல் பார்மீது - மிகத்
தேர்ந்தவரொருவருங் கிடையாது

வசனம்.

குமாரியாமீ, வீட்டிற்பிள்ளைகளெல்லோரும் க்ஷேமமா? நீநல்லவிவேகி, குடும்பத்தைச் செவ்வையாய் பார்த்துக்கொள்வாயென்றுகேள்விப்பட்டிருக்கிறேன், ஏலப்பளையார் போய் நெடுநாளாயிற்று. இன்னும் வரவில்லை. அவர் மகாவிவேகி அவரை நான் மந்திரியாகப் பெற்றுக்கொண்டதினாலேயே உலகில் எனக்கு நற்பெயரும் நற்கீர்த்தியும் உண்டானதுமன்றி இராச்சியமும் நாளுக்குநாள் நல்ல நிலைமையில் வருகிறது. வீட்டுக்காரியங்கள் ஒழுங்காய் நடந்துவருகிறதா? பிள்ளைகளெல்லாம்சுகந்தானே? உன்தங்கை இரஞ்சிதபூஷணியா? (ஆம்) குமாரீ, அவள் சுகந்தானா? நல்ல பெண். நல்ல விவேகியென்றுக்கேள்வி. உண்மைதானோ? (ஆம்) எனக்கு இதுவரைக்கும்தெரியாது. நேற்று உலாப்போகும்போது கண்டேன். அப்பொழுதுதான்தெரிந்தது எல்லோரும் சௌக்கியந்தானே.

குமாரியாமி. கண்ணி - கேதாரம் - ஆதி.

மன்னவனே சுகுணமன்னவனே - நல்ல
மதிமிகுத்தநீதி மன்னவனே
இங்கிலத்தோர்புகழ் மன்னவனே - யார்க்கும்
ஈவிரக்கமுள்ள மன்னவனே.
மைந்தர்களும் நானும் க்ஷேமமய்யா - உற்றார்
மற்றவரும் சுகக்ஷேமமையா
என்றநாதன் சப்ரகாமந்தன்னில் - கடிதம்
எழுதுகிறாரவரும் க்ஷேமமையா.
என்பிரியதங்கை யானவந்த - எழில்
ரஞ்சிதையும் சுகக்ஷேமமையா
உன்னருளால் அரசே நாங்களெல்லாம் - இங்கு
ஒருகுறையும் இன்றி க்ஷேமமய்யா.

வசனம்.

மகாராஜா அவர்களுடைய கிருபையால் எல்லோரும் சௌக்கியமே. இராசசமுகத்தை நம்பின ஏழைகளாகிய எங்களுக்கு என்னகுறை ?

அரசன். சந்த விருத்தம்-ஆதி.

மலரிரண வலர்ந்து நிலவருள் சுரந்த மதிமுக மிலங்கு மயிலேநீ
குலமகளிர்வந்து பலபணி புரிந்து குரைகழல் வணங்குகுயிலேகேள்
நலமுறவென்னெஞ்சி லெண்ணியதையுவந்தநயமுற விளம்புவனியானே
சலனமத கன்று முடிவுசெய வின்று தயவதுபுரிந் தருளுவாயே.

வசனம்.

குமாரியாமி, நானுன்னை இப்பொழுது அழைத்தகாரணமின்னதென்று உனக்குத்தெரியாதே! ஒருகாரியத்திற்காக அழைத்தேன். அதையின்னதென்று சொல்லுகிறேன். எப்படியாவது என்கருத்தை நிறைவேற்றுவாயென்று நம்பித்தான் உன்னை யழைத்தேன். நீ நல்லவிவேகியாதலால் என்கருத்திற்கு மாறாக ஒன்றையுஞ்செய்யமாட்டாயென்று நினைக்கிறேன் சற்றே தயைபுரிந்து கேள் சொல்லட்டுமா.

குமாரியாமி. சந்த விருத்தம்-ஆதி.

வடிகின்றதேறல் மடைவந்துசெந்நெல் வளர்கின்றகண்டி யரசே
முடிமன்னர்வந்து நிறைதந்துநின்று முறையேவணங்கு மிறையே
குடிகொண்டுகின்றன்மனதில்நினைந்தகுறைவிண்டிடற்கிவெளியாள்
படியின்கணென்று புரியுந்தரத்தின் வலனேசொல்மன்னர் பதியே.

வசனம்.

மகாராஜா, இந்த ஏழையை ஒருபொருட்படுத்தி இவ்வளவு உபசாரமாகவசனிப்பதடாது உலகத்தரசர்களெல்லாம் சமுகத்தில் வந்துபணிந்து பணிகேட்கத்தக்க பிரபுத்துவத்தைக்கொண்டமண்டலேஸ்வரர் தாங்கள். நாங்கள் அடிமைத்திறமுடையவர்கள். இந்த அடிமைப்பேதை மண்டலேஸ்வரராகிய தங்களுக்கு என்னஉபகாரஞ் செய்யத் தரமுடையவள்.

அரசன். சிந்து-கண்டா.

உத்தமகுண வம்மணி - என்றனுக்கொரு
உதவிசெய்வா யம்மணி
மெத்தவேண்டினே னம்மணி - எனக்குநேர்ந்த
விசனமொழிப்பா யம்மணி

குமாரியாமி. வ-ம்.

மகாராஜாகருத்துப்படி? என்னால் முடியதக்கதா யிருந்தாற் செய்ய வஞ்சனையில்லை, சுத்த நோக்கமுடையதும் செய்யத்த

ந்கதுமாயிருந்தாற்செய்ய வஞ்சிப்பவர் எப்படி அடிமைத்திறம்பெறுவார்கள். சொல்லுங்கள்.

சொல்லப்பனது வில்லையே - சொல்லிவிட்டால்
சோகமொழிய வில்லையே
அல்லும்பகலுந் தொல்லையே - உலகில்யார்க்கும்
ஆசைக்களவு மில்லையே.

116111

வசனம்.

வேறொன்றும்நான் கேட்கவில்லை. உன்னால் அது முடியத்தக்துதான். கேட்கலாமா? சொல்லமனம் வரவில்லையே. சொல்லாமலுமிருக்கவுமுடியவில்லை. சொல்லாமலிருந்தால் என்தொல்லை ஒழிவதாகவுந்தோற்றவில்லை. சென்ற இரண்டு நாளாய் எனக்கதுவே பெருங்கவலையாய்விட்டது. என்னசெய்வேன் ஆசைக்குமளவில்லை. ஆசைவெட்கமறியுமா ?

(குமாரியாமி. வ-ம்.) சும்மாசொல்லுங்கள்.

நாட்டின்வளமை கண்டேனே - உன்னரண்மனை
நந்தவனமுங் கண்டேனே
கூட்டமாதரைக் கண்டேனே - அம்மா உனது
கோலத்தங்கையைக் கண்டேனே

வசனம்.

நேற்றுச் சாயரக்ஷை நான் ஊருலாப்போயிருந்தேன். எங்குஞ் சுற்றிக்கொண்டு போகும்பொழுது ஒரு நந்தவனத்தைக்கண்டேன். அதிலேசிலபெண்கள்கூடிவிளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒரு பெண் அழகெல்லாந்திரண்டு ஒரு வடிவெடுத்து நின்றாற்போல இருந்தாள். அவள் யாரென்று முள்ளிக்கொடை மந்திரியைவினவ அவர் அந்தபெண் உன்னுடைய தங்கையென்று சொன்னார்.

ஆவல்மிகவுங் கொண்டேனே - அவளைக்கட்டி
அணையமனதிற் கொண்டேனே
சாவுகிலையைக் கொண்டேனே - காதல்மிகுத்து
சகியாத்துயரங் கொண்டேனே

வசனம்.

குமாரியாமீ? நீ கோபித்துக்கொள்ளக்கூடாது. என்னவோ பிராரத்தவினை யிருப்பதினால் தான் எனக்கவள்மீ தெண்ணமுண்

டாயிற்று. அப்படியில்லாவிடில் என்மனம் அங்கே செல்லுமா! அது முதல் என்மனம் படுந்துன்பம் ஆண்டவனுக்குத்தான் தெரியும். என்னாற்றுங்கமுடியவில்லை. இன்னுஞ் சிறிது தாமதப்படுமானால் எனக்கு முடிவுகிட்டிவிட்டதென்றே சொல்லவேண்டும்.

உன்னாலேயாகு மம்மணி - இந்தநன்றியை
ஒருபோதும்மறவே னம்மணி
என்மேல்தயைவைத் தம்மணி - கூட்டிவைத்தால்
எளியேன்பிழைப்பே னம்மணி

வசனம்.

எவ்விதத்தும் அம்மாதரசியை யான் அனுபவிக்கும் பாக்கியத்தை நீ எனக்குத்தராவிடில் இந்த இராச்சியம் என்னோடு முடிவுக்கு வந்துவிடுமென்பது நிச்சயம். நீ இந்த இராச்சியம் அந்தநிலைமைக்குவராதபடி பாதுகாத்து இரட்சிப்பது உன்னுடைய தயவல்லாமல் வேறொன்றிருப்பதாக நான் நினைக்கவில்லை.

குமாரியாயி. சிந்து.

என்னவார்த்தை சொன்னீர்
என்னவார்த்தை சொன்னீர்
இழிவென்பது உன்னீர்
மன்னவர்க்கிது நெறியோ - ஐயா
மன்னவர்க்கிது நெறியோ

வசனம்.

மகராஜா சொல்லுவது நீதியல்ல, என்னவார்த்தைசொல்லுகிறீர்கள், இந்த அடிமையைப்பார்த்து அது சொல்ல எப்படி மனந்துணிந்தீர்கள். இந்த இழிந்தசொல்லை மண்டலேஸ்வரராகிய தாங்கள் சொல்லத்தகுமா ?

எங்கள்குலம் வேறு
உங்கள்குலம் வேறு
இதையெண்ணி மனந்தேறு
இங்கிதுவிழி வல்லவோ - மன்னவனே
மங்கைநானினுஞ் சொல்லவோ

வசனம்.

குலத்தினாலே மகாராஜாவுக்கு எங்களோடு தொடர்பிருக்குமானாலும் ஒருவேளை மகாராஜாகருத்து குற்றமல்லவென்று சொல்

லலாம். அதைத் தாங்கள் கருதவில்லையே. ஒரு அற்பப்பெண்ணாகிய இந்த அடிமையா தங்கட்கு எடுத்துச்சொல்லவேண்டும்.

தரு.

கன்னியவள் தானே
கருத்தையறி யேனே
கலங்குவாளவள் தானே
என்னமாய் கேட்பேனே - உன்றனிட
இருந்துயர் தீர்ப்பேனே

வசனம்.

அவள் இன்னும் கல்யாணமாகாதவள். மகாராஜா இப்படி ஒரு காரியத்தைக் கருதினால் அவள் கதி என்னாகும். அவள் கருத்தெப்படியோ. மற்றப் பெண்களாயிருந்தால் கேட்டுப் பார்க்கலாமென் றுயினுஞ் சொல்வேன். அவளுக்கு முன்னே நான் பிறந்து அவள் பிறந்தது முதல் இதுவரையும் அவளைவிட்டு ஒரு நொடிப்போதும் பிரியாமலிருந்து அவள் குணங்களை யெல்லாம் தெள்ளத்தெளிய வுணர்ந்த நான், எப்படி அவளிடம் இந்தவார்த்தையைப்போய்ச்சொல்லலாம். அவள் கடவுட்பத்தியொன்றே தனக்கு விநோதப்போக்குக் காலவிளையாட்டாக வுடையவள். நீதிகளைக்கனவிலு மறவாத குணவதி. அவளிடத்திற்போய் நானிதைச் சொல்வேனானால் அவள் மனங்கலங்கிவாடுவாளே. நான் எவ்விதம் போய்க்கேட்பேன். எப்படித்தங்களுடைய துன்பத்தைத்தீர்ப்பேன்.

அரசன்-தரு-முகாரி-சாப்பு.

என்மேல்கோபஞ்செய்யா - தெனக்
கிந்தவுதவி செய்வாய்.

சரணங்கள்.

வர்மம்வையாமலே மங்கையைநீசேர்த்தால்
வந்தனஞ்செய்வேனம்மா - மிகு
தர்மமுனக்குண்டு என்மேல்தயைசெய்து
தையலையழையு மம்மா நீ (என்)

பாரிலளவில்லா பாக்கியந்தானுண்டு
பட்சமாய்காணிருப்பேன் - கற்றோர்
காரிகையைக்கைவிடாததுபோலவிக்
காரிகையோ டிருப்பேன் நீ (என்)

நாடெங்கும்மென்னைப்பணிவார்கள் நானந்த
நங்கைதனைப்பணிவேன் - நொந்து
வாடுமெனதுமனம்போல்முடித்தால் நான்
மையல்தணிந்திடுவேன் நீ (என்)

வசனம்.

குமாரியாமீ, அப்படிச் சொல்லலாகாது அந்த மாதரசியைத் தயைசெய்து தந்தால் உனக்கு மிக்க புண்ணியமுண்டு. கோபங் கொள்ளாதே. உனக்கு அநந்தகோடி வந்தனம். நீ அதுசெய்தால் அவளே பாக்கியவதி. என்னுடைய பாக்கியமெல்லாம் அவளுடையபாக்கியமே. என்னுடையபட்சம் அவளையன்றி வேறிடத்திற்செல்லாமல் கற்றவர்கள் காரிகையென்னும் இலக்கண நூலைக் கைவிடாததுபோல நான் உனது தங்கையாகிய இலக்கணக்காரிகையைக்காப்பேன். உலகமெல்லா மென்னை வணங்க நானவளை வணங்குவேன். நீ செய்யுமுதவியால் என்மையல் நோய்தணிந்து துன்பமொழியும்.

குமாரியாமி-தரு-கலம்பகம்-ஆதி.

பல்லவி.

ஐயாராஜனே - என்னுலேவிது.
ஆகாதாகா (தை)

அநுபல்லவி.

செய்யாவினையது செய்தால்பழியுண்டு
செய்யாதேமையலாலே நையாதேதுயர்கொண்டு (ஐயா)

சரணம்.

கொற்றவாமிகவும் நத்தியவள்மேல் மனம்
கொண்டுவருந்துகிருய் இதுவோவுமக்குக்கணம்
சற்றுமெண்ணுமல் சாற்றுதல்சரிதானே
சரிதான் சரிதானே - ஐயா
சரிதான் சரிதானே
முற்றுமிதனுலேயோ பெரும்பழிவந்து சேரும்
மோகத்தால்கெட்டவரைமுழுதும்நினைத்துப்பாரும்
உற்றபுகழ்ப்பெறு முத் தமனே உன்னூரும்பேரும்
உலகமெல்லாமறியும் இதை யெண்ணிமனந்தேரும் (ஐ)

யாராயினுமென்ன பாவபுண்ணிய மென்று
யெண்ணிப்பார்க்க வேண்டாமோவிதுவோநன்று
தாராளமாகவென்முன் நாணமதனைவிட்டு
தவிக்கிறாய் மதிகெட்டு - ராஜே
தவிக்கிறாய் மதிகெட்டு
வாராப்பழிதன்னை வலிய வழைக்கிறாய்
மையலிலழுந்தியுன் பெருமையு மிழக்கிறாய்
ஆராய்ந்திடாமலே அவசரப்பட லாமோ
ஆய்ந்தோய்ந்துபாராதார் தாஞ்சாவதறியோமோ (ஐ)

வேந்தரிந்தப்பழி விளைப்பது நலந்தானோ
வேலிபயிரைமேய்ந்திடல் கலியுகந்தானோ
சாந்தமில்லாமல் பேசுவதுஞ் சம்மதந்தானோ
சதிதான் சதிதானோ - அரசே
சதிதான் சதிதானோ
நீந்தற்கரியகாமக் கடலிலேன் வீழ்கிறாய்
நிருபனாயிருந்தும் என்னையேன் தாழ்கிறாய்
சோர்ந்திடாமலுன்றன் சுயபுத்தி தனைவிடு
தூயகற்புடையோரைத் தெய்வம்போல் தொழுதிடு (ஐ)

வசனம்.

மகாராஜா, என்மீதுகோபிக்கலாகாது. என்னால்அந்தக்காரியம் முடியத்தக்கதல்ல, தாங்கள் கேட்கத்தக்கதுமல்ல, செய்யத்தொடங்கினாற்பழியேயன்றிப்பயனொன்றுமில்லை. காமமயக்கங்கொண்டு செய்யத்தகாதவைகளைச் செய்தால் துன்பத்திற்காளாகவேண்டிவரும். இது சாமானிய மனிதர்களுக்குமாத்திரமல்ல. மகாசக்கரவர்த்திகளும் செய்யத்தகாதகாரியங்களைச்செய்தால் துன்பத்துக்காளாகியொழிவார்கள். ஒரு அற்பப்பெண்ணைக் காதலித்து வருந்துவதுநல்லகுலத்திற்பிறந்த முடிவேந்தராகிய தங்கட்குமரியாதையுமல்ல. எந்தவகையிலும் இது பழிதான். உலகமுழுதும்பரந்த தங்களுடைய பேரும் சீரும்நிலைக்கவேண்டுமானால் தாங்கள் இந்தஎண்ணத்தை முற்றும் ஒழிக்கவேண்டும். பாவபுண்ணியங்களைப் பகுத்தறியாமல்முறைதவறி மோகத்தில்வீழ்பவர் யாவர்? அறிவைக்கைவிட்டு இப்படித்தவிப்பது அறிவுக்கோராலயமாகிய தங்கட்குக்கூடுமா? தங்கள் குலத்திற்கே முற்றும் அடாத இந்தப்பழியைத் தாங்களே வலிந்தழைக்கிறீர்களே. ஐயையோ தாங்கள் ஏன் இப்படி

மயங்கினீர்கள். ஒருவராலும்வெல்லப்படாத தங்கள் அறிவு ஒரு அற்பமோகத்தின்முன் நில்லாமற்போகுமானால் மற்றவர்களை எப்படிப்பேசலாம். ஒருவருக்கு ஒருபொருளின்மீது விருப்பமுண்டாவதியல்புதான். தனக்குரியதாய்க், கிடைக்கக்கூடியதாய்த், தன்னிலைமைக்கேற்றதாய், தான்செல்லுதற்குரிய இடத்ததாய்ச், சென்றாற் பழியில்லாததாய் உள்ள பொருளாவென்று ஆராய்ந்து முயலவேண்டும். அப்படியன்றித் தனக்கு ஒருவாற்றானுந் தகாத ஒரு பொருளைவிவேகிகள் காதலித்து வாடுவார்களா? ஆய்ந்தோய்ந்து பாராதார் தாஞ்சாவக்கடவர் என்பது சாமானியபழமொழி. சாமானிய மனிதர்க்கே இந்தப்பழமொழி அவசியம் வேண்டுமானால், உலகத்தைத்தாங்கும் அரசர்க்கு இன்னும் அது எவ்வளவு அத்தியாவசியமாகவேண்டும். நிலத்தில்முளைத்த பயிரை அதைக்காக்க அமைத்த வேலியேமேய்ந்துவிடுமானால் அவ்வேலி இருந்துபயனென்ன? இதைக் காலவிகற்பம் என்றுதான்சொல்லவேண்டும். தகாதகாரியத்தைச் செய்யமுயன்று சாந்தத்தைக் கைவிட்டீர்களே. இது என்னவினை! என்ன கொடுமை மகாராஜா, கற்புடையபெண்டிரைத் தெய்வமென்று கருதில் நல்லொழுக்கம் கைகூடும்.

அரசன். வண்ணச்சந்த விருத்தம்.

தாளம் - திரிபுடை.

எட்டுத்திசை வட்டப் புவியுமெம னக்குப்பய மூற்றுத் திறைநிதி
இட்டத்தொட ளித்துப் பணிகுவ தறியாமல்
இச்சித்திடு பச்சைக் கொடியவள் கச்சுப்புனை சித்ரப்பணிதிகழ்
திக்குச்சிலை யத்தற்கணிமுடி யெனவீறி
மட்டற்றும தர்த்துப்புளகித மூற்றுச்சுண மூற்றுத் திலகமும்
வைத்திட்டதெ னப்பொற் றிதலையு மிகமேவி
மத்தக்கய மெற்றித் தடமுடி வெற்பைக்குனி வித்துக் கருமணி
மர்யக்கினி யுத்திக்கவினுர வெழிலாளை
சித்தத்தினி லேத்துக் கனமய லுற்றுச்செய லற்றுச் சுவையெழு
தித்தித்திடு தப்பற் றிருவிழி தயிலாதே
திக்கற்றவ ரொத்துத் தயருற மெற்குக்கனி வுற்றுத் திருகிகர்.
செப்புச்சிலை யொத்தக் குமிரியை யருளாதே
மெத்தக் கெரு வித்துச்சிறிதும னத்திற்பய மற்றுப் புருடர்முன்
வெட்கத்தைவி டுத்துப்பலமொழி புகல்[illegible]யேல்
விக்கிப்புனல் கக்கிச்சொரியவு றைக்குட்படு கடகத்திலேவிதொ
வெட்டித்தலை சத்தத்துணிகுவன் மடமாதே.

வசனம்.

குமாரியாமீ, என்ன நியாயம்பேசுகிருய். என்னை இன்னுனென்று நீ யுணரவில்லையோ. உணர்ந்திருந்தால் இப்படிச்சொல்லவர மாட்டாய். எந்த அரசன் எனக்குக்கீழ்ப்படாதவன். நானே அவளை விரும்பி ஒயாக்கவலையோடு மெலிகிறேனென்றறிவித்தும் அளளைக் கொண்டுவந்துவிடாமல் என்முன் நாணஞ்சிறிதுமின்றி ஏதேதோ நியாயங்கள் பேசுகிருயே. நான் கொஞ்சம் எளிமையைக் காட்டிக்கொண்டதனுலன்றோ அச்சமின்றி நீட்டிநீட்டிப்பேசுகிருய் பெண்ணென்றிரங்கிக்கொஞ்சம் தயை பாராட்டினுல் உனக்குத் தெரிந்த அதிகப்பிரசங்கங்களை யெல்லாம் கொட்டிக் கொட்டியளக்கிருய். ஜாக்கிரதை. இனியும் என் சொல்லுக்கடங்கி என் விருப்பப்படிசெய்யாவிடில் இரத்தங்கக்கத்தலையைவெட்டியுருட்டுவேன் பேதை என் கெட்டுப்போகிருய்.

குமாரியாமி (அரசன்முன் சம்மதித்தவள்போல்சொல்கிருள்).

கட்டளை கலிப்பா.

என்னசொன்னுலுங்கேளாமலேமன்னு
　　எனைவருத்துவதாலேயுன்னிஷ்டம்போல்
கன்னிதன்னைக்கண் டுன்றன்மயலெல்லாம்
　　கனிந்திடச்சொல்லிக்காதலுண்டாக்கியே
உன்னைச்சேருமுபாயம்புரிந்தபின்
　　உடனேயாள்விட்டனுப்புகிறேனையா
இன்னஞ்சஞ்சலங்கொள்ளாதிருமினி
　　யானுமேகுவேனென்றனிடத்திற்கே.

வசனம்.

மகாராஜா, இந்த ஏழையடிமைமீது இவ்வளவு வருத்தப்படலாகாது. நான் உலக நியாயத்தைச்சொன்னேனன்றி ஒன்றும் விஷ்ப்பமாய்ச் சொன்னேனில்லை. அது மகாராஜாவுக்குச் சம்மதமில்லாவிடில் கருத்தை நிறைவேற்ற எவ்வகையிலும் முயற்சிக்கிறேன். என்னுல்லியன்றமட்டும் மகாராஜா கருத்துக்குடன்படும் உபாயத்தைச்செய்து இங்கு ஆள் அனுப்புகிறேன். தாங்கள் இனிக்கவலைப் படவேண்டாம். நான் போய்வரலாமா ?

அரசன். வ-ம்.

குமாரியாமீ? அதுதான்சரி. அதைவிட்டு நீ ஏதேதோபேசிவிட்டாய். தயைசெய்து நீ அதுசெய்தால்மிகவுபகாரமாயிருக்கும். நீ

விவேகி. உனக்கு நான் அதிகமாய்ச்சொல்லவேண்டுவதில்லே. விரைவில் எனக்கு நல்ல செய்தி அனுப்பவேண்டும் போய்வா.

(போகிருள்)

---

பதின்மூன்றுங்களம்.

இராணி. வ-ம்.

குமாரியாமி? சங்கதியென்ன? விசனப்படாமற்சொல். அவர் என்ன கேட்டார்? நீ என்னசொன்னுய். அதைச்சொல்லம்மா?

குமாரியாமிசொல். கண்ணி

ஆகிரி அடதாளசாப்பு.

மன்னவனுரைத்தசொல்லே என்னவென்றுரைப்பேனென்றன்
மனமும் நடுங்குதையோ என்னம்மா
இன்னவிதமென்றறிந்தால் இவ்விடம்வரவேமாட்டேன்
இச்சைகொண்டா ரிச்சைகொண்டா ரென்னம்மா

வசனம்.

அவர் கேட்டகாரியத்தைச்சொல்ல மனம்நடுங்குதே. இப்படி வருமென்று தெரிந்தால் நான் இங்கே வரவேமாட்டேனே.என்ன செய்வேனம்மணீ.

இராணிசொல் தரு.

புன்னுகவராளி சாப்பு.

ராஜனிந்த எண்ணங்கொண்டாரா - ஐயோ
ராஜநீதியுமவர் விண்டாரா
நாசகாலம்வந்து மூண்டதோ புவிமீது
ஞாயமோயிதையாருங்கேட்கில்நகைப்பார்தீது (ராஜ)

வ-ம். அப்படியா, என்ன காலத்திற்காக அவருக்கிந்த எண்ணம் வந்ததோ.

பாபபுண்ணியமென்றும் பாராரோ - துஷ்ட
ராவணன்கதியெண்ணித்தேராரோ
மேவகினைத்ததால் மேன்மையெல்லாம்போச்சே
வேலிபயிரையே மேய்வதுபோலாச்சே (ராஜ)

வசனம்.

புண்ணியபாவத்திற் கஞ்சவேண்டாமா? இதென்ன கொடுமை. இராவணன் எதனுலே கெட்டானென்பதை யாவினும் அ

சன் நினைக்கவில்லையே இதனாலே பெருமையழிந்து இருமையுந் துன்பந்தானே. வேலியே பயிரை மேய்ந்தால் பயிருக்கார்காவல். குமாரியாமி நீ வருந்தாதே.

குமாரியாமி. கண்ணி.

கன்னிகருத்தறியேன் கணவனுமூரிலில்லை
  கலக்கமென்னவருமோ யென்னம்மா
இன்னும்பன்னிச்சொல்லவோ யெங்கள்குலம்வேறன்றோ
  யாருந்துணையில்லையே யென்னம்மா

வசனம்.

அம்மணீ! இதற்கு நானென்னசெய்வேன். இவ்வேளை யார் துணை எனது காதலரும் ஊரிலில்லை அவர் இருந்தாலும் இதமாய்ப்பேசி மகாராஜாவின் கருத்தை மாற்றினும் மாற்றுவார். நானோபெண். நான் மறுத்துப்பேசினால் மகாராஜா கோபிக்கிறார். பயமாயிருக்கிறது அவமரியாதையாகவும் வார்த்தைவருகிறது. ஆகட்டுமென்று சம்மதித்தும் வந்துவிட்டேன். என் தங்கையின்கருத்து எனக்குத்தெரிந்தாலும் தீரமாக அதை யனுசரித்துப்பேசி முடிக்கலாம். அவள் கன்னி. எந்தநாயகனை அவள் மணஞ்செய்யக் கருதியிருக்கின்றாளோ அதுவுமறியேன். இந்த தர்மசங்கடத்திற் கென்னசெய்வேன்.

இராணி.

மன்னனுக்குப் புத்தி சொல்லியே - கொண்ட
மையலையகற்றுவேன் மெல்லியே
இன்னதையுன்றன்கணவற்குச் சொல்லாதே
யியம்புவாயானா லவமானம் பொல்லாதே (ராஜ)

வசனம்.

குமாரியாமீ? நீ அஞ்சாதே நான் எவ்விதத்திலாவது மகாராஜாவுக்கு இதமாய் நீதிகளைப்புகட்டி அவர் கொண்டஎண்ணத்தை மாற்றுகிறேன் இதைவெளியிற் சொல்லாதே, சொன்னால் வெட்கம் அழுதால் துக்கம் என்ன செய்யலாம். கௌரவத்தை யோசி?

குமாரியாமி.

மானம்போகவுங் காலம்வந்ததே யென்செய்வேன்
  மனமுங் கலங்குதையோ யென்னம்மா
ஏனோயிந்தத் துயர்க்கா ளரனும் தெரியவில்லை
  யீசன்செயலிதுவோ யென்னம்மா

வசனம்.

இப்படியும் அவமானமடையக் காலம்வந்துவிட்டதே இந்தத் துன்பத்திற்கு நாங்கள் ஆளாகலாமா, ஆண்டவன் செயலெப்படி யோ? "அன்றெழுதினவன் அழித்தெழுதப்போகிறானா" "கோட்டையிற் பெண்பிறந்தாலும் போட்டபுள்ளி போகாது" வருவதுவழியில்நிற்காது எதுவந்தாலும் எல்லாம் சிவப்ரீதியே.

இராணி.

ஆசைவெட்கமறி யாதல்லோ-விதை
யாருக்குச்சொன்னாலும் பழியல்லோ
நேசக்குலமகளே நீயுன்மனம் பொறுப்பாய்
நிந்தைவராமலுன்றன் தங்கையைப்பாதுகாப்பாய் (இராஜ)

வசனம்.

அம்மா? ஆசைவெட்கமறியுமா? அறியாது, நமதுமகாராஜா அறியாமையால் இந்த எண்ணங்கொண்டார் அதை நாம்தான் பொறுத்து அவரையுந் திருத்தவேண்டும், நல்லகுலத்திற் பிறந்தவர்கள் தங்களுக்கு நேர்ந்தகுறையைத் தாங்களே தூற்றமாட்டார்கள். அதுபோல் உங்கட்கு வந்தபழியை நீ பிறரறியாமல் மறைத்து உனது தங்கையையும் காத்துக்கொள்வதுதான் புத்திசாலித்தனம், உனக்கு நான் விசேடமாய்ச் சொல்லவேண்டுமா நீ சீக்கிரம் கிருகம்சேர்ந்து ஜாக்கிரதையாயிரு.

குமாரியாமி. வசனம்.

அம்மணி ? எல்லாம் சிவன்செயல் நான் போய்வருகிறேன் தயவிருக்கட்டும் (போகிறாள்)

---

இரண்டாம் அங்கம். முதற்களம்.

இடம்—இரஞ்சிதபூஷணி யிருக்கை.

நிகழ்ச்சி—குமாரியாமி, இரஞ்சிதபூஷணி விசாரம்.

இரஞ்சித பூஷணி

வசனம்.

அக்காள் ? அக்காள் ? என்ன பேசாமலிருக்கிறீர்களே, அரசன் என்னசொன்னார், என்ன நடந்தது, ஒன்றுந்தெரியவில்லையே.

குமாரியாமி தரு

துஜாவந்தி ஆதி.

என்னசொல்வே னிந்தக்கொள்ளையை - ஐயோவென் தங்காய்
என்னசொல்வே னிந்தக்கொள்ளையை
அந்நீதமிதைப்போலுண்டோ ஆரிடத்திற்சொல்வோமிதை
ஐயோ மனநடுங்குதே ஆணங்கே பெண்ணமுதே (என்)

வசனம்

தங்காய் என்னவென்றுசொல்வேன் இந்தஅநியாயத்தை. எப்படிச்சொல்லுவேன். சண்டாள மன்னன் சொன்னகாரியஞ் சொல்லத்தக்கதா, அதைநினைக்க மனமுநடுங்குகிறது சொல்ல நாவும் எழவில்லை. (சற்றுசிந்தித்துச்சொல்கிறாள்.)

மன்னவன்தேவியிடஞ் சென்றேன் - எனையழைத்த
தென்னவிதமம்மா வென்றேன்
அன்னதுதெரியாதென்றாள் உன்னிடக்ஷேமமேதென்றாள்
கன்னியுன்க்ஷேமமேதென்றாள் தன்சுகமுமின்னதென்றாள் (என்)

வசனம்,

அரசன் கருத்து இராணிக்குத் தெரியுமேயென்றெண்ணி முதலில் இராணியிடம்சென்றேன். அவள் தனக்குத்தெரியாதென்றாள், க்ஷேமாதிசயங்கள் பேசிக்கொண்டிருந்தோம். நீ போய் அவர் கருத்தையறிந்து அதற்குத் தக்கப்படி பேசிவிட்டுவா மறுத்தொன்றும் பேசாதே ஒருக்கால் அவருக்குக்கோபம்வரும் என்றாள். அப்படியே நான்.

மன்னவனிடம்போய் நின்றேன் - எனையழைத்த
வன்மையென்னசொல்லுமென்றேன்
என்னையுஞ்சுகமோவென்றான் உன்னையுஞ்சுகமோவென்றான்
அன்பருஞ்சுகமோவென்றான் மைந்தருஞ்சுகமோவென்றான்(என்)

வசனம்.

இராசனிடம்போய்நின்றேன். சந்தோஷமாகவே க்ஷேமாதிசயங்களைவிசாரித்தான். பிறகுதான் சங்கதிபேசத்தொடங்கினான் பாவி. நான் எப்படியம்மா மனம்வந்து சொல்வேன்?

காவில் வுன்னைக்கண்டானாம் - கண்டவுடனே
ஆவல்மிகக் கொண்டானாம்
ஏவினானாந் தூதுமுன்னே மேவினானாந் தன்பந்தன்னை
தேவியா யணையவுன்னை சேர்த்திட வேண்டினானென்னை (என்)

வசனம்.

சோலையில் உன்னைக்கண்டானும் மோகங்கொண்டானும் தூதரையுன்னிடம்விட்டானும். தேவியாகவேணுமாம். என்னென்னவோபுலம்பினான் பைத்தியக்காரன். நான்என்னசொல்வேன்.

இரஞ்சிதபூஷணி. வசனம்.

நீங்கள் அதற்கொன்றுஞ் சொல்லவில்லையே?

குமாரியாமி. வசனம்.

நான் என்ன சொல்லலாம். ஏதேனும் மறுத்துச்சொன்னால் கோபம். அரசனுடையகோபம்பொல்லாது. அரசன் கோபத்திற் கிலக்கானவர்கள் எப்படிவாழ்வார்கள்? அப்படியிருந்தும் நானும் என்னாற்கூடியவரையில் நியாயங்களைப் பேசிப்பார்த்தேன். நயந்துஞ்சொன்னேன் பயந்துஞ்சொன்னேன் கும்பிட்டேன் காலைப்பிடித்திரங்கினேன். ஒன்றும் பயன்படவில்லை ஓரேமூர்க்கமாய் நிற்கிறான். கடைசியாக நீ அவளை என்னிடங்கொண்டுவந்து சேர்ப்பிக்காவிடில் சிரசாக்கினை செய்துவிடுவேனென்றுஞ் சொல்லிவிட்டான். அவனுக்கப்பொழுது நான் உடன்பட்டவள்போல் நடிக்காவிடில் நான் இங்கே திரும்பிவரப்போவதுமில்லை. அவனைவிட்டு எவ்விதத்திலேனுந் தப்பிவரவேண்டுமே அதற்காக அவன் சொல்வதற்கெல்லாம் உடன்பட்டு விடைபெற்றுத் தப்பித்துவந்தேன் இன்னதுசெய்வதென்று எனக்குத் தெரியவில்லை.

இரஞ்சிதபூஷணி. தரு.

தனாசரி-சாப்பு.

எனிதற்கஞ்சுகிறாய் என்
அன்புள்ள தமக்கையாரே (எனி)

நானிதற்கஞ்சவில்லை அம்
மன்னனென்னையென்னசெய்வான் நீ
நம்பிடுவாயென்சொல்லை நம்
ஆண்டவனுதவி செய்வான் (எனி)

மன்னவனென்னிடம்வந்தால் மா
நீதிகளைச்சொல்லுகிறேன் துன்
மார்க்கமாய்துயர் தந்தால் நான்
தப்பித்துக்கொள்ளுகிறேன் (எனி)

கற்பினைகாத்துக்கொள்வே  னம்மா
மையல்கொண்டுனையுமன்னன்  தன்
கருத்தையுமாற்றிவெல்வேன்  நீ
ஐயங்கொள்ளாதே சொன்னேன்  (எனி)

வசனம்.

அக்காள்? தாங்களிதற்கேன் அஞ்சவேண்டும். எனக்கதைப்பற்றி இப்பொழுது பயமில்லை. நான் சம்மதியாவிடில் அவனென்னையென்னசெய்வான். திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணையாய் நிற்கும். இதுநிச்சயம். நீங்கள் அவனிடம் சொல்லிவந்தபடி என் கருத்தை அவனுக்கு அறிவிக்காமலிருந்துவிட்டால் அவன்கட்டாயம்வருவான். வந்தால் பலநீதிகளாலும் எவ்விதத்தும் அவன்மனதைத் தடுத்துப்பார்க்கிறேன். கேளாமல் மேலுந் துன்பம் விளைக்கவந்தால் பார்த்துக்கொள்ளுகிறேன். அவனைத்தடுக்கமுடியாதா? எந்தவகையும் என் கற்புக்கீனம் வைத்துக்கொள்ள மாட்டேன். அவன் கருத்தைமாற்றி அவனைவெல்லமுடியாதா? நீங்கள் சந்தேகங்கொள்ளவேண்டாம்.

குமாரியாயி. வசனம்.

என்னவம்மா, நீ சொல்லுகிறாயே. பெண்ணொருத்தி எவ்வளவு கெட்டிக்காரியாயினும் பேதமையென்பது அவளைவிட்டொழியுமோ? பேதமை யென்பது மாதர்க்கணிகலமென்றே பேசுகிறார்கள். நீ நல்ல நீதிகளை யெடுத்துப்பேசுகிறாய். நல்ல சூழ்ச்சிகளைச் செய்கிறாய். அவன்மனம் அதற்கிடங்கொடுத்தால்தா[illegible]வன் நல்ல விவேகியாயிருந்தால் நீ சொல்லுவதுசரி. அவனோ சீவகாருணியமில்லாத்தீயன் பிறர்வருத்தம்அறியாப்பேயன். நீதியறியான். பிறரது நிலைமையுந்தெரியான். கற்புங்காணான் கனமும்பேணான். காமமொன்றேகருதியழிவான். அந்தப் புதுவாழ்வுபடைத்தசூரியனிடத்தில் நீ சொல்லும் பொன்போலும் நீதிகள் என்னபயன்படும். நீ உடன்படாமைகண்டு உன்வார்த்தைகளை யெடுத்தெறிந்து ஏதேனுந் தீங்குசெய்யநினைத்தால் அவருமில்லாதவேளையில் பெண்களாயிருந்துகொண்டு நம்மால் என்ன செய்யமுடியும். அவன் செய்கை தீயதேயாயினும் அரசனென்னும் எண்ணிக்கையிலிருப்பதால் அதிகாரம்பெரிது அதைத்தடுக்க யாரால்முடியும். ஆதலாலே நான் ஒன்றுநினைக்கிறேன் இப்பொழுதே சப்பரகாமத்திற்காளனுப்பி அவருக்குச் செய்திதெரிவித்தால் அவர் உடனே

வந்துவிடுவார். பிறகு அவர் பார்த்துக்கொள்வார். அப்படிச்செய்யலாமா உன் கருத்தென்ன ?

இரஞ்சிதபூஷணி. வசனம்.

அப்படியுஞ் செய்யலாம். ஆமாம் அதுதான் சரி. அப்படியானால் இப்பொழுதே கடிதமெழுதுங்கள். அீத்தான் வந்தால்தான் அந்தப்பேயன் அடங்குவான்.

குமாரியாமி. வசனம்.

ஓலையுமெழுத்தாணியுங்கொண்டுவா. சமாசாரத்திற்கு யாரையனுப்பலாம் ? நமக்கு உற்றவர்களாயிருக்கவேண்டும். மற்றவர்களானால் ஒருவேளை வெளிக்குவந்துவிடும். வெளிக்குத் தெரியக்கூடாது. சமயற்காரனை அனுப்பலாமா ?

இரஞ்சிதபூஷணி. வசனம்.

அவன் நல்லவன் வெளியிடமாட்டான் அவனையே அனுப்பலாம்.

குமாரியாமி. வசனம்.

யாரடி அங்கே, அடீசமயற்காரனைக் கூப்பிடு. இரஞ்சிதபூஷணீ நீபோய் ஓலையுமெழுத்தாணியுங் கொண்டுவா.

(அவள் அது கொண்டுவர கடிதம் எழுதுக)

அகவல்.

ஆருயிர்க்காதலா அடியாள் வந்தனம்
தேவரீர் சமுகஞ் சிறியாளெழுதும்
விண்ணப்பமிதனை விரைந்துகண்டருள்வீர்
தாரலர்சோலையில் தங்கையாளேகினள்
தாதிமார்தம்மொடுத் தான்விளையாடினள்
பார்தருமன்னவன் பவனிவந்தெய்தினன்
பாவையைக்கண்டுவந் தாவலாய்த்தாவினன்
நேரினில்தூதரை யவளிடமேவினன்
நேரிழைமறுத்தபின் னழைத்தெனைவினவினன்
காரிகைசம்மதிக் காளெனக்கூறினேன்
கட்டளைமீறினை யெனவெனைத்தூறினன்
கோரியபடிக் காகட்டுமென்றோதியான்
வந்தேன்விரைந்து வந்தருள்வீரே.

வசனம்.

(சமையற்காரனைநோக்கி ஓலையைக்கொடுத்து)

குணரத்நம்! சிக்கிரம்புறப்பட்டுஒருஇடத்தும்நிற்காமல் இதை ஒருவருக்குங் காட்டாமல் நேரே சப்ரகாமத்திற்குப்போய் எஜமானிடத்தில்கொடுத்துவிட்டுவா? சிக்கிரம்புறப்படு. யாரேனும்கேட்டால் சப்ரகாமம் போகிறேனென்று சொல்லாதே. வேறேதேனும் போக்குக்காட்டிவிடு. தெரியுமா. சாப்பிட்டுச்சிக்கிரம்புறப்படு.

குணரத்நம். வசனம்.

அப்படியே இதோ போய்வருகிறேன்.

---

பதினெட்டாம் களம்.

இடம்—சப்ரகாமத்தில் ஏலப்பளை இருக்கை.

நிகழ்ச்சி—சமயற்காரன் கடிதத்தைத் தருகிறான்.

ஏலப்பளை. வசனம்.

குணரத்நம், என்னசெய்தி, பிள்ளைகளெல்லாம் க்ஷேமமா. இரஞ்சிதபூஷணி சுகமா.

குணரத்நம். வசனம்.

எல்லோரும் க்ஷேமமாக இருக்கிறார்கள். எஜமானி அவர்கள் இந்த ஓலையைக்கொடுத்தார்கள்.

ஏலப்பளை. வசனம்.

எங்கே நீ போய் வெளியில் இரு கூப்பிடுகிறேன். (அவன் போக)

(அவன் அதைக்கொடுக்க வாங்கி வாசித்துப்பார்த்துச் சற்று நேரம் பேசாதிருந்து)

ஏலப்பளை, தனிமொழி.

அடபாதகா, ஏன் இப்படிக் கெட்டுப்போனான், இவனுக்கென்ன கேடுகாலமா? நம்மிடத்திலேயே வந்துவிட்டானே. அறிவழிந்துபோனானே: அடேமகடையா; நீ இனி யரசாள்வதைப்பார்க்கிறேன். அடே ஆரங்கே, இங்கேவா (ஒருவன்வர) கண்டிக்கு வண்டிபோடு (புறப்படுக)

## பதினைந்தாங்களம்.

### இடம்—எலப்பளை அரண்மனை.

எலப்பளை. சந்தம்-ஆதி.

கன்னல்மொழிப்பெடை யன்னநடைப்பிடி
கண்ணின்ம ணிக்கினியாய்
மன்னனுனக்கிவ ணின்னல்விளைத்திடு
வண்மையுரைத்திடுவாய்
அன்னவனைக்கொல வின்றுநொடிக்குள
ருந்துணை பெற்றமர்செய்
துன்னியவன்பகை தன்னைமுடிக்கிறே
னுண்மையி துண்மையிதே.

வசனம்.

குமாரியாமீ, நீயேன் கவலைப்படுகிறாய். அவன் நாசமடையுங் காலங்கிட்டிவிட்டது மதிமோசம்போனான். சாமானியயோசனைகளால் அவனைக்கொல்லமுடியாது. கொன்றாலன்றி நமது பயமொழியப்போவதில்லை. நம்மிடத்தில் இப்பொழுது வந்தவன் குடிகளுக்கும் இனித்தீங்கு செய்யாதிரான் அவனைக்கொன்றால் இப்பொழுது நமக்குமாத்திரமல்ல உலகமுழுவதிற்குமே நன்மையாகும். சண்டையினாலன்றி அவனை வெல்லமுடியாது. சண்டைக்குப்பெருந்துணை சேர்க்கவேண்டு[illegible] இப்பொழுதுசென்று வேண்டுந்துணையைத்தேடி எவ்விதத்தும் இனிஅவனாளுகை இந்தநாட்டிற்கில்லாமலே செய்துவிடுகிறேன். நடந்ததென்ன சொல்லுங்கள்.

குமாரியாமி. பரணி.

நாதாநமது நகர்மன்ன ன்
நடுங்காதுரைத்தவார்த்தைத னை
ஏதாயுரைப்பேனையை யோ
யிந்தக்கொடுமையுலகிலுண் டோ.

வசனம்.

நாதா? அவனையென்னசெய்தாலுந்தகும், சித்திரவதைசெய்தாலும் எனக்குச்சம்மதம். பாவி கொஞ்சமும் நினையாமல் என்னென்ன பேச்சுகள் பேசிவிட்டான் இந்த அநீதம் எங்குண்டு.

இருவமது.

போதார்வனத்திலென்தங் கை
போனள்தோழிமாருட னே
வாதார்ந்தவனுங்கண்டு மன
மருண்டான்மயலாலிருண்டா னே

வசனம்.

தோழிமார்களுடன் என்தங்கை சோலையில் விளையாடிக்கொண்டிருந்தாள். அவள் பாவத்துக்காயினுமஞ்சாமல் அவளைக்கண்டு மயங்கினன். என்ன கேடிவனுக்கு?

இருவமது.

தூதேவிடுத்தானிவள்தடுத்தா ள்
துணிந்தேயவன்பாலெனையழைத்தா ன்
மாதேமாதைத்தருகவென்ற ன்
மாருயுரைத்தே னவன்சினந்தா ன்

வசனம்.

கற்புடையகன்னியரையெல்லாம் இவன்மயங்கித்தூதரைவிடுத்தால் அதற்கவர்கள் மயங்கிவிடுவார்களா? இந்தச்சண்டாளனைப் பால எளியகுணமுடையவளா என் தங்கை. இவனுக்கா அவள் யப்படுவாள். கற்புடைப் பெண்டிர்க்கு க்கடவுளுமஞ்சுமே. வள் தக்கமறுமொழிசொல்லிக் கண்டித்துவிட்டாள். அந்த அள ல் அவனுக்குப் புத்திவந்ததா? வெட்கமில்லாமல் என்னையுங் டுகேட்டான் நான் இவன் தாட்சணியத்திற்காக என்தங்கைக் பழுதுதேடுவேனு? நான் இடித்திடித்தும் சொன்னேனே. தையேனுமறிந்தானு? 'தையலார்மயலிற்பட்டோர் தமக்கொரு யுண்டாமோ' 'மூர்க்கரு முதலையும்கொண்டதுவிடா', என் ம் நீதிவசனம் அவன்காதிற்படவில்லை. கடுமையாய்ப் பேசத் தாடங்கினன். நானென்னசெய்வேன் பெண். அவன் அரசன். வனைவிட்டுத் தப்பித்து வரவேண்டுமே. தந்திரமாய் ஆகட்டும் ாய் பார்க்கிறேனென்று வந்துவிட்டேன்.

இருவமது.

தாதேயுலவுங்குழலாளு ந்
தயங்கிப்பயந்தேவருந்துகின்றுள்
நீதேறுதல்சொல்லாவிடி லோ
நில்லாதாவிநில்லா தே

வசனம்.

அவள் என்னசெய்வாள் பாவம் பேதை, கலங்கித்தவிக்கிறாள் நீங்கள் தேறுதல்சொல்லாவிடில் ஏது? அவள் உயிரைவைத்துக் கொண்டிருக்கமாட்டாள்.

ஏலப்பனே. தரு

இந்துஸ்தான்தோடி-அடதாளசாப்பு.

கண்மணியே பெண்மணியே கலங்கிடாதே நீ
ரஞ்சிதம் கலங்கிடாதே நீ
உண்மையாயிதற்கு நானுபாயஞ்செய்கிறேன்
ரஞ்சித முபாயஞ்செய்கிறேன்.
இக்கணமேமன்னவனை யானும் வெல்கிறேன்
ரஞ்சிதம் யானும் வெல்கிறேன்
பக்குவமாய் நான்சமயம் பார்த்துக்கொல்கிறேன்
ரஞ்சிதம் பார்த்துக்கொல்கிறேன்.
பஞ்சரத்திலேயுலாவிக் கொஞ்சுங்கிளியே
ரஞ்சிதம் கொஞ்சுங்கிளியே
அஞ்சிடாதே அஞ்சிடாதே அஞ்சிடாதேநீ
ரஞ்சிதம் அஞ்சிடாதே நீ.
சித்திரமே ரத்தினமே செங்கனகமே
ரஞ்சிதம் செங்கனகமே
மெத்தனமே முத்தினமே மெலிந்திடாதே நீ
ரஞ்சிதம் மெலிந்திடாதே நீ.

வசனம்.

இரஞ்சிதபூஷணீ, இங்கேவா அம்மா, நீ யேன் கவலைப்ப றாய். நானிருக்கும்பொழுது உனக்குக் கலக்கமேன். நான்அதற ஏதேனும் உபாயஞ்செய்யாது விடுவேனா? அந்தச் சண்டாள இதோ ஒருநொடியில் கொலைக்கிறேன். சமயம்பார்த்துக்கொண் ருக்கிறேன். எனக்குத்தெரியும், நீ அஞ்சவேண்டாம்.

கண்ணி.

சஹானா-ரூபகம்.

தேங்கிநின்றிடுஞ் செந்திருநேர் சுந்தரிகாள்
பூங்கொளும்பிற்குப் போய்வருவேன்போய்வருவேன்
ஈங்கிருந்திடில் என்னபயனெனக்
கினிதாகவே மனதாகவே கனிவாய்விடை தருவீரினி (தே)

வசனம்.

குமாரியாமீ, எனக்கிப்பொழுது ஒருயோசனை யுண்டாகின் றது. கொளும்பையாளுகிற ஆங்கிலேயர்கள்தான் இவனுக்குச்சரி. இந்தச் சண்டாளனைத் தொலைக்க அவர்களைவிட இங்கொருவரு மில்லை. இதுதான்நல்லயோசனை இங்கிருந்து வேறு வீண்யோசனை கள் செய்வதிற்பயனில்லை. நான்கொளும்பிற்குப்போய்வருகிறேன்.

ஆங்குநான்சென்று ஆங்கிலேயமந்திரியைப்
பாங்குடன்கண்டு பண்புடனே துன்பமெல்லாம்
சாங்கோபாங்கமாய்த் தாழ்ந்துகூறியே
தண்டுதளங்கொண்டிவனைச்சண்டைசெய்துவென்றிடுவேன்()

வசனம்.

அங்கேபோய் ஆங்கிலேய மந்திரியைக்கண்டு அவரிடத்திற் காரியத்தை விளங்கச்சொல்லிச் சேனைகளைக்கூட்டிவந்தால் இவன் தொலைந்தான்.

சோர்ந்த சிந்தைகொண் டின்னுந்தான் சஞ்சலமேன்
காந்தளஞ்செங்கைக் கண்மணிகாள் பெண்மணிகாள்
சார்ந்தமைந்தரும் நீங்களுமிங்கே
தங்கியிரும் லங்கைநகர் சென்றுவருகின்றேனினி (

வசனம்.

நீங்களினிவருந்தவேண்டாம். பிள்ளைகளைக் கவனமாய்ப் பா ர்த்துக்கொண்டு கவலைப்படாமலிருங்கள். நான்போய் விரைவில் வருகிறேன். அதற்குள் அவன் ஏதேனும் செய்யவந்தால் எவ்வித தந்திரமாயேனும் அவனை நெருங்கவிடாமலும் ஒருகலகமும் விளை யாவண்ணமும் நடந்துகொள்ளுங்கள்.

குமாரியாமி, சந்த விருத்தம்.

மங்காதிலங்கு மாங்கிலேயர்தங்கள் மனதொன்று மறிகிலாமல்
லங்காபுரிக்க ணின்றேநீர்செல்லில் நலிவேது வந்தெய்துமோ
வெங்கோலின்மன்ன னிங்கேது துன்பு விளைவிப்பனோதெரிகிலேன்
எங்கேனுமேகி யஞ்சாமல்வாழ்த லினிதாகு மெங்கள்துரையே.

வசனம்.

இது என்ன? நீங்கள் சொல்வது வேடிக்கையாயிருக்கிறதே ஆங்கிலேயர்களுடைய கருத்தெப்படியோ. அதைமுதலில் அறியா மல் நம்முடைய அவசரத்திற்கேற்றபடி புறப்பட்டால் அவர்களுக்

தும் அதுஉடன்பாடானல்தான்நல்லது. அவர்களே நம்மைத்திரு ப்பிக்கொண்டார்களானல் பிறகு நாமென்னசெய்வது? என்னவி ளையுமோ? ஏதாய்முடியுமோ? பிறகு அது இவனுக்குத் தெரிந் தால் இவன் என்னசெய்வானே? வாய்த்தவிடுப்போய் அடுப்புநெ ருப்பும்போய் மயங்கத்தக்க யோசனைகளை என்னமற்செய்துவிட லாமா? இந்தத்தொல்லைகளெல்லாம் நமக்கேன். கொடுங்கோன்ம ன்னர்வாழுநாட்டிற் கடும்புலிவாழுங் காடு நன்றேயென்று இந்தச் சண்டாளனைவிட்டு வேறெங்கேனுஞ் சென்றயினும் நிர்ப்பயமாய் வாழ்வதுநல்லதென்று நினைக்கிறேன். நன்றய்எண்ணிப்பாருங்கள்.

எலப்பனை. சந்தவிருத்தம்.

கான்பயந்தெழு தேன்பொதிந்திடு கார்குழன்மயிலே
ஏன்பயந்தனை ஏன்வருந்தினை ஏன்கலங்கினை நீ
யான்பயந்திவ னையிருந்திடி லேதமிஞ்சுமினி
கோன்பயந்திட வாங்கிலேயரைக் கூட்டியேவருவேன்.

வசனம்.

குமாரியாமீ, என்னபேதைமையிது. ஒரு அற்பப்பா... நாம் பார்த்து நியமித்த அரசப்பதர் இவனுக்காகப் பயந்து நம் தேசம்விட்டோடுவதா? நன்றய்ச்சொன்னாய். பேதாய் அஞ்சா... ஆங்கிலேயருடையகுணம் எனக்குத்தெரியும். நான் பக்குவ... ய்ச்சென்று எந்தவகையிலும் அவர்களைக் கூட்டிவந்து சேர்க் ...றேன்பார். நமக்குக் கேடுசெய்யவுந்த இந்தச் சண்டாளனைத் தொலைக்காமல் விடலாமா?

எலப்பனையும் பிள்ளைகளும்.

கண்ணி.

எலப்பனை.

பாலரேயும்மிடதாயாருடனிங்கள்பத்திரமா யிருங்கள்
சிலரேயான்மறுதேசஞ்சென்றுவாரேன்சிராகவே யிருங்கள்

பிள்ளைகள்.

ஒப்பேதுமில்லாதஉத்தமதந்தையேஊரெல்லாஞ்சுற்றச்சென்றீர் [ர்
இப்போதுநீர்வந்திரிப்போதேஐயனே எத்தேசம்போறேமென்றீ

எலப்பனை.

லங்கைக்குச்சென்றுநான்இங்கேவருகிறேன்நலியாதிருங்களடா
மங்களமாகவேஉங்களன்னையுடன்மகிழ்வா யிருங்களடா

பிள்ளைகள்.

போனல்வருவதெப்போதுஎப்போதுபுகல்வீரமது அய்யா
சீனப்பதுமைகற்சீர்மைப்பொருளுஞ்சிலவாங்கி வாருமையா

ஏலப்பன்.

பாடம்படித்துப்பகலிலுறங்காமல்பள்ளிக்குப்போங்களடா
நாடெங்குஞ்சுற்றுதாண்மனையில்விளையாடியே வாங்களடா

பிள்ளைகள்.

பாடம்படிப்போம்படைத்தொழில்வித்தைபயில்வோம்
மகிழ்ந்திருப்போம்
ஓடித்திரியோம்அரண்மனைதன்னிலேநாங்கள்
சுகித்திருப்போம்.

ஏலப்பன்-வசனம்.

குமாரியாமீ, நான்போய்வரவா? நீ ஒன்றிற்கும் மயங்காதே, நான் செய்வதெல்லாம் சூழ்ச்சியாகவேயிருக்கும். அதைப்பற்றி நீ யோசியாதே.

குமாரியாமி-கொச்சகம்.

உலங்கொண்டமணிமார்பா உத்தண்டவயவீரா
நலங்கொண்டமன்னர்நடு நாயகமேதாயகமே
பலங்கொண்டமன்னவன்றன் பகைதவிர்க்கவிப்பொழுதே
பொலங்கொண்டவிலங்கைநகர் போயினிதாய்வருவீரே.

வசனம்.

பார்த்துக்கொள்ளுங்கள். உங்களுக்கெல்லாந்தெரியும். உசிதப்படிசெய்யுங்கள். நமக்கதில் இலாபமில்லாதுபோயினும் ஒன்றும் வராதவகையிற் கண்ணுயிருங்கள். அதுதான் நா ட்குச்சொல்வது. போய்வாருங்கள்.

ஏலப்பன்-வசனம்.

இரஞ்சிதபூஷணி, பயப்படாமலிரு. உனக்கொருதீங்கும்வரா தவகை தேடுவேன்.

இரஞ்சிதை-வசனம்.

தங்களையன்றி எனக்கு வேறு துணையில்லை. எப்படியேனும் இந்தச் சண்டாளனுடைய உபத்திரவமொன்றும் என்னைத்தாக்காமற் பாதுகாக்கவேண்டுவது தங்கள்கடமை. இங்கும் வேறு ஆண்

னையில்லை, குழந்தைகளை வைத்துக்கொண்டு நாங்கள் தனி
ய இருப்பது நல்லதல்ல. சீக்கிரம் வந்துசேருங்கள்.

எலப்பனா-வசனம்.

அப்படியே வருகிறேன். இருங்கள். (போக)

---

பதினறுங்களம்.

இடம்—நகர்ப்புறம்.

எலப்பனா-கண்ணி.

செஞ்சுருட்டி-ரூபகம்.

லங்கைநகருக்குநான்சென்று ஆங்கிலேய மன்னனைக் காண்பேனே
சங்கையில்லாமலேயாவையுஞ்சொல்லிச்சபதமுடிப் பேனே
சிங்கனைப்பற்றியேகட்டிப்பிடித்துச் சிறையிலடைப் பேனே
நங்கையர்கற்பையழிக்குமவன்றன் நகரைப்பிடிப் பேனே
மொட்டைத்தலையுடன்ஒற்றைப்பிராமணன் முன்னிதோவாரானே
கட்டைவிறகுதலைமேல்சுமந்தொரு காளையும் வாரானே
எண்ணெய்க்குடத்தையெடுத்துச்சுமந்துமோர் எந்திழைவாராளே
வண்ணமதாய்ப்புதுப்பானையுங்கொண்டோர்மடந்தையும்வாராளே
காடுமலையுங்கடந்தோமினி சப்ர காமந்தெரிகிறதே
நாடுநகருமறியாமலன்பரை நானேயழைத்துச் செல்வேன்.

வசனம்.

ஓ தென்னசகுனம் நன்றாயில்லையே! மொட்டைத்தலையுடன்ஒற்
ராமணன்வந்தான். அதுதான்போகட்டுமென்றாலும் விறகு
எண்ணெய்க்குடமும்புதுப்பானையுமெதிர்ப்படுகின்றனவே!
காலக்கேட்டிற்கோ ஒன்றும் தெரியவில்லை! நாம் எண்ணி
ாவது நாசத்தைப்பற்றித்தானே, நற்கருமத்தை எண்ணிப்
ானால் நற்சகுனமுண்டாகும். சிங்கன் அழிய இது தக்கமான
சகுனந்தான். அதுபோகட்டும். நாம் இப்பொழுது நேரே கொளு
ம்பிற்குப்போவது சரியல்ல. சப்ரகாமம்போய் அங்கு சிலரைத்
துணை கூட்டிக்கொண்டுபோய் ஒருவர்க் கிருவராய்ச் சொன்னால்
இன்னும் நல்லதுதானே.

---

பதினேழாங்களம்.

இடம்—இராஜன் அரண்மனை.

அரசன்.

பிரியே! என்னவிசேஷம் வந்தகாரியமென்ன?

இராணி-தரு.

கமாஸ்-அடதாளசாப்பு.

மன்னா என்னகாரியம் நீர் செய்யலானீர்
இது சரியாமோ (மன்)
இன்னுஞ்சிறியவரோ மண மில்லாதிருப்பவரோ
மன்னவர்களும்மை மதிப்பாரோ
மானபிமானத்தைத்தானெண்ணிப்பாராமல் (மன்)

வசனம்.

பிராணபதீ, தாங்கள் செய்தகாரியம் நன்றாயில்லையே தமக்கிதுசரியோ? தாங்கள் இன்னும் சிறுபிள்ளையா? இன்பத்தையனுபவிக்கத் தங்கட்கு காலமில்லையா? தாங்களிப்படிச்செய்தால் தங்களைப்போன்ற வேந்தர்கள் தங்களை எப்படிமதிப்பார்கள் மதிப்புமானமும் அழியலாமோ?

அரசன்.

பெண்ணேஒன்றும்நான்செய்வேனில்லை நீயேன்
உரத்துப்பேசுகிறாய் (பெண்)
சின்னஞ்சிறியவரோ வென்று செப்புவதுஞ்சீரோ
மன்னரெந்தச்சாதியினும் பெண்ணை
மாமணஞ்செய்வதுநீதியாகும் (பெ)

வசனம்.

மானபிமானத்தைவிட்டு நான் அப்படிச் செய்ததென்ன? நீ உரத்துரத்துப்பேசுகிறாயே. இன்னுஞ் சிறுபிள்ளையாயிருந்து அரசர்க்கடுக்காத எந்தக்காரியத்தைநான்செய்தேன்? அரசர்கள்எந்த சாதிப்பெண்களையும் விவாகஞ்செய்யலாமென்று நீதியில்லையா?

இராணி.

ரஞ்சிதபூஷணிமேல் காதல் மிஞ்சுவதுமுறையோ
அஞ்சிடாம லமைச்சன் தேவியை
அன்பாயழைத்தென்ன சொன்னீர்பழி மன்னர் (மன்)

வசனம்.

தனக்குத் தகுந்த மனைவியிருக்க அன்னிய ஜாதியிலே ப் ந்து நமக்கடிமையாய் ஒரு குடும்பத்திலுள்ள பெண்ணைக் காத பது நீதியோ? இரஞ்சிதபூஷணிமேல் தாங்கள் கொண்டகா நல்லதா? எலப்பளை மந்திரி மனைவியையழைத்து என்ன கே டீர்கள். அது நமக்குத்தகுமா?

அரசன்.

ரஞ்சிதபூஷணிமேல் காதல் மிஞ்சியதுமுறையே
வஞ்சியவள் கன்னிகை தானல்லோ
மந்திரிமனைவியைக் கேட்டது நன்றல்லோ (

வசனம்.

அவள் கன்னிதானே பிறனுக்குரிய ஒருத்தியல்லவே குமாரியாமி அவளுக்குத்தமக்கையாதலினால் அவளிடத்திற்சொல் லாமற்செய்வது சரியல்லவென்று கேட்டேன். அதுகூடாதா?

இராணி.

வேலிபயிரதனை நன்றாய் மேய்வதுபோலாயினை
எலப்பளையின் மைத்துனி யவள்மேல்
இச்சைநீர்கொள்ளுவதேலா திதுநீது (மன்)

வசனம்.

கன்னியாயிருந்தால் நாம் காதலிக்கலாமா? கள்வரினின்றும் காமுகரினின்றும் காத்தக்கற்பிலிறுத்தவேண்டிய நாமே கன்னி யரைக் காதலிப்போமாயின் புண்ணியமும் புகழும் நம்மைவிட்டு எப்படி யொழியாதிருக்கும். பயிரை வேலியே யழிப்பதாயிருந் தால் அப்படியிருக்கும் வேலிகாவல் யாது.

அரசன்.

சம்மதிக்காமல் நானும்-வம்புகள்செய்வேனோ
சும்மா வென்மேல் த்வேஷமாகவே
தோகையேகோபிக்க லாகாதே ஆகாதே (

வசனம்.

அவள் சம்மதிக்காமல் நான் வற்புறுத்தினால் அதுகுற்றந்தா ன். அப்படி வம்புகள் செய்வதாயிருந்தால் குமாரியாமினிய நான் அழைத்து ஏன் கேட்கவேண்டும்? அறியாமல் சும்மா என்மீது ஏன் கோபிக்கிறாய்.

இராணி.

மாதர்கள்மேலாசை கொண்டால்-சேர்வதுபிரயாசை
காதலாகவே என்வருந்துறீர்
கண்ணாளாநீர்செய்ய வொண்ணுதிதுஐயோ (மன்)

வசனம்.

நான் கோபிக்கவில்லை தனக்கொருத்தியிருக்க இன்னொருத்தியைக் காதலித்து வருந்துவது கூடாதென்று சொன்னேனே யொழிய வேறன்று.

அரசன்.

ஆசைநான்கொண்டாலும் அந்த-தோகைசிறிதேனும்
மோகம்வையாவிட்டாளே யாகில்
முற்றுமவ்வெண்ணத்தை விட்டுவிடுகிறேன் (பெ)

வசனம்.

தனக்கு நிறைந்த அழகிகளாய் எத்தனை மனைவியரிருந்தாலும் வேறுபெண்கள் மேலும் ஒருவனுக்குக் காதலுண்டாவதுசகஜம். அது ஆண்மவியல்பு. அதற்கவள்உடன்படாவிடில் எவ்வகையாவது முயன்று அவளை அனுபவிக்கவே கருதுவார்கள். நான் அப்படிச் செய்தேனே? இரஞ்சிதபூஷணி என் பிரியத்திற்குடன்படாவிட்டால் நான் அவளை மறந்துவிடுகிறேன்.

இராணி-வசனம்.

என்ன சொல்லியும் நீங்கள் கேட்கமாட்டீர்கள், 'பெண்கள் ால்வைத்தநேயம் பிழைப்பரோ சிறியர்பெற்றால்' மறந்துதான் டுங்கள், மறக்காமல் எப்படியேனும் செய்யுங்கள். நான் என்கே கிறேன், கேடுவருமுன்னே மதிகெட்டுவரும். பெண்களைவிரும்பி வர்களுள்யார்உருப்பட்டார்? நான்போகிறேன். உங்களிஷ்டம்.

அரசன்-தனிமொழி.

கோபமாய்ப்போகிறாள், போகட்டும். யாரடா அங்கே (சே கனைப்பார்த்து) போய் திசைநாயகனை அழைத்துவா? (திசாநா கன்வர)

அரசன். விருத்தம்.

ாணபரணைஎலப்பனை மனையாளென்முன்வார்த்தைசொல்லிப்
பாளுளின்னும்வரக்காணேன்பொய்யேபுகன்றானையையோ [ன்
கனர்மொழியாளிரஞ்சிதத்தைச் சேர்வோமென்றேசெம்மாந்தே
ானுள் தனையென்பாலழைத்துவந்தாளிலையென்செய்வேனே.

வசனம்.

திசைநாயகா, எலப்பளையின் மனைவி ஏதேதோ சொல்லிவிட்டுப்போனாள். இன்னும் வரவில்லையே. பொய்சொல்லிவிட்டுப்போயினளோ? இரஞ்சிதபூஷணியை நினைத்து நினைத்து நான் இலவுகாத்த கிளிபோலானேனே. அழைத்துவருவாளா வரமாட்டாளா தெரியவில்லையே.

திசைநாயகன். கவி.

ஏவலரையேவியிரு காவிவிழியாள் தனைவி
னவுவதுவேநன்று காவலனேநாயின்று

வசனம்.

குமாரியாயி பொய்சொல்லமாட்டாள். என்ன அசந்தர்ப்பமோ? எல்லாவற்றிற்கும் சேவகர்களையனுப்பி அவளைத்தருவித்துக்கேட்டால் நல்லது.

அரசன். கவி.

மாதுதனையே வினவவே
தூதுவிடுதிசா நாயகா

வசனம்.

அப்படியானால் நீரே ஆளைவிடுத்து அவளைத்தருவியும்.

திசைநாயகன்.

அடே தூதுவரெங்கே (இதோஅழைத்துவருகிறேம்) (தூதுவர்வர)

திசைநாயகன்-கவி.

தங்கையைமன்னவர்க்குத்தருவதாய்ச்சொல்லிப்போன
மங்கையின்கருத்தைக்கேட்டுவருகுவீர்தூதர்நீரே

தூதுவர்சொல்-கவி.

அப்படியே யாகட்டையா
இப்பொழுதே போறேமையா

---

பதினெட்டாங்களம்.

இடம்—எலப்பளை அரண்மனை.

குமாரியாயி.

தூதுவரே எங்கே வந்தீர்கள்.

தூதுவர்சொல்-கவி.

அன்னே அரசனிடம், சொன்னமொழியதுபோல்
மின்னேயழைத்துவாரா, தென்னவிதம்புகல்வீர்

வசனம்.

தங்கள் தங்கையை அழைத்துவருவதாய்ச் சொல்லிவந்தீர்களாம், காணுமேயென்று மகாராஜா அவர்கள் கேட்டார்கள். காரணமொன்றுந் தெரியவில்லை.

குமாரியாமி. விருத்தம்.

மன்னனிடஞ் சொன்னதுவும் மெய்யேயப்பா
வந்திங்கு பார்த்தேனம் மாதைக்காணேன்
நன்னகர முழுவதுமாள் விட்டுத்தேடி
நானயர்ந்து தியங்குகிறேன் நஞ்சின்வல்லேன்
இன்னவிடஞ் சென்றுளென் றறியேன்பெண்பால்
என்னிடத்திற் பிழையில்லை யவளுமில்லை
என்னசெய்வே னென்னசெய்வேன் தூதர்காள்நீர்
இதைஇனிதாய் மன்னவருக் கியம்புவீரே.

வசனம்.

நான்சொன்ன தண்மைதான். வந்துபார்த்தேன். அவளைக் காணோம். எங்கும் ஆள்விட்டுத் தேடியும்பார்த்தேன், நான் வயிறெரிந்துஇருக்கிறேன். அவளும் ஊரிலில்லை. அவள் எங்கேபோனுளென்றுந் தெரியவில்லை. நான் என்னசெய்வேன். பெண்பால். நீங்கள் மகாராஜாவுக்குப் பக்குவமாய்ச் சொல்லுங்கள்.

தூதர்.

அப்படியேபோய்ச்சொல்லுகிறோம். (போக)

---

பத்தோன்பதாங்களம்.

இடம்—இராஜன் அரன்மனை.

அரசன். தூதுவரே, போனகாரியம் எப்படி.

தூதுவர். சந்தவிருத்தம்.

ல்லியேந்திகர் செல்விசொல்லிய சாரமற்றதோர் செய்தியைச்
சால்லவா அதைச் சொல்லவா அதைச் சொல்லவாங்கள் மன்ன[வா]
ல்லிரஞ்சிதை யான்வரும்முன மாயமாகவே போயினுள்
ல்லையேயவ ளில்லையேயவ ளில்லையேயென வோதினுள்.

வசனம்.

மகாராஜா அவர்களிடம் சொல்லிவிட்டு வீட்டிற்குப்போவத ற்குள் இரஞ்சிதபூஷணியம்மாள் எங்கேயோ ஓடிப்போய்விட்டார் களாம். எங்குந் தேடிப்பார்த்தார்களாம். அகப்படவில்லையாம். பெரிய மந்திரியாரும் வீட்டிவில்லை, நானென்னசெய்வேன் பெண் பால் என்று மந்திரிமனைவியர் சொல்லுகிறார்கள்.

அரசன் தனிமொழி. தரு-சாமா-திசிரம்.

தேனர் மொழிக்குயிலாள் திருநடனப் பெண்மயிலாள்
மானர் விழியாள்நேசம் வைத்தேவீ ணுகமோசம்
போனேனே துய-ரானனே புத்திகெட்டு விட்டேனே

அன்ன நடையாளை பின்னற் சடையாளை
சின்ன விடையாளை கன்னித் தொடையாளை
சேர்வேனே துயர்-தீர்வேனே தெரியாமலே விட்டுவிட்டேனே

சித்தியமென் நெஞ்சகத்தை நீங்காத சோகிலத்தை
சித்ரவிழி மோகனத்தை திவ்வியகுண ரஞ்சிதத்தை
தேடுதே மனம்-வாடுதே தேன்மொழியைக் காணுமல்

காதலெனுங் களஞ்சியத்தை கருத்தினிக்கும் புத்தமுதை
நீதியெழிற் சித்திரத்தை திவ்யமதன அஸ்திரத்தை
சித்தமே தேடி-நித்தமே தீயில்மெழு காயினளே

அரசன்.

ஓடிப்போய்விட்டாளா ? ஆ ஹா ஹா ? என்ன பேதமையி அறியாமல் அவள்மேலன்புவைத்து மோசம்போனேனே. அந் அன்னநடைப்பெண்ணமுதை அனுபவியாமல் என் துன்பம் எப் டிநீங்கும். ஐயோ தெரியாமல் விட்டுவிட்டேன் ! இனி எப்பெ ழுது அவள்எனக்குக்கிட்டுவாள் ? அவளை நினைத்துவருந்தும் மனத்துன்பத்திற்குப் பரிகாரந்தெரியவில்லையே. அப்பப்பா பெ களின் கள்ளத்தனம் பேசொண்ணுது. நல்லது இருக்கட்டும் எ ளை மோசம்பண்ணின அவளை நான் நாசம்பண்ணுமல் விடுவேே பார்ப்போம்.

(சேவகனைப்பார்த்து) அடே முள்ளிக்கொடையை அழை துவா ? (முள்ளிக்கொடைவர)

அரசன். சந்தவிருத்தம்.

அடதாளசாப்பு.

வனத்தார் தனித்தாள் தனைத்தான் சமர்த்தாய்
மறைத்தா ளெனத்தோணுதே
எனைத்தான் மனத்தால் நினைத்தா ளிலைத்தான்
இனித்தான் விடப்போகுமோ
கனைத்தே சினத்தா விழுத்தே பிடித்தே
கழுத்தே துணிக்காவிடில்
புனற்சூழ் நிலத்தார் மதிக்கார் மதிக்கார்
பொறுக்கா தனற்கோபமே.

வசனம்.

முள்ளிக்கொடை? இரஞ்சிதபூஷணியை எவ்விதத்தும் அழைத்துவருகிறேனென்று சொல்லிவிட்டுப்போன குமாரியாமி என்னசொன்னாள் கேட்டீரா.

முள்ளிக்கொடை. தெரியவில்லை. என்னநடந்தது?

அரசன்.

நடந்ததென்ன! அழைத்துவருகிறேனென்று என்னிடத்திற் சொல்லிப்போய் அவளை மறைத்துவைத்துவிட்டு எங்கேயோ ஓடிப்போய்விட்டாளென்று சொல்லியனுப்பியிருக்கிறாள். பார்த்தீரா, அவளுடைய கருவத்தை. கொஞ்சமும் நம்மை மதித்தாளா? அவளைச் சும்மாவிடலாமா? பிடித்திழுத்துவந்து தலையைத் துணிக்காவிடில் நானும் ஒரு அரசனா?

முள்ளிக்கொடை.

உண்மையை நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும்.

அரசன்.

இனி என்ன உண்மையாய்த் தெரிந்துகொள்வது, அவளை த்துவந்து தலையைத்துணிக்காவிடில் என் கோபமடங்காது.

முள்ளிக்கொடை. மகாராஜாவுடைய திருவுளம்.

அரசன் வ-ம். நல்லதிருக்கட்டும்.

---

ரெங்கதாங்களம்

இடம்—வனப்ரதேசம்.

எலப்பனை சப்ரகாமஞ்சென்று குடிகளிற்பிலரைக்கூட்டிக்கொண்டு
கொழும்புக்குப் போகுதல்.

தரு-காம்போதி-ரூபகம்.

பல்லவி.

மங்களமேவுமிலங்கைநகர்க்கு மகிழ்வுடன்செல்வோ மென்னேசா [நீயும்
இங்கிதமாகவிப்போதேவிரைவாக வென்னுடன் வாரும்விஸ்வாசா

அநுபல்லவி.

சிங்களன்மைத்துனிமேல் மையலா னேனே
தேவிதனையழைத்தேதேதோ சொன்னேனே
விங்கிதநீதென்றேயென்னமற்போ னேனே
இனிகானவனையும்விடுவேனே
மனதாரவே துயர்படுவேனே. (மங்)

சரணம்.

ஆங்கிலேயமன்னன்றன்னிடம்பாம்சென்று
அல்லலெல்லாமெடுத்தோதி - பல
யானைசேனைபரி வாரமுங்கூட்டி
யவனையமர்செய்யென்றோதி
பாங்குடனேயழைத்திங்கேவரவேணும்
பத்திரம்பாரிந்தச்சேதி - இனி
பட்சபாதம்பார்க்கலாகாது ஆகாது
பதறிச்செயிப்பதேநீதி
ஒங்குபுகழ்பெறுஞ்சப்ரகாமம்விட்டு
ஓயாமலேகடந்தின்றுபுறப்பட்டு
தீங்குவாராமலே நாமேகஷ்டப்பட்டு
திடமாயொரு கொடியினிலவ
னிடமேகடந் திடுவோமினி (மங்

நாட்டைக்கடந்தநாங்காட்டையடைந்திட்டோம்
நல்லகல்லநதிதீரம் - குளிர்
தண்ணூர்திவலே தெறிக்கவலைக
ளெறிப்பது மென்னகெம்பீரம்

கூட்டிவிருந்து குயில்களொயிலாகக்
    கூவுதுபாரென்னசாரம் - மிகக்
கொஞ்சிப்பேசும் பஞ்சவர்ணக்கிளிகளின்
    கூட்டங்களென்னவிஸ்தாரம்
நாட்டியமாடுது தோகைமயிலினம்
    நாடியுலாவுது வானிற்புயலினம்
வாட்டமில்தாமரைப்பூவில்மடவனம்
    வந்தேயடை    காக்கின்றது
    சந்தேகமாய்    பார்க்கின்றது    (மன்)

சந்தனங்குங்குமம் சாதியிலவங்கம்
    சம்புநாவல் கருங்காலி - தேவ
தாரம்வகுளமசோகு பலாசமும்
    தண்மருதோன்றியாம்நீலி
விந்தைமிகும்வடிவேலக்பெயர்கொண்டு
    மேவிவ்ளர் கருவேலி - மாம்
மெத்தவிருக்குதேயிந்தவிடத்தில்
    விளையுமேபற்பலமூலி
இந்தமலையிற்கரடிபுலிசிங்கம்
    யானைகளுந்தான் திரிந்திடுமேயெங்கும்
அந்தமலையினிற்கள்ளர்குடிதங்கும்
    அரிதாகிய    யிடங்காணுது
    பெரிதாயொரு    மலேதோணுது    (மன்)

அன்றிலும்பேடும் தங்குஞ்சுகள்தம்முடன்
    அன்பாகக்கூடிக்குலாவி - வாழும்
அன்பினைக்கண்டதே மைந்தரையும்மனை
    யானையுந்தேடுதென்னாவி
ஒண்டியாய்விட்டுவந்திட்டேனேயாமொரு
    வெம்பழிக்கஞ்சாதபாவி - என்
உள்ளங்களித்திடுந் தெள்ளமுதென்னலே
    உச்சிதமேவுமென்தேவி
குன்றிவருந்துமெனக்கினியார்தஞ்சம்
    குப்புறுப்பென்றேயெரியுதேயென்னெஞ்சம்
கன்றுறுங்கொழும்பைக்கண்டோமிதோகொஞ்சம்
    காமுண்டினி    தாய்மன்னனை
    யேகண்டிடு    வோமன்பினை    (மன்)

இருபத்தோராங்களம்.
இடம்—இலங்கை.
சேவகன் வசனம்.

ஆண்டவரே, யாரோ வொருவர் வாசலில்வந்து காத்திருக்கிறார். நமது கவர்னர் அவர்களைக் காணவேண்டுமாம்.

மந்திரி. வரவிடு. (எலப்பளை வர)

இலங்கைமந்திரி சந்தவிருத்தம்-ஆதி.

உம்மிடவூரெது பேரெது வுவந்தேசெய்யுந் தொழிலேது
எம்மிடம்வந்தது தானேது யாரோநீர்தான் தெரியாது
செம்மையாய் யாவுமிப்போது செப்புவீர்செப்புவீர்தப்பாது
சம்மதமாகவே துரையவர்கள் தயவாய்கேட்பாரிப்போது.

வசனம்.

நீர் யாரையா, எந்தவூர்? உமதுதொழிலென்ன? இங்கேயாது பற்றிவந்தீர். சொன்னால்துரையவர்கள் அதைத்தயவாய்க்கேட்பார்கள்.

எலப்பளை நோட்டு-ஆதி.

வந்தித்தேன் வந்தித்தேன் வளஞ்செறிந்தலங்கையின்
வாழ்வே சீர்மை மஹாராணி வளரச சினிதுறவே
சிந்தித்தே சிந்தித்தே சிறந்தறம்புரிந்திடும்
சீரார் நிதி மாறாத ஜெயமிகு மதிகாரா

வந்துற்றேன் வந்துற்றேன் வயங்கரண்சூழ் கண்டிவாழ்
மன்னன் சிங்கன் சங்கத்தின் மருவிய மந்திரியான்
நிந்தித்தான் நிந்தித்தான் நிலைகடந்த அன்னவன்
நேரா யாவும் யானோத நினதிடம் வந்தனனே

வசனம்.

நான் கண்டிராஜன் மந்திரி. எங்கள் கீர்த்திசிங்கராஜன் நீதி தவறி அரசாளத்தொடங்கிவிட்டானாதலால் அதைப்பற்றிச் சிலகாரியங்களைப் பேசலாமென்று இந்தச் சமுகத்தில் வந்தேன்.

இலங்கைமந்திரி.

ஆஹா அப்படியே பேசலாம். அதைப்பற்றி உமது கருத்தை விளக்கமாகச்சொன்னால் துரைஅவர்களிடம் சொல்லுவேன். அவர்களும் அதற்குத்தக்கபடி கூடுமானதாயிருந்தால் நடத்திவைப்பார்கள், இப்பொழுதே சொல்லும்.

ஏலப்பளை ஆசிரியவிருத்தம்.

மஹாகனம் பெறுசீர்மை மஹாராணி செங்கோன்மை
வழுவா திலங்கை நகரை
மாட்சியுட னரசாளும் சர்ஹெர்பர்ட் பறவுன்ரிக்
மன்னவன் சமுகத்தினில்
மண்டலம் புகழ்கண்டி நகர்கீர்த்தி சிங்கனெனு
மகிபாலன் முதன்மையான
மந்திரியெனும் ஏலப் பளைவந்த னத்துடன்
மனுச்செய்வ தென்னவென்றால்
தகாததுற் காரியங் களிலெல்லா மன்னவன்
தலையிட்டு நிலைமைவிட்டுச்
சன்மார்க்கம் விட்டுமது பானமேலிட்டுத்
தயங்கும்வெறி கொண்டுகாமச்
சனதவெறி கொண்டு பிரமித்தளவை மந்திரியைத்
தாங்கொன்று நகரமாந்தர்
தம்மிடங் கொடியவரி யிறைகொண்டு சிறுபிழைசெய்
தாரையிரு பிளவாக்கியும்.
அகாதமாய்க்கண்ணைப்பி டுங்கிமலைமீதிருந்
தவருட லுருட்டி விடலும்
ஆனபல கொடுமைகள் புரிவதைச் சகியாமல்
அந்நகர்க் குடிகளெல்லாம்
அஞ்சியென் னிடுமுறை யிட்டனர்க ளதனையவ்
வரசனுக் கியானுரைக்க
ஆக்கிரமித் தென்னைச்சி னந்துகொன் றிடநினைத்
தானந்த காரணத்தால்
விகாதமுற் றுன்சமுக நாடினே னாதலால்
விதிமுறை கடந்த வவனை
வெஞ்சமர் புரிந்துகண் டித்தந்த நகரையும்
விரைந்து கைப்பற்றி யுலகில்
மெய்யான நீதியுடன் நீங்களே யரசாள
வேண்டுமிது வென்சம் மதம்
வேந்தனே சமர்செயத் தளமுடன் வருகுவீர்
விளம்பும்வின் னப்பமிதுவே.

வசனம்.

மாட்சிமைதங்கிய துரையவர்களே, நான் கண்டியையாளும் கீர்த்திசிங்கராஜனுடைய முதன்மந்திரி என்பெயர் எலப்பளை. எங்கள் தேசத்திற்கு எங்கள் சிங்கள ஜாதியினராய் அரசாண்டுவந்த முன்னரசர் பின் சந்ததியின்றி யிறந்துபோக எங்கள் தேசவழக்கப்படி யானைகையிற் பூமாலைகொடுத்து அனுப்பினோம். அது பூந்தோட்டத்தில் வேலைசெய்துவந்த ஒருவடுகன்கழுத்தில் அம்மாலையைப்போட அவனையே பட்டத்திற்குரியவராக்கினோம். பட்டம்பெற்று சிலகாலம் அவர் ஒழுக்கமாயிருந்தார். பிறகு கொடுங்கோல் புரியத்தலைப்பட்டு அவருடைய கூடாவொழுக்கத்தை மறுத்து நன்னெறியில் நிறுத்தமுயன்ற மகாநீதிமானாகிய பிரமிதலவையென்னும் மந்திரியைக் கொன்றுவிட்டார். நன்னெறியைக் கைவிட்டுக் குடியும் வெறியுங் காமமுமேலிட்டுக் குடிகளுக்குத் தாங்கமுடியாத வரிகளை விதித்து சிறுபிழைசெய்தவரையும் இருபிளவாக்கி வருத்துகிறார்.

கண்ணைப்பிடுங்குதலும் மலையிலிருந்துருட்டுதலுமாகிய கடுந்தண்டனைகளேயன்றிக் குற்றத்திற்குத்தக்க தண்டனையை அவர் நினைப்பதில்லை. குடிகள் அதற்கு ஆற்றாமல் மனநொந்து என்னிடம் முறையிட்டார்கள். நானும் அரசனுக்கு இதங்களைச் சொல்லிப்பார்த்தேன். அவர்கேட்கவில்லை. என்னையும் கோபிக்கிறார் அது காரணமாகவே நான் இந்தச் சமுகத்திற்கு வந்தேன். அப்படி நீதிதவறிநடத்தும் அவரை இனியும் அரசனாகக்கொண்டுவாழ எனக்கேனும் குடிகட்கேனும் சிறிதுமனமில்லை. இந்தச்சமுகத்தில்முறையிட்டுக்கொண்டால் யாதோர் நற்பயன் கிடைக்குமென்பது எங்கள்கருத்து. மாட்சிமைதங்கிய துரைஅவர்கள் எங்கள்மீது தயைகூர்ந்து சேனைகளோடு அங்குவந்து அவரைப் போர்செய்து வென்று உலகநன்மையை நாடுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன் அவரோடு போர்புரிந்து வென்றாலன்றி வேறு உபாயங்களினால் அவரைத் திருத்துதல்முடியாது. இதுதான் இந்தச்சமுகத்தில் என்னுடைய விண்ணப்பம்.

இலங்கைமந்திரி. சந்தம்-திசிரம்.

இலங்கைநகரை யரசுபுரியும் இறைவனே நற் கண்டிவாழ்
இனிய சுகுண வமைச்சர் தலைவர் என்னும்எலப் பளையிவர்
கிலங்கொ ளந்தநகரினரசன் கீர்த்திசிங்கன் செய்திடும் [தில்
கெடுதல் டையுங் கொடுமையனைத்தும் கெடிகொளுமது சமுகத்

துலங்க வுரைத்ததன் னவனையடக்கச் சூழ்ச்சிசெய்யவேண்டியே
துரையே யுனது மனதின்கருத்தைத் துணிந்திங்கறிய வெண்ணி
வலங்கொள்மலையும் வனமுங்கடந்து வந்தனர்விரை வாகவே [யே
மகிழ்வி னிவரை யனைத்தும் வினவி மார்க்கம்புரிய வேணுமே.

வசனம்.

இலங்கைநகரையாண்டுவரும் மஹாபிரபுவே, இவர் கண்டிநகரையாளும் அரசனது தலைமைமந்திரி. இவர் பெயர் எலப்பளை அதிகாரம் இவர் தனது அரசன் செய்யும் கொடுமைக ளனைத்தையும் சமுகத்தில் தெரிவித்து அவனையடக்கக் கருதி காடு மலை வனாந்திரங்களெல்லாம் விரைவாக நடந்து இங்கு வந்தனராம். துரையே இவரை இது விஷயங்களெல்லாம் சவிஸ்தாரமாய் விசாரித்து அதற்கேற்ற மார்க்கஞ்செய்யவேண்டும்.

இலங்கை மந்திரி. சந்தம்-ஆதி.

யாவரெ திர்க்கினு மேமனதச்சமி லாமலெதிர்த்தற வாகாத
காவலனைச்சிறை யேபுகுவித்தெழில் காவல்பிருத்தந கர்க்கேகி
தாவியேமுற்றிகையிட்டுஜெயக்கொடி தாமுறவேவிசையாய்நாட்டி
மேவிடுவோமென வோதினர்மன்னவன் மேன்மையோடிங்கிரு
[மையர்வே.

வசனம்.

எலப்பளையதிகாரம், உமது விருப்பப்படியே நாம் போர்க்கோலங்கொண்டு கண்டிக்குவந்து முற்றிகைப்போட்டு அந்த அரசனைச்சிறைப்படுத்தி வெற்றிக்கொடிநாட்டிக் குடிகட்கு நன்மையையுண்டாக்குவோம். யார் அவருக்குத் துணையாய்வரினும் நாம் விடோம். நீர் அஞ்சாதீர். அமைக்கப்பட்ட விடுதியில் இரும். எல்லாம் கலந்துப் பேசிக்கொள்வோம்.

---

இருபத்திரெண்டாங்களம்.

இடம்—கண்டி.

அரசன் திசாநாயகனுக்குச் சொல்

சந்தம்-தா-சாப்பு.

பதியினிற்கொற் றவர்வியக்கும் படிகடக்கும் நாயகா
அதிபிருக்தென் னுடனிருக்கும் சுகுணமுள்ளிக் கொடைமைநீ
நதியினிற்சென் றழைமினென்னைச் சதிர்கொள்தூதர்க் குரைசெய்
மதியிருத்திடு மவரை இங்கண் வரவழைப்பாய் விரைவிலே. [தே

வசனம்.

திசாநாயகா, தூதரையனுப்பி முள்ளிக்கொடையை இங்கே தருவியும்.

திசாநாயகர்-கவி.

திடமிகுதூதரே, அடைவுடன்முள்ளிக்
கொடையையிப்போது, தடையிலாதழைமின்.

வசனம்.

தூதுவரே, மகாராஜா அவர்கள் கட்டளையென்று முள்ளிக்கொடை மந்திரியாரை அழைத்துவாருங்கள். (தூதர்செல்ல முள்ளிக்கொடைவர.)

முள்ளிக்கொடைசந்தக்கவி.

தீனருக்கருள்கையனே, மானமுற்றிடுமெய்யனே
கானவிற்பனதுய்யனே, எனழைத்தனேஐயனே.

வசனம்.

[மகா]ராஜா? இந்த அடிமையை அழைத்தக்காரணம் அறியேன்.

அரசன்-சந்தம்-ஆதி.

மாறுபாறு எலப்பளைதான்
வலிதாய்ப் பகுதிப் பொருள்பெற் றிடவே
போனான்போனான் அதுவேப் போக்காய்
போனான் வரவே யில்லை யடடா
ஏனோதானோ வென்றே யவனும்
இருக்கின்றானோ யாதோ அறியோம்
ஆனலாகட்டுந் தூதரைவிட்
டவனைநொடியிற் கடிதாய்க்கொணர்வீர்.

வசனம்.

முள்ளிக்கொடை அதிகாரம். எலப்பளை அதிகாரம் சப்ரகமத்திற்குப்போய் எவ்வளவுகாலமாய்விட்டது. இன்னும்வரவில்லை போனார் போனார் அதேபோக்காய் போய்விட்டாரே. பகுதி வாங்கப்போனவர் வாங்கிக்கொண்டு வாராமல் இவ்வளவு காலமாய் அங்கே என்னசெய்கிறார் நமதரசன் நம்மை என்னச் செய்வானென்று அலட்சியமாயிருக்கிறாரோ இருக்கட்டும். தூதரை விட்டு அழைத்துவரச் சொல்லும்.

முள்ளிக்கொடை-சந்தம்-தா-சாப்பு.

சீருலாவிய கீர்த்திசிங்கபூ பாலனேகுண சீலனே
திருட்டுத் தனமுள எலப்பளைப் பகுதிப்பொருள்பெறப் போனரின்மாந்தரைக் கூட்டிநல்லவு பாயமாயுனை வென்றிட [வன்
உண்டவீட்டி லிரண்டகஞ்செய வுன்னியேயவ னுன்னியே

காரியன்தனைச் சேர்த்து சப்பிரகாமத்தில்வெகு சூழ்ச்சியால்
காலம்போக்கியே இந்தநகரினை வேலையாக்கிட விருக்கிறான்
ஆரம்பூண்மணி மார்பனேயவ னருமோவுனக் காகுமோ
ஜயமின்சமு கத்திலோதினேன் யாவருமிதையறிவரே.

வசனம்.

மஹாராஜா! ஒரு விண்ணப்பம், அவர் இவ்வளவு காலம் இங்கே வாராதிருப்பதைக் கொண்டு யோசிக்குமிடத்து ஏதோ அங்கே கள்ளமொன்றிருக்க வேண்டுமென்று புலப்படுகிறது. பகுதி வாங்க இவ்வளவு காலம் ஏன். இந்த ராச்சியத்தை வஞ்சித்துத் தங் கையெடுத்துவிடும்படி சப்ரகாமத்துப் பிரபுக்களோடு ஏதோ சதியாலோசனை செய்கிறானென்று நினைக்கிறேன். உண்ட வீட்டிற்கிரண்டகமென்னும் உலுத்தகுணம் அவரிடத்தில் இயற்கையாயுண்டென்பதை மகாராஜாவுக்கு முன்னும் நான் அறிவித்திருக்கிறேன். நான் இப்பொழுது இந்தச் சமுகத்தில் எல்லோருமறியச் சொன்னேன். வேண்டுமாயின் முடிவைப்பாருங்கள்.

அரசன் சந்தம்-ஏகதாளம்.

எத்திக்கும் புகழ்பெற்றிங் கினிதுற்றே யிலகும்
எனையந்தப் பயல்வந்தே யெதிர்த்தே வெல்லுவனோ
கத்திக்கும் நரிகட்கும் கழுக்குஞ் சிறிய
காக்கைக்கும் இரையாக்கித் தாக்கிக்கொல்லுகிறேன்
புத்திக்கும் புத்திக்கும் உனையொப்பா ரிலையென்
றுயர்வுற்றன் புறுமுன்னிக் கொடையே யிப்பொழுதே
யத்துட்டன் தன்னைக்கட் டளைவிட்டேன் சமுகத்
தழையுஞ்சற் றேனுந்தா மதமேசெய் யாதீர்.

வசனம்.

முன்னிக்கொடை யதிகாரம், உம்முடைய புத்தியை மெச்சினேன். நீர் சொன்னபடியே அது உண்மையாயிருக்கலாமென்றே நினைக்கிறேன். நன்றாய்ச் சொன்னீர். நான் நினைத்தபடியே நீரும் சொன்னீர். அவன் செய்வான்தான். நல்லது அப்படிசெய்துவிட்டு அவன் உயிரோடிருக்கவா. என்கைக்கத்திக்கும் நரிக்கும் கழுக்கும் காக்கைக்கும் அவனை இரையாக்கமாட்டேனென்று நினைக்கிறீரா? பார்ப்போம். சீக்கிரம் தூதனுப்பி துட்டனை இக்ஷணமே தருவியும். அதன்பிறகு சொல்லுகிறேன்.

மூள்ளிக்கொடை-சந்தக்கவி-ஆதி.

சீலத்தூதுவ கேளொன்று
ஏலப்பளையிட மேசென்று
கோலக்கடிதம் நீர்தந்து
மாலைக்குள்வரு வீரின்று.

வசனம்.

தூதுவரே, சீக்கிரம் சப்ரகாமம்போய் ஏலப்பளை யதிகாரத்தை மகாராசாவின் கட்டளையைக்காட்டி அழைத்துவாருங்கள்.

தூதுவர்-சந்தக்கவி.

ஆதிதாளம்.

வாயுவின் வேகமதாய்ச் சென்று
காயிதம வர்கையிலே தந்து
நீயுட னேவருவா யென்று
நாயக னே வருவோ மின்று.

வசனம்.

இதோ ஒருநொடியிற்போய் அழைத்துவருகிறோம். (போக)

---

இருபத்துமூன்றுங்களம்.

இடம்—கண்டி—இராஜவீதி.

நேரம்—காலை—முற்பகல்.

இரத்தினவியாபாரிகள் பிரவேசம்.

தரு-இராகம்-காபி-தா-ஆதி.

செல்வமிகுத்தவரே சீமான்கள்புத்திரரே
நல்லகுணஉத்தமரே நீங்கள்தான்
ரத்தினங்கள் வாங்கலையோ

கற்புடையமங்கையரே கன்னிகையாம்நங்கையரே
பொற்புடையதங்கையரே நீங்கள்தான்
பூஷணங்கள்வாங்கலையோ

பாகனையசொல்லியரே பத்மமுகமெல்லியரே
நாகரிகவல்லியரே நீங்கள்தான்
நல்பச்சைவாங்கலையோ

கோச்சுவண்டிமேலேறி ஆச்சியுடன்போறவரே
மாச்சரியமில்லாமலே நீங்கள்தான்
வைரமணிவாங்கலையோ

லங்கைசிகப்புமுண்டு கல்லிலெள்ளோமுத்துமுண்டு
தங்கவைடூரியமுண்டு நீங்கள்தான்
தோகையர்க்குவாங்கலையோ.

அரசன்-வசனம்.

சேவகா, இரத்தினவியாபாரிகள் வந்திருப்பதாக மகாராஜா வுக்கறிவி.

சேவகன். பிரபு இரத்தின வியாபாரிகள் வந்திருக்கிறார்கள்.

அரசன் வசனம். அவர்களை இங்கே கூப்பிடு.

சேவகன். ஐயா இரத்தினவியாபாரிகளே மகாராஜா அழைக்கிருர் வாருங்கள்.

மண்டலேஸ்வரா, மகாப்பிரபு, வந்தனம்.

ஒய் செட்டியாரே, நீர் இரத்தினவியாபாரியா? எந்தவூர் எங்கே உம்மிடத்திலிருக்கும் சிறந்த இரத்தினவகைகளை யெடுத்துக் காட்டும் பார்ப்போம்.

சோமநாதசெட்டி-சந்தவிருத்தம்.

அட்டதாளசாப்பு

வளமிஞ்சிய கமுகும்பல தருவும்வ ார் பொழிலும்
வரையும்மணி வயலும்மணி நதியும்நனி மருவும்
மிளிர்கண்டினன் நகரின்புற விதியின்முறை தவறு
விதமேயர சதுசெய்திடும் விரைசேர்புய நிருபா
தெளிதண்டமிழ் பெருகும்மது ரையின்வாணிபர்நாங்கள்
திகழும்பல நகரந்தினந் தினமுந்திரிந் தினிதாய்
ஒளிரும்நவ நிதியும்நவ மணியும்பல தெருவும்
உலவும்விய னிலகும்கொளும் பினில்வந்திவண் வந்தோம்.

வசனம்.

மகாராசா? நாங்கள் மதுரை இரத்தினவாணிபர்கள் இரத்தினவியாபாரஞ்செய்யும்பொருட்டுக் கொளும்பிற்குவந்தோம்.

அரசன் கவி.

மதுரையின்வர்த்தகரே மதிமிகுவுத்தமரே
புதுமைகளிலங்கையிலே ஏதுவெனுங்கண்டதுண்டோ.

வர்த்தகரே, கொளும்பில் ஏதேனும் விசேடம் நீங்கள் கேள்விப்பட்டதுண்டோ.

### சோமநாதசெட்டி-சந்தவிருத்தம்.

அடதாளசாப்பு.

கலங்காத நெஞ்சுற்ற வீரப்ர தாபா
கருங்காவி யந்தார் மணஞ்சூழு மார்பா
இலங்கா புரிக்கேகி யாமங் கிருந்தே
இரத்தினங்கள் விற்கின்ற போதந்தன் மந்திரி
சலங்காணும் ஏலப் பளை வந்து ராஜன்
சமுகத்தி லுன்னைஜெயங் கொள்ள வேண்டி
நலங்காண வாலோ சனைசெய்த தாக
நகரத்தி லுள்ளோர் நவின்றோர்க ளரசே.

### வசனம்.

நாங்கள் கொளும்பிலிருக்குப்போது கண்டிராசாவின் மந்திரி ஏலப்பளை அதிகாரமென்பவர் கொளும்புராசாவிடம் வந்திருக்கிறாரென்றும் கண்டிராசாவை நீக்கிவிட்டு ஆங்கிலேய ஆளுகையை கண்டியிற்கொண்டுபோய்வைக்க கொளும்புராசாவோடு ஆலோசனைசெய்துகொண்டிருக்கிறாரென்றும் சீக்கிரத்தில் ஆங்கிலேயபடைகள் கண்டிக்குச் சண்டைசெய்யப் போகிறார்களென்றும் சனங்கள் சொல்லிக்கொண்டார்கள் இதுதான் நாங்களங்கே அறிந்துகொண்ட முக்கியமான அதிசயம்.

### அரசன் சந்தவிருத்தம்.

ஆதிதாளம்

எனக்கு வன்துயர் செயவவன் மனதில்
நினைத்த தென்பது நிஜமென வறிகிலன்
இனிக்க யிங்கிவர் கனிவொடு மொழிவது நிசமாமே

மனத்தின் வஞ்சக மூடனவ னிடர்செய
நினைத்தி லங்கையில் அரசனை யணுகியே
வனுத்தி டம்பல சயினிய மூடனவ னெனைநாடி

சினத்தெ மூர்ந்தெதிர் வருகுவ னெனி லொரு
நொடிக்கு ளிங்குள படைகளை முடுகிய
வினைக்க டிந்துயிர் கொடுசெலும் நமனென வெதிர்மேவி

அனித்த மொன்றொரு சிரமது விருபிள
வுறப்பி ளந்துடல் குருதியின் மிதிபட
வமர்க்களந் தனிலுயிர்வதை புரிகுவ னறிவீரே.

வசனம்.

என்ன எலப்பனையா, எனக்குத் துயர்செய்யவா அப்படியும் அவன் நினைத்தானு, அது உண்மையா யிருக்குமோ கோள் மூட்டி விந்தனைக்கூறும் தீயொழுக்கங் கொண்டு எருவானுயின் அவனை சும்மாவிட அவ்வளவு நாம் அசக்தனு பார்ப்போம்.

முள்ளிக்கொடை சந்தவிருத்தம்.

ஏகதாளம்.

ஐயனே யாக்கப் பொறுத்ததை யாறப்பொறுத்திடுமோ, துய்யனே தூதருஞ் சென்றனர்கள்வரவில்லை ஆழ்ச்சியாதோ, வெய்யனேலப்பனை செய்தகாரியத்தினை விசாரித்தபின், செய்யவேண்டியதெலாஞ்செய்யலாம் பலவாறு சிந்தையென்னே.

வசனம்

மகாராசா, அவசரப்படலாகாது! தூதர்கள் போயிருக்கிறார்கள். போனவர்கள் திரும்பிவந்தவுடன் எல்லாக்காரியங்களுந்தெரியாதா. உண்மையை யறிந்துக்கொண்டு ஏற்றபடி செய்யவேண்டியதெல்லாம் செய்யத்தடையென்ன? ஒவ்வொன்றையும் யோசித்துத் துணியவேண்டும்.

அரசன். அதுவாஸ்தவந்தான். செட்டியாரே இரத்தினங்களை எடுங்கள்.

சோமநாதசெட்டி-கண்ணி.

நவரோஜ்-ஏகதாளம்.

மாராவமணிகள் வாங்கிப்பாருமே - நீர்
வாங்கிப்பாருமே
தாரார்கழுத்தினிலே தாங்கிப்பாருமே

வ-ம். இது கழுத்திலணியத்தக்க மாராவமணிகள்.

காரார்கமேனியிதன் காந்திப்பாருமே - இதன்
காந்திப்பாருமே
ஏரார்கரங்களிலே ஏந்திப்பாருமே

வ-ம். இதுகரத்திலணியத்தக்கப் பருத்தான்மணி.

பண்பாய்வயிரமிது பாருப்பாருமே - நீர்
பாரும்பாருமே
தண்மையுடன்கூழம்பொன் தாரும்தாருமே

வ-ம். இதுவயிரம் ஒரு இலட்சம்பொன் விலை,

முத்துச்சரங்களிது முன்னேபாருமே - நீர்
முன்னேபாருமே
பத்துலக்ஷம்வராகன் பொன்னுந்தாருமே

வ-ம். இந்த முத்துமாலையைப் பாருங்கள் பருத்தஆணிமுத்துக்கள் இதன்விலைபத்துலட்சம்வராகன்.

பச்சைநிரமிரவில் பளபளக்குமே - ஐயா
பளபளக்குமே
மெச்சுமுலகை இதுவிலைமதிக்குமே

வ-ம். இந்தப் பச்சையைப் பாருங்கள். இரவில் நல்ல பளபளப்பாயிருக்கும். இந்த ஒரு பச்சையே உலகத்தை விலைமதிக்கும்.

காட்சிதருங்கோமேதகங் கண்ணுங்கூசுமே - ஐயா
கண்ணுங்கூசுமே
மாட்சிதரும்நீலவொளி விண்ணும்வீசுமே

வ-ம். இந்தக் கோமேதகம் என்னகாட்சி தங்களைப் போன்ற மகாராஜாக்களுக்கென்றே இது படைக்கப்பட்டதென்று நினையுங்கள்.

பவழமுடன்நீலவெள்ளைப் பார்க்கப்போகுமோ - ஐயா
பார்க்கப்போகுமோ
கவனமுடன்நரங்களின்னுங் காக்கலாகுமோ

வ-ம். இந்தப்பவளத்தையும் நீலவெள்ளையும்போல மகாராசா இதற்கும் ஒருபொழுதும் ஒரு இடத்தும் கண்டிருக்கமாட்டார்களென்றே நிச்சயமாய்ச்சொல்வேன்.

அரசன்-வசனம்.

முன்னிக்கொடைஅதிகாரம் இவர்காட்டின இரத்தினங்களெல்லாம் எனக்கு விருப்பமானவைகளாகவே காணப்படுகின்றன அவைகளை வாங்கிக்கொண்டு ஆகும்விலையைக்கொடுத்து நல்லசன்மானமுங் கொடுத்தனுப்பிவிடும். (போகிறார்கள்.)

தூதர்-கலித்துறை.

பங்கேருகச்செங் கரதலா எலப் பளையுமில்லை
லங்காபுரிக்கவர் போயினராம் யாம்வரும்வளியில்
அங்கோர்மரத்தி லொருகடிதாசி யறைந்திருந்த
திங்கேயெ டுத்தோடி வந்தனம்பாரு மிதையரசே

வசனம்.

ஐயனே, மகாராசா அவர்களின் கட்டளைப்படி சப்ரகாமம் போய்ப் பார்த்தோம். எலப்பளையதிகார மங்கில்லை. கொளம்பிற்குப்போயிருக்கிறாராம். நாங்கள் திரும்பிவரும்வழியில் ஒருமரத்தில் இந்தகடிதம் ஒட்டப்பட்டிருந்தது, எடுத்தோடிவந்தோம்.

அரசன்-வசனம்.

முள்ளிக்கொடை இதை வாசியும்.

முள்ளிக்கொடை கடிதத்தை வாசிக்கிறான்.

விருத்தம்.

சீர்மருவு கண்டிநகர் அரசாளு மறிவிலாச்
செய்கைமிகு கீர்த்தி சிங்கன்
செப்பமுட னேயரிய வொப்பமிட் டெழுந்துஞ்
செயங்கொண்ட விந்த நிருபம்
நீர்மருவு முலகில் நீதிநெறி யில்லாமல்
நிந்தைபல செய்கின் றதால்
நிச்சயம தாகவே யுந்தனிட மைந்தரை
கோரக வுரலி லிட்டு
வார்மருவு குழலியுன் மனையாளி டிக்கவும்
வதைத்தபின் அவள் தன்னையும்
வாவியிற் றள்ளியும் உன்னையும் ஆங்கிலேய
மன்னனிடம் வொப்பி வித்து
ஏர்மருவு நகரையுங் கைக்கொண்டு உனைக்கொல்வ
ளிதாசத் தியம்சத் தியம்
இப்படிக் குன்றுடைய முதன்மந்திரி யாகிய
எலப்பளை கையெ ழுத்திது.

அரசன் தரு. கமாஸ். ஆதி.

ஆஹா எலப்பனையும் அஞ்சாதெழுதினனை
ஆரென்றெனநினைந்தே சோரனும்மனந்துணிந்தே (ஆஹா.)
கூகாவெனவேயவன் குடும்பமெல்லாங்கதற
வீசாகவாளால்வெட்டி விடுவேன்விடுவேன்விடுவேனவனையே (ஆ)
எனக்கிரண்டகஞ்செய்த வீணனவனுடைய
மனைவிமைந்தர்களையும் வதைதயோபுரிவேனறவீர்நிஜமிது (ஆ.)
உதவா அவன்மைந்தரை புரலிலிட்டுமனையாள் [ஆஹா.
சிதையபிடித்திடவே செய்வேன் செய்வேன் செய்வேன்விரைவிலே
இட்டமாய்நானவனும் இருந்திட்டவிசுவாச
பட்சத்தைமறந்தானே பாவி பாவி பாவி அவனுமே (ஆஹா.)
குணந்தெரிந்திடாமலே கொடுமைசெய்யமனதில் [ஆஹா.
துணிந்தான் துணிந்தானந்த துரோகிதுரோகிதுரோகி அவனுமே

வசனம்.

செட்டிசொன்னது வுண்மைதானே, பார்த்தீரா முள்ளிக்கொடை, என்னகாலமிது. என் சோற்றைத்தின்று எனக்கே இரண்டகம் நினைத்தானே அதிபாதகன் எலப்பனை, கள்ளப்பயல் என்னை யாரென்று நினைத்தான். அவன் குடும்பத்தை இதோ வேரோடறுத்துவிடுகிறேன், எனக்குத்துரோகநினைத்த அவன் பெண்டுபிள்ளைகளை எல்லோருமறிய என்னசெய்கிறேன் பாரும். அவன் பிள்ளைகளை புரலிலிட்டு அவன் மனைவியைக் கொண்டே இடிப்பித்து அவனுக்குதவாமற் செய்துவிடுகிறேன்.

அரசன் சந்த விருத்தம்.

ஆதிதாளம்.

என்னிட வல்லப மின்னதெனத்தெரி யாமலே யன்னவனும் [ல்
தன்னிட நெஞ்சினில் அவன்பகை கொண்டு சயிக்க நினைத்தனனே
அன்னவன் மனைவியுமைந்தர்கள் தமையுமழுத்துவதைத்திடுவேன்
சொன்னது போலவே மழுவரைவிட்டதி துரையிலழைத்திடுவாய்.

வசனம்.

என்னையறியாமல் அவன் என்மேற்பகைசாதித்து கெட்டுப் போகுங்காலங்கிட்டவந்துவிட்டது. நல்லது காட்டுகிறேன். சீக்கிரம் கொலையாளிகளைத்தருவியும். அவன் மனைவிமக்களை இங்கேவரும்படிசெய்யும் துண்டுதுண்டாய் வெட்டிவெறிகிறேன், தாமதஞ் செய்யாதீர்.

முள்ளிக்கொடை சந்தம்.

ஆதிதாளம்.

எழுகடல் சூழும் நிலவுல காளும் இசைமாறு
வழுவறு மன்னன் தனைவெல வஞ்சா மனமுற்ற
பழுதுள வேலப் பளைமனை வியையும் பாலரையும்
மழுவரே யிங்கே விரைவின ழைத்து வருவீரே.

வசனம்.

கொலையாளிகளே, சீக்கிரம்போய் ஏலப்பளையதிகாரத்தின் மனைவிமக்களை மகாராசா அவர்கட்டளை யிட்டனர்க ளென்று அழைத்து வாருங்கள்.

மழுவர்கள் கவி.

அரைநொடிக்குள்ளே, விரைவுடன்சென்று
அரிவையைக்கொண்டு, வருகிறோமையா;

வ-ம். இதோ கொண்டுவருகிறோம்.

---

இருபத்துநாலாங்களம்.

இடம்—எலப்பளையின் வீடு.

இரஞ்சிதபூஷணி அகவல்.

பூக்குழற்றமக்காய் தூங்கையில்நானே
நற்பலனனவோர் சொற்பனங்கண்டேன்
கண்டேனதனை விண்டிடக்கேளும்
சிங்கமோர்பசுவைச் சிரியேபிடித்துக்
கன்றுகளிரண்டையுங் கலங்கிடக்கொன்று
அங்கேதாய்ப்பசு அவைகளைமிதித்து
சிதைத்தபின்பசுவைச் சினந்திருபூதம்
கழுத்திற்கல்லைக் கட்டியேயிழுத்துக்
குளத்தில்தள்ளவுங் கோதிலாக்காளையொன்
றந்தசிங்கத்தை யார்ப்பரித்தெழுந்து
செயித்திட்டபின்னர் செப்பருங்காளையும்
கடுஞ்சிறைப்படவுங் கண்டேன்கனவு
என்னதான்விளையுமோ யானறிந்திலனே.

வசனம்.

அக்காள், சற்றுநேரத்திற்குமுன் நான்படுத்துறங்கையில் ஒரு கனவுகண்டேன், அதன் விபரமொன்றுந் தெரியவில்லை, மனமாத்திரந்திடுக்கிடுகிறது. ஒரு சிங்கம் ஒரு பசுவைப்பற்றியிழுத்து அப்

பசுவின் இரண்டுகன்றுகளேயும் கொல்லும்படி செய்து அத்தாய்ப் பசுவே தன்கன்றுகளே பிதித்துக் கொல்லக்கண்டேன். பின்பு இரண்டுபூதங்கள்வந்து அப்பசுவைக்கழுத்திற் கல்லேக்கட்டி குளத்தில்தள்ளவுங்கண்டடேன். சற்றுநேரத்திற் செல்லாம் அந்தசிங்கத்தை ஒருகாளேவந்து முட்டித்தள்ளிவென்றபிறகு அந்தக்காளேயும் சிறைப்பட்டுவிட்டது இப்படிக்கண்டேனக்காள். இதென்னகனவு எனக்கொன்றுந்தெரியவில்லேயே என்னவிளேயுமோ. குருநாதனிருக்கிறார்.

(கொலேயாளிகள்) அம்மணி கொலேயாளிகள் நமஸ்கரிக்கிறோம்

(குமாரியாயி) எங்கே வந்தீர்களப்பா?

கொலேயாளிகள் தரு.

காபி-ஆதி.

அம்மா அரசனுனே அழைத்துவரச்சொன்னார்
சும்மாநீவாருமம்மா எம்முடனே
சுருக்காகவாருமம்மா.

வ-ம். மகாராசா அவர்களுடைய கட்டளே. அழைத்துவரச் சொன்னார்கள். தாமதிக்கக்கூடாது.

குமாரியாயி தெம்மாங்கு.

எதர்க்காகவென்னே அழைத்துவரவேசொன்னார்
பரிவாயெனக்கறிய பகர்வீர்மழுவர்களே.

வ-ம். அப்பா. எதர்க்காக அழைத்துவரச்சொன்னார்.

மழுவர்சொல் தரு.

(முத்துமாரேக்குல என்கிறமெட்டு)

எங்களே நீகேட்டால் என்னதெரியுமம்மா
இட்டுவரச்சொன்னார் இங்கேவந்துசொன்னோம்
அங்கேநீவந்துகேட்டாலல்லோதெரிந்திடும்
வாராய் வாராய்நீ மன்னனழைக்கிறார்.

வ-ம். எங்களுக்கு எப்படித்தெரியுமம்மணி. இட்டுவரச்சொன்னார் அங்கேவந்து கேட்டுக்கொள்ளுங்கள்.

குமாரியாயி தெம்மாங்கு.

என்னபிழைசெய்தேனென்று இட்டுவரச்சொன்னாரயோ
அந்நீதமாயென்னேயவன் ஆக்கினேசெய்தற்குத்தானே.

வ-ம். நான் அவருக்கு என்ன பிழைசெய்தேன். ஏதேனும் என்னே அநியாய ஆக்கினைசெய்யவோ.

கொலையாளிகள் தரு.

அந்நீதமென்றேநீ யாரிடத்தில்சொல்கிறாய்
சொன்னதுபோல்நாங்கள்செய்வோம்எமக்கென்ன
பன்னிப்பன்னிவீணாக பாவையேபேசாதே
வாராய் வாராய்நீ மன்னனழைக்கிறார்.

வ-ம். எங்களுக்கு ஒரு அபிப்ராயமுந்தெரியாது. கட்டளைப் படி நாங்கள் செய்வோம். வீண் காலப்போகுது.

குமாரியாயி தெம்மாங்கு.

மழவர்களேஎன்னையவன் வலியகொலைசெய்வதற்கோ
அழுதுபுலம்புமெனக் காதரவுசொல்வீரே.

வ-ம். ஐயோ கொலையாளிகளே, என் மனம்பதைக்கிறதே. நீங்களேனுமிரங்கி ஆறுதல் சொல்லக்கூடாதா.

மழவர் தரு.

ஆதரவுசொல்வதென்ன அதட்டிப்பிடித்துன்னை
அலறத்துறத்தியே அல்லல்படுத்தியே
மாதேகொண்டுபோவோம் மானத்திற்கஞ்சிகிறோம்
வாராய் வாராய்நீ மன்னனழைக்கிறார்.

வ-ம். அம்மணீ, நாங்கள் ஆதரவுசொல்லத் தக்கவர்களல்ல. நாங்கள் உங்கள்மீதுவைத்திருக்கிற மரியாதையைக்காத்துக்கொள்ளுங்கள்.

குமாரியாயி புலம்பிச்சொல்
கண்டா.

ஐயோபிழையொன்றுஞ்செயவில்லை
வெய்யோன் மனந்தாவியே எந்தனை
ஆஹாவென்தலைவிதியென்னமோ
அறியேன்பிரம்மதேவா.

தங்காயினியென்செய்வேனோமன்னவன்
இங்கார்த்துணைநாதனுமில்லையே
தானைவைத்து விளைந்ததே
தனியாகினேம்நாமே.

எல்லாருருகையனருளின்றே
எண்ணிநடந்தேகிறேன் ஏகிறேன்
ஏதோவினியென்கதியறிகிலன்
எனதாருயிர்த்தங்காய்.

வசனம்.

ஐயோ, நான் அவருக்கு ஒரு குற்றமுஞ்செய்ததில்லையே ஆண்டவனே நான் என்னசெய்வேன். தங்காய், அவருமில்லையே. நான் ஒருபாவமுமறியாமலிருக்க இந்தவினை எனக்குவரலாகுமா? நீவருந்தாதிரு. கதிர்காமவேலவன் துணையென்று எண்ணிப்போகிறேன்.

இரஞ்சிதை பரணி.

தாயேயனைய அன்பின் மிருகமர்காய்தமிழ வென்செய்வேன்
நீயேபிரிந்தால் எனைக்காப்பார் நிலமீதெவர்தானுளரம்மா.

வ-ம்- அக்காள் நான் இனியென்னசெய்யப்போகிறேன் உன்னைவிட்டுப்பிரிந்தால் என்னைக்காப்பவர்யார்.

குமாரியாயி பரணி.

கண்ணின்மணியேயென்தங்காய் கருத்தேகலங்கிவருந்தாதே
எண்ணுமெழுத்தாயெங்குநிறை யீசன்நமக்கே துணையம்மா.

வ-ம். தங்காய் நீ வருந்தாதே, ஈசன் தான் உனக்குத் துணையாவர்.

இரஞ்சிதை பரணி.

தீயோனரசனழைத்தென்ன தீங்குபுரியநினைத்தனனோ
நீயேபோகாதிப்பொழுது நின்றால்நலந்தானம்மம்மா

வ-ம். அக்காள், அந்தச் சண்டாளன் அழைத்தால் தான் என்ன. அவன் எது செய்யினும் செய்யட்டுமே. நாமேன் போகவேண்டும், போகாமல் நின்றுவிடுவது நலமென்று நினைக்கிறேன்.

குமாரியாயி பரணி.

மன்னுளரசன்கட்டளையை மறுத்தேநாமும்அவமதிக்க
ஒண்ணாதம்மா நான்சென்று உடனேவருவேன்வருந்தாதே.

வ-ம். தங்காய் அது சரியல்ல, அரசன் கட்டளையை மறுக்கலாகாது அவமதித்ததாய் முடியும். நான் வந்து விடுகிறேன். நீ வருந்தாதிரு.

இரஞ்சிதை பரணி.

என்னையனுப்பவில்லையென்று உன்மேற்கோபமெய்தியவன்
உன்னைக்கொல்லநினைத்தனனோ உண்மையிதுவென்றறியேனே.

வ-ம். என்னை அவன் விருப்பப்படி அங்கே அனுப்பவில்லையென்றுகோபித்து அக்காள் உன்னைக்கொல்லவே நினைத்து ஆள்

அனுப்பியிருக்கிறான். இதுதான் உண்மை எனக்குப் பயமாயிருக்கிறது.

குமாரியாயி பரணி.

கொல்லத்துணிந்தால் எப்படியும் கொன்றே தீர்வான்தப்பாமல்
செல்லத்தடைநீசெய்யாதே சிவனார்விதித்தசெயல்போலாம்.

வ-ம். அப்படியும் அவன்நினைத்தால் செய்தேதீர்வான், நாம் அதைத் தடைசெய்ய முடியுமோ. அந்தவிதியு மிருக்குமானால் நம்மாலதை யொழிக்கமுடியுமோ. நீதடை செய்வதென்ன. எல்லாம் ஈஸ்வராக்கினை.

இரஞ்சிதை பரணி.

புருஷன்வீட்டில்லாத பொழுதாரேனும் அழைத்தாலும்
வரமாட்டோமென்றுரைத்து மறுவார்த்தையுநீமறுப்புவையே.

வ-ம். வீட்டில் தலைவரில்லாத பொழுது யாரழைத்தாலும் பெண்கள் வீட்டை விட்டு வரலாகா தென்று சொல்லி யனுப்பினாலென்ன?

குமாரியாயி பரணி.

கொல்லுங்கூற்றுனைக்குமழுவரைக்கூட்டியழைத்துப்போகாமல்[னே
சொல்லும்மொழியைக்கேட்பாரோ தோதகஞ்சொலப்போய்வருவே

வ-ம். நம்மைக் கொல்லும் எமன் போல் வந்திருக்கிற கொலையாளிகளிடத்தில் நாம் செய்திசொன்னால் அதைக்கேட்டுக்கொண்டு அவர்கள் போய்விடுவார்களோ? நீசொல்வது சரியல்ல நான் போகத்தான் வேண்டும்.

இரஞ்சிதை கொச்சகம்.

ஐயோவிதற்கோநான் அகாதகனவுகண்டேன்
மெய்யாய்முடிந்ததுவே வேந்தன்செயல்தானோ
பொய்யாமுலகமதில் புண்ணியமுந்தானில்லையோ
செய்யும்வினையறியேன் சிவமேபரசிவமே.

வசனம்.

ஐயையோ தெய்வமே, நான் இதற்குத் தானோ பொல்லாக் கனவுகண்டேன், சற்று நேரத்திற்கெல்லாம் நான் கண்டகனவுமெய்யாய்விட்டதே. இந்த வினைக்குநானென்னசெய்வேன் ஆண்டவனே. இந்தப்பேயுகத்தில் புண்ணியமும் மறைந்துபோய்விட்டதா?

குமாரியாயி கொச்சகம்.

சிந்தைவருந்தித்தியங்குவதிலென்னபயன்
வந்தவினைதான்வழியினிலேநிற்காதே
மைந்தரொடுநான்போறேன் மங்களமாநீயிரம்மா
அந்தமன்னன் தன்னையடிபணிந்துவாறேனே.

வசனம்.

தங்காய், இனி நீ வருந்தியாவதென்ன? வரும்வினை வழியில் நின்றுவிடுமோ? நான் போகிறேன், அவனைக் காலைப்பிடித்திரந்து கேட்டுக்கொண்டுவருகிறேன். நீஅஞ்சாமலிரு.

குமாரியாயி மழுவர்களுடன் போகுதல்.

தரு.

இ-ம்-சாமா-தா-சாப்பு.

மன்னனுரைப்படி மழுவர்பின்றொடரவே
மங்கைநான்போறேனடி. தங்காய்
மங்கைநான்போறேனடி.

என்னை நீநினைந்து இதயங்கலங்காதே
இங்கேதானீயிரடி. தங்காய்
இங்கேதானீயிரடி.

ஆளென்ன துமணை வாள்ளுமில்லையே
யாருந்துணையில்லையே தங்காய்
யாருந்துணையில்லையே.

பாலருடனேநான் பரதேசிபோலவே
பாவிநான்போறேனிதோ அம்மா
பாவிநான்போறேனிதோ.

சிலென்கணவனைக் கோலநகரினிற்கு
தெரியாதனுப்பினனே சம்போ
தெரியாதனுப்பினனே.

வசனம்.

அரசன்கட்டளைப்படிநான்போகிறேன். கலங்காதிரு. ஐயோ இங்கே ஆருந்துணையில்லையே. உன்னைத்தனியே விட்டுப்போகவுங் காலம் வந்ததே. இந்தப்பிள்ளைகளையழைத்துக்கொண்டுபரதேசியைப் போலப்போகிறேன். இந்தப்பாவி சண்டாளப்பாதகி அறியாமல் அவரை அனுப்பினேனே. ஆண்டவனே நீயேதுணை:

இருபத்தைந்தாங்களம்.

இடம் — இராஜன் அரண்மனை.

மழுவர்கள்.

வ-ம் மண்டலேஸ்வரா, கட்டளையின்படி மந்திரி மனைவியாரைக் கொண்டு வந்து விட்டோம்.

அரசன்.

வ-ம். மந்திரி யென்ப தொருகேடா, வந்து விட்டாளா ?

குமாரியாயி சந்தம்.

இராகம் - சுருட்டி - தா - ரூபகம்.

கீர்த்திமிகுத்திடுங்கொற்றவா அபயம்
கேள்விமிகுத்தறிவுற்றவா அபயம்
சீர்த்திமிகுத்திடுஞ்செல்வனே அபயம்
தீனதயாளசுகுணனே அபயம்
பார்த்திபர்போற்றும்பாதனே அபயம்
பாதுகாப்பதுன்பாரம் அபயம்
பூர்த்தியானசுகபோகனே அபயம்
புண்யபுருஷபூமானே அபயம்.

வசனம்.

பிரபு, கட்டளையின்படி வந்து விட்டேன். இந்த ஏழையை ஆதரிக்க வேண்டுவது தீனதயாள சமூகத்திற்குக் கடன்.

அரசன் சந்தம். ஆதி.

அறிவேன் அறிவேனுனைநா னறிவேன் அபயமென்றது மறிவேன்
தெரிவேன் தெரிவேன் தெரிவேனுந்தன் சித்தசமர்த் தெல்லாம்
பொறியோனுந்தன் புருடனுமெங்கே போனானதை நன்றாய்
விரைவாயொளியாதுரைசெய்முன்போல் வெறுமொழிபுகலாதே.

வசனம்.

ஆதரிக்கவா வேண்டும். வேண்டுந்தான், நீ மகா சாமர்த்தியவதியல்லவா ? உன் சாமர்த்தியம் எனக்குத் தெரியும். தெரிவேன் தெரிவேன், கெட்டிக்காரி, நல்லதிருக்கட்டும். உன் கணவன் எங்கே போனான். அதைச் சொல். வேறொன்றும் வீண் வார்த்தைகள் வேண்டாம், உண்மையை மறைத்தால் தெரியுமா ?

குமாரியாயி உலா.

உண்மையுரைப்பேனையனே எனதுநாதன் ஊரிசெல்லேயையனே
தன்மைமிகுத்தஐயனே லங்கைநகர்க்கு தானேபோயினானையனே

வசனம்.

பிரபு, இந்தச் சமூகத்தில் உண்மையை மறக்க ஒரு பொழுது பிசையமாட்டேன். அவர் ஊரிலில்லையென்பது மகாராசாவிற்கே தெரியும். இப்பொழுது கொளும்பி லிருக்கிறரென்று தெரிகிறது.

அரசன் தரு.

இராகம் - பியாக் - தா - ஆதி.

மானேயவனந்தலங்கைநகர்தனக்கு
ஏனேபோனானையானறிய
தானேசொல்வாயினி சொல்லாவிட்டால்விடு
வேனோவுனைபொய்பேசாதே நீ,

வசனம்.

கொளும்பிற்குப் போயிருக்கிறனே? நல்லது ஏன் அங்கே போனான். ஒளிக்காமற்சொல். பொய் பேசினல் விடமாட்டேன்.

குமாரியாமி உலா.

சுந்தரகுணத்தையனே எனதுநாதன் துயரமடைந்தாரையனே
அந்ததுயராலையனே கொளும்பினுக்குஅனுகலுற்றரென்னையனே

வசனம்.

ஏதோமனத்துன்பத்தாற்போயிருக்கிறரென்றுநினைக்கிறேன்

தரு.

என்னதுயரதுபின்னதெனவேநீ
சொன்னல்தெரிகுவேனுன்றனினி
முன்னேசொன்னற்போலே இன்னும்பொய்சொல்லாதே
உன்றுமவன்கருத்தென்பின்னே.

வசனம்.

என்ன துன்பமது இன்னதென்று விளங்கச்சொல். முன்னே பொய் சொல்லிப் போனதுபோல் இப்பொழுதும் வேண்டாம். என்ன துன்பம், எது கருதிப்போயிருக்கிறன்.

கண்ணி.

பங்கமில்லாதஜயனே நீர்தானவரை பகைத்தீரதனலையனே [னே
இங்கிலீஷ்மன்னனுக்குகையனே எல்லாமுரைக்கஏகினர்மெய்யேஜய

வசனம்.

தாங்கள் அவருக்குத்துன்பஞ் செய்தீர்களாம். அதைக் கொளும்பாசருக்குச் சொல்லப் போயிருக்கலாமென்று நினைக்கிறேன்.

தரு.

அந்தக்கொடியோன் துணிந்திதுசெய்யவி
னைந்தான்மறந்தான்செய்நன்றிதனை
விந்தையானகடிதத்தின் கருத்தினை
மெய்யாகநீயறிவாயோசொல்வாய்.

வசனம்.

நான் அவனுக்குத் துன்பஞ்செய்தேனா. அடே செய்தநன்றி கொன்றதீயா, என்ன துணிவிவனுக்கு. அவன் எழுதின கடித முனக்குத் தெரியுமா?-

குமாரியாமி கொச்சகம்

தீதுமறியேன்செப்பரியவும்மிருவர்
வாதுமறியேன்மகிபாயிக்கடிதத்தின்
சூதுமறியேன்சூழ்ச்சியையுந்தானறியேன்
ஏதுமறியேன் இயம்புவதுசத்தியமே.

வசனம்.

பிரபு, இந்தச் சமூகமறியச் சத்தியமாய்ச் சொல்லுகிறேன். உங்களிருவருக்கும் நடந்த வாதும் எனக்குத் தெரியாது. கடிதமென்று சொல்லுகிறீர்களே. அதன்சூது மெனக்குத் தெரியாது. எனக்கொன்றுமே தெரியாது.

அரசன் சந்தம். அடதாளசாப்பு

எனக்கவன்மனத்துயர்விளைத்திட நினைத்திடுமிரும்பழியினால்
உனக்குரியமக்களையுயிர்க்கொலைசெய்வித்துரலிலிட்டுமதாய்
இனித்துணிவுறச்சிறிதிரக்கமதைவிட்டுநீயிடிக்கவுமுனை
சினத்தொடுகுளத்தினிலழுத்திடவு மாக்கினைகள்செய்குவேனே.

வசனம்.

எனக்குப்பாதகம் நினைத்த அந்தப் பாதகனை நான் சும்மா விடுவேனே! உலகமறிய அவன் மனைவி மக்களுக்கு இதோ பாதகம் செய்ய நிச்சயித்துவிட்டேன். கொலையாளிகளே, என் தாமதிக்கிறீர்கள். இவள் பிள்ளைகளை முதலிற் தலையைக் கொய்து உரலில் போட்டு இவளைக் கொண்டு இடிக்கச் செய்யுங்கள். பிறகு இவளைக் கல்லைக் கட்டிக் குளத்தில் அமிழ்த்தலாம்.

## இருபத்தாறுங்களம்.

## இடம் – இராணி அரண்மனை.

### இராணி அரசனுக்கு நீதிகூறல்.

லாவணி.

இந்தக்கோபஞ்செய்தால் நிந்தையேவந்தமூளும்
இறைவனேயென்சொல்லைக்கேளும் (இந்த)

சிந்தைதவெகுண்டுவீணாய் நிந்துசெய்யத்துணிந்தீர்
சிறியோர்பிழைபொருப்பாரே பெரியோர்
அந்தமாதென்னசெய்தாள் ஐயோ பெரும்பழி வந்திடுமே
அரும் பாவரைவிடுமே
சுந்தரனேநம்மை யில்லாமல்யாருந்
துணையவர்க்காரருள் சுரந்துகண்பாரும்
உந்தன்கையைப்பிடிப் பாரில்லையேநீரும்
உலகம்பழிக்கப் பேசிக்காதீர் வாரும் (இந்த)

சின்னஞ்சிறியதொருசிசுவதை செய்வதென்னகோரம்
உமக்கென்னதான்திரம்
அந்நீதமாகவே ஸ்திரீவதைசெய்வதுவோ வீரம்
அரும் பழிவந்துசேரும்
இன்னுமனதிரங்க வில்லையோயென்துரையே
எவர்க்குநலமேசெய்யு மினியதுரைவரையே
துன்னுமூர்க்குரிவியின் மேல்ராமபுராணம்
தொடுக்கவென்றால் வெகுநேரமோகாணும் (இந்த)

ஆய்ந்தோய்ந்துப்பாராதான் தான்சாகக்கடவதென்பதையே
மூற்றுமறந்தீரோ பதியே
தேர்ந்தமந்திரியவன் உனக்கொருதுயர்செயநினையான்
காம தேனுவை யனையான்
சார்ந்திடும்வஞ்சக ரெவர்செய்தசூதோ
தனவானேஎலப்பழி சூழ்ந்தெரியாதோ
நேர்ந்தகதிதமவ னெழுதுங்கையெழுத்தோ
நேரிலிவர்கள்மடி வதுந்தலையெழுத்தோ (இந்த)

வசனம்.

பிராணபதி, என்னசெய்யத் துணிந்தீர்கள் இது யார் செய்யும் வேலை. என் உங்கட்கு இந்தக் கோபம். வீண்பழி யல்லவோ வந்து சேரும். சிறியோர் செய்த பிழையை பெரியோர் பொறுக்

காவிடில் தந்தையார் பெரியோரென்றழைப்பார். குமாரியாமி என்ன தீங்குச் செய்தாளென்று நீங்கள் அவளை இப்படிச்செய்ய நினைத்தீர்கள். நீங்கள் அப்படியே செய்துவிட்டால் உங்கள் கையைப் பிடிப்பவர் யார். அந்தச் சிசுக்கள் தங்களுக் கென்ன தீங்கு செய்தார்கள். சிசுஹத்தி தோஷம் வந்து விடும். ஸ்திரீ ஹத்தி சிசுஹத்திகளை விட உலகில் வேறெந்தப் பாவம் மூக்கியமானது. பேதையர்களான ஸ்திரீயையும் சிசுக்களையும் கொல்லுவது தானோ வீரம். இது ஊக்குருவியின்மேல் ராமபாணந் தொடுத்த கதையாயிருக்கிறதே. கோள் மூட்டும் துராத்மாக்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு சன்மார்க்கரான எப்பளையைக் குறை நினைத்துத் தாங்கள் இப்படிச் செய்வது சரியல்ல. அவர் நல்ல குணவான் அவர் எழுதினரென்று முற்றும் நினைக்கக் கூடாது. அவர் கையெழுத்துமல்ல, பாருங்கள்,

அரசன் தரு.

இராகம்-அடாணு தா - ஆதி.

மதத்தினு லென்னை யெதிர்த்தவ மதித்துநீ
மதிசொல்லவந்தாயோ — மதத்தி.

பேதைப்பேனுனையுமினி வம்புசெய்யாதே சீ
மாட்டிகா மாட்டியஜ் காட்டிகை நீட்டி நீட்டி — மதத்தி.

மனைவிசொல்லை தடுக்காதென்றே மதித்துநீயும்
வாதேசெய் யாதேநன் நீதிபே சாதே மாதே — மதத்தி.

முக்கண்படைத்தோன் வந்தாலுந்தடுக்கமுடி
யாதுவுன் வாதுசெல் லாதுபோ ஏது யேது — மதத்தி.

பாரில்தனைக் கொல்லவந்த பசுவைக்கொல்லுவதேவு
பாயம்வு பாயம்வு பாயமநன் ந்யாயம் ந்யாயம் — மதத்தி.

வசனம்.

நீயேன் இங்கே வந்தாய். இவ்வேளை இங்கே நீ நில்லாதே போ. இனி நீ எதிர்த்துப்பேசினால் கொன்று விடுவேன். நீ எது சொல்லினும் என்காதிற்படாது. திருநேத்திரன் வந்தாலும் என்னைத் தடுக்க முடியாது. தன்னைக்கொல்ல வந்தபசுவையுங் கொல்ல லாமென்பது எனக்குத்தெரியும். உன் நீதி போதும் போ. நிற்காதே.

அரசன் மழுவர்க்குச்சொல் சந்தம்.

அடதாள சாப்பு.

மாவலிமையோடுமுயராகியறவேகொலைசெய்மழுவர்நீரே
தாவியிவர்பாலர்தலைமதுவில் தலையேபுரளத்தான் துணிந்தே
ஏவலுறவேகையினிலே முசலமுற்றியுளிடிக்கவைப்பீர்
பாவமெனவேசிறிதுமே கருதிடாதுசொற்படிசெய்வீரே.

வசனம.

கொலையாளிகளே. என் இன்னும் திற்கிறீர்கள். பாவமென்று சிறிதுமஞ்சாதீர்கள். நான் சொன்னபடி செய்யவேண்டும். அவள் பிள்ளைகளை தலையைக்கொய்து அவள் கையில்கொடுங்கள். எங்கே உரலும் உலக்கையும்.

குமாரியர்பிதாழிசை.

பாலகர்தலையைவெட்டிடாதிறைவனே பாதப்பணிந்தேனையா
பாவமிதுவென்னைவெட்டிவிடுமையே பதறுதுடலையா.

வசனம்.

பிரபு. இராசாதிராசா. உமக்கு ஆயிரங்கோடி புண்ணிய முண்டு என்னை வேண்டுமாயினும் வெட்டிக்கொல்லுங்கள். பிள்ளைகளை வேண்டாம்பிரபு. என்னுடல்பதறுதே. ஐயோ ஆண்டவனே.

பிள்ளைகள் தரு.

இராகம்-சாமா-அடதாளசாபு.

சாந்தகுணமுள்ளஎங்கள் வேந்தனேஉன்தாள்சரணம்
தப்பிலாதவெங்களையேன் இப்பொழுதுகொல்லவந்தீர்
சாற்றிடுவீர் சாற்றிடுவீர் தயைபுரிந்துசாற்றிடுவீர்தற்காப்பீர்-சா
தந்தையில்லாவேளையிலே தந்திரமாய்கொண்டுவந்து
தாயுங்கண்ணுறவேகண்டு தயங்கவெமைக்கொல்லவந்தீர்
சதியிதுவோசதியிதுவோ தயைபுரிவீர்தயைபுரிவீர்தற்காப்பீர்சா
எங்களைக்கொல்லுவதால் உங்களுக்குயென்னபயன்
என்னபிழைசெய்தோமென்று இன்னவிதஞ்செய்பலானா
ஏங்குகின்றோம் ஏங்குகின்றோம் எமைக்காப்பீர் எமைக்காப்பீர்
[வெட்டாதீர் - சா.

வ-ம். ஐயா, இவர்கள் வெட்டவாரான்களே. நாங்களென்ன செய்தோம். அப்பாயிருந்தால் இவர்களுக்குச் சொல்லுவோம். ஐயோ பயமாயிருக்குதே. அம்மா ஐயோ எங்களை ஏன் சொல்லச் சொன்னீர். அவர்களுக்குச் சொல்லுங்களையா.

மருவர்க்ள் அரசன்கட்டளைப்படி பிள்ளைகளைவெட்டுதல்.

குமாரியாமி புலம்பல். தாழிசை.

ஐயையோசண்டாளன்பிள்ளையைக்கொன்றனே ஆதியேபரமேசா
வெய்யவனென்னகரகில்விழுவானோ விமலாயேஜெகதீசா
அங்கந்துடிக்குதே ஆவியுஞ்சோருதே ஐயையோவென்பாலா
பொங்குதேரத்தமும்உண்டிட்டபாலும் போனையேயென்பாலா.

வசனம்,

ஐயோ, ஐயோ, அடேசண்டாளா என்னவேலைசெய்தீர்கள், பரமேஸ்வரா. இந்த சண்டாளர்களுக்கு என்னகதிவிடுவையோ. ஆண்டவனே. ஐயோ என்பிள்ளைகளிரத்தம் வடியுதே. குடித்த பாலும் பீறிட்டடிக்குதே. என்வயிறு துடிக்குதே பிராணேசா.

(அரசன்.) வயிறு துடிக்குதா? இப்பொழுதெங்கேசாமர்த்தியம். அடே அந்ததலைகளை உரலில்போடுங்கள். அவளைக்கொண்டு இடிக்கச்சொல்லுங்கள். என் இன்னும் நிற்கிருள்.

குமாரியாமி தரு.

இராகம் - முகாரி - தா - ஆதி.

| | |
|---|---|
| எந்தன் தவத்துதித்த பாலரே | உம்மை |
| இடிக்கத்துணிந்தனனே | பாலரே |
| சிந்தைகலங்குதடா பால்ரே | உம்மை |
| சிதைக்கத்துணிந்தனடா | பாலரே |
| பத்துமாதஞ்சுமந்தேன் பாலரே | உம்மை |
| பதைக்கயிடிக்கலானேன் | பாலரே |
| முத்தமிட்டுவளர்த்தேன் பாலரே | உடல் |
| முறியயிடிக்கலானேன் | பாலரே |

வசனம்.

பரமேஸ்வரா, வயிறுசரியச் சரியத் தளர்ந்துபெற்ற என்மக்களை என்கையாலே இடிக்கும்படிசெய்த உன் திருவிளையாட்டுக்கு என் தீவினையல்லவா காரணமாயின்றது.

தரு.

இராகம்-சஹானா. தா-ரூபகம்.

பாலும்பழத்துடன் ஊட்டிவளர்த்த பாழுங்கையாலே இந்த
பாறையுரலி லிட்டிடிக்கிறேன் பார் உலக்கையாலே
கோலத்திருமேனி கூழ்போல்நசிங்கிட
குற்றங்குறையின்றிப்பெற்றயென்பாலரை பாலும்.

பொட்டிட்டு மையிட்டுவளர்த்த பொல்லாதகையாலே ரத்தம்
பூரித்தோடயிடிக்கின்றேனே பூணிலுலக்கையாலே
கட்டிக்கரும்பே கனிரசமேயென்ற
கண்ணுனமைந்தனை புண்ணுனநெஞ்சினேன் பாலும்,

வண்ணமேனி வதங்கிடாமல் வளர்த்தகையாலே
மார்போடணைத்துப் பால்கொடுத்து வளர்த்தகையாலே
திண்ணமாகவே சிதைத்திடிக்கிறேன்
செல்வச்சிறாளரை செய்தலப்பாலரை பாலும்,

குமாரியாயி புலம்பல்.

தாழிசை.

நாதா வென்னைவிட்டேன்பிரிந்தாய்
நடுங்கவென்னையும் மைந்தரையும்
நீதாய்மன்னனுக்கினை யே
செய்தானென்செய்வோ மே
ஆதியானசிவமே எந்தனைவந்
தாதரிப்பாய்சிவமே
ஜோதியானசிவமே என்னிட
துயரொழிப்பாய்சிவமே.

போகும்போதே நான் தடுத்தேன்
போவோம்வூரைவிட் டுயென்றேன்
ஏகும்போதே தடுக்கா தே
என்றேயுவரும்புகன்றன ரே
ஏகமானபொருளே இப்பொழுதே
எந்தனுக்கேயருளே
சோகந்திருமிறையே உமையவள்
பாகனுன இறையே,

அரசன் வசனம்.

கொலையாளிகளே, இடித்தாய்விட்டதல்லவா. இனி அவளைக் கழுத்திற் கல்லைக்கட்டிக் குளத்திலமிழ்த்தி வாருங்கள்—சீக்கிரமா கட்டும்,

குமாரியாயி புலம்பல் தரு.

இராகம் - ஆனந்தபைரவி. தா - சாபு.

தனியாய் நின்றனனே சம்பேச
சந்திரஜடாதரனே கங்காதரனே தனி.

மனமுருகுதே நிலைவுமாறுதே
இனமுஞ்சோதனைபுரிதல் நீதியோ தனி.

அநியாயமிதுபோல் பாரில்
ஆர்தான்செய்வாரையோ ஐயோசிவனே
வினையிதாகுமோ விதியிதாகுமோ
முனிவர்சாபமோ எனதுபாவமோ தனி.

துரையே நீபிரிந்தாய் பாவி
துன்பப்படவிளைத்தாய் தோகையைமறந்தாய்
அரசேபுதல்வரு பிறக்கநேர்ந்ததே
அடியாள்குணத்தினில் மடியவாய்ந்ததே தனி.

தங்கையென்படுவாள் ஆவி
தன்னையேவிட்டிடுவாள் கெட்டிடுவாள்படுபாவி
பொங்கராவணி சங்கராவுமை
பங்கனேயெமக் கென்றும்நீதுணை தனி

வசனம்.

ஐயோ, என்கதிதான் இப்படி முடிந்தது. என் அருமைத் தங்கையின் மனம் என்னபாடுபடுமோ. யாரவர்களைக் காப்பார்களோ. அவள் எது இனி உயிர்வைத்திருப்பது. பரமேசா, நீயே துணை.

(அரசன்) அடே, இன்னுமென்ன தாமதம்.

குமாரியாமி தரு:

(அல்பிதரயோ) என்கிறமெட்டு.

கோமகன்பெற்ற பாலரைமனங்
கூசிடாமலே யிடித்தனே
பூமலர்க்குளந் தன்னிலேவிழ
போறேனே யிதோ போறேனே போறேனே.

ஆணவத்தினால் வந்ததோவிது
ஆரிட்ட பெருஞ்சாபமோ
வாணரைமுனிந் தேனோபாவிநான்
மாணாகினில் வீழ்வேனே வீழ்வேனே.

தாலத்தில் கொலைபாதகஞ்செய்து
தாவிசொர்ந்திட லானேனே
ஞாலத்திலென்போல் பாவியாரென
நாளும்பேர்பெற லானேனே வானனே.

வசனம்.

நான்யாரை அநியாயஞ்செய்தேனோ யாரிட்ட சாபமோ எனக்கிந்தகதி கிடைத்தது. எல்லாந் தெய்வச்செயல். இந்த மண்ணுலக வாழ்வு எனக்கின்றோடுமுடிந்தது பரமேசா, இந்த அல்லற் பிறவியையொழித்து எனக்கு இனியேனும் உன்திருவடியைத்தந்தருள்.

மழுவர்கள் குமாரியாயியை குளத்திற்தள்ளிவிடுதல்.

மழுவர் கவி.

வள்ளலேமாதுதன்னை துள்ளவேவாவிதன்னில்
தள்ளியேவிட்டுவந்தோம் கள்ளமேயில்லையையா.

வ-ம். ஆண்டவரே கட்டளைப்படி குளத்தில் தள்ளி விட்டோம்.

அரசன் தரு.

(குருல்யாக இடுவண்டி) என்கிறமெட்டு.

இனிதான குண முள்ளிக்கொடையே நினைத்ததுபோல்
மனதாரமுடித்திட்டேன் எனையுமெதிர்ப்பார்களோ இனி.

எனதருமைமனைவியையும் பாலரையுங்கொல்வேனென
எழுதினனேலப்பனை யவன்மனைவிமைந்தரை
சினமதாய்நானவரை சேதித்துமுரலினில்
மனநோகத்தாயா ரிடித்தபின் தள்ளினேன் இனி.

இலங்கைநகர்க்கவனேகி இறைவனையுந்துணைகொண்டு
வலிதுடனேயெனைவெல்ல வருவானேயாகில்
சமர்செய்துவெல்வனே வயமிகும்[illegible]போரில்
மதியாதகொடியோனை வாளினால்கொல்லுவனே இனி.

வசனம்.

முள்ளிக்கொடை, நினைத்ததுபோல் முடித்துவிட்டேன். இப்பொழுதுதான் என்மனம் திருப்தியடைந்தது. இனி எலப்பனையின் தந்திரங்கள் என்ன. என் மனைவிமக்களை இனியெங்கே கொல்வது. ஆங்கிலேயரைத் துணைகொண்டு அவன்வரும்பொழுது பார்ப்போம். அப்படி வந்தால் அவனும் தொலைந்தான்.

முள்ளிக்கொடை கட்டளை கலிப்பா.

எம்மையாளுடையேந்தலே எங்கணும்
எத்தருங்குண கீர்த்திசிங்கேந்திரனே
உம்மைப்போலநீதிவான்களும் வீரரும்
உலகிலுண்டோ வென்னையனே மெய்யனே
நம்மையேயெவர்வந்தெதிர்த்தாலும்நாம்
நாசமாக்குவோ மோசமதற்கில்லை
செம்மையாக மனத்திற்கிலேசமே
சிறிதுங்கொள்ளா திருத்தலதயிர்யமே.

வசனம்.

மகாராசா, தங்களோடு ஒருவன் எதிர்த்துப் பிழைக்க வா? தங்களைப்போன்ற வீரதீர நீதிவான்களும்கீர்த்திமான்களும் இவ்வுலகிலிருக்கிறார்களா? தங்கள் துணிவே துணிவு. தடையென்ன?

முள்ளிக்கொடை விருத்தம்.

தானொன்றுநினைக்கத் தெய்வந்தானொன்று நினைத்ததே போல
ஆனதேயந்தோவீணாய் அரும்பழி தேடிக்கொண்டேன்
போனது போச்சுதந்தப் புனிதனுக்கிந்தசெய்தி
தானுரைத்தனுப்பில் என்மேற்சந்தேகங் கொண்டிடானே.

வசனம்.

அடடா என்னகாரியம்நடந்துவிட்டது. நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்துவிட்டதே. இப்படி வருமென்றுகண்டால் நான் இந்தக்காரியத்தில் சென்றிருக்கமாட்டேனே? நாம்தானே அந்தப்பழிக்குக் காரணனானேனும். இவன்தான் இவ்விளவிற்குங்காரணனென்றல்லவோ எலப்பளி நினைப்பார். அவருக்கு இந்தச்செய்தியை நாமே அறிவித்துவிட்டால் நம்மேற் சந்தேகமுண்டாகாது.

அடா தூதவரே, நீங்கள் ஒருவருமறியாமற் கொழும்பிற்குப் போய் அங்கே எலப்பளி அதிகாரமிருப்பார் அவரிடம் இந்தக்கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சீக்கிரம்வாருங்கள்.

தூதுவர் கடிதத்தையெடுத்துக்கொண்டு கொழும்பிற்குச்செல்லுதல்.

மூன்றும் அங்கம் முதல்களம்.

இடம்—இரஞ்சிதை மாளிகை.

காலம்—நிகழ்.

தோழி குமாரசாமிக்கு நேரிட்ட நிந்துகளை தெரிந்து இரஞ்சிதையிடஞ்சொல்லுதல்.

தரு.

இ-ம். காமா - தா - சாபு.

அம்மா என்னசொல்வோம் சொல்ல
ஐயோ வாய்வல்லையே என்னசொல்வோம்
பெம்மான் திருவருளோ இந்தப்
போன துன்பத்தை யென்னசொல்வோம் அம்மா

பாவியானவன் சிறுபாலரை வெட்டினான் வெட்டினனே
தாவியுரல்தனிலே பெற்ற தாயாரிடித்திடச்செய்தனனே - அம்மா.
மேனிதனையுமவன் அந்தத்துரோகி தான் சிறிகொளத்தில்தள்ளி [விட்டானே
ஆவிபிரிந்தனளே அம்மா அக்கிரமத்தாலவர் தள்ளினனே-அம்மா

வசனம்.

இரஞ்சிதமோகனி, சேதிகேட்டனையா? சொல்லக்கூட எனக்கு நாவெழவில்லையே, தெய்வச்செயல் அப்படிமுடிந்தது. நீ என்னபாவஞ்செய்தாயோ உன்கதி யிப்படிமுடிந்தது.

(இரஞ்சிதை) என்னடியம்மா சொல்லம்மணி.

(தோழி.) என்னதைச் சொல்வேன். அந்தச்சண்டாளன் நாசமாய்ப்போவான் செய்தகொடுமையை எப்படிச் சொல்வேன். பிள்ளைகளையும்வெட்டி உரலிலிட்டுத்தன் கையைக்கொண்டே இடிக்கச்செய்து கடைசியாக உன் அக்காளையும் குளத்தில் தள்ளிவிட்டானும்.

இரஞ்சிதை புலம்பல்.

தரு.

இ-ம். காதராமகிரியை - தா-ஆதி.

மடிந்தனரோ புதல்வர் கண்ணின்
மணியாமெனதருபுதல்வர் மடிந்தனரோ

துடி துடித்துக்கண் ணீர்சொரிந்து
சோர்ந்துநெஞ்சமும் தான்பயந்து
கொடியோன்வாளினால் சிரங்களும் வீழ்ந்து
கோமளமேனி சாய்ந்து மடிந்தனரோ.

அன்பின் தந்தையை அங்குநினைந்து
அம்மா அம்மாவென் றழுதகரைந்து
இன்பமனைத்தும் எண்ணிக்கசிந்து
என்புமுறிய மசிந்து மடிந்தனரோ.

இந்தப்பழிக்குக் காரணம்நானே
இப்படியாமென் றெண்ணமற்போனேனே
முந்திதெரிந்திருந்தால் இறந்திருப்பேனே
முழுதும்பழிக்கா ளானேனே மடிந்தனரோ.

வசனம்.

ஐயோ என் அருமை அக்காள் மடிந்தனர்களா? சண்மணிகாள் அந்தச்சண்டாளன் வெட்டும்பொழுது என்பிள்ளைகள் என்ன துடி துடித்தனர்களோ? இந்தச் சண்டாளிதானே இந்தப்பழிக்கெல் லாம் காரணமாய் நின்றேன். எனக்கிது முந்தியேதெரிந்திருந்தால் இதுவொன்றும் நடவாதபடி என் உயிரைவிட்டிருப்பேனே.

தரு.

இராகம்- சௌராஷ்டகம், - தா - சாபு.

அக்காயிறந்தாயோ ஆஹா என்னருமை
அக்காயிறந்தாயோ
பக்கலிபிடிக்கையில் மனமென்னநொந்ததோ
மாலிலாதவனுக்கு யிவ்விதிவந்ததோ அக்கா.

தெய்வச்செயல்தானோ இப்படியவன்
செய்ததும்விதிதானோ
ஐயையோமக்களா அவன்கையிலகப்பட்டு
ஆருயிர்விட்டீரே அரும்பாவியெனைவிட்டு அக்கா.

தன்னந்தனியானேன் உனைப்பிரிந்தும்
இன்னுமிருக்கின்றேன்
என்னைத்தர்க்காத்திட்ட இறைவியேபாவி
விர்ந்தனையேஐயோ [illegible] அக்கா.

வசனம்.

அக்காள், நீயுமிறந்தனையா? ஐயோ மக்களைப்பிடிக்கும்பொழுது உன் வயிறு எப்படிப்பற்றியெரிந்ததோ அப்படியே அந்தச்சண்டாளன் குடும்பம் நாசமாய்ப்போகாதா. என்னைத்தனியேவிட்டுப் போனையே அக்காள்.

தோழிகள் தரு.

இராகம் - ஆனந்தபைரவி - ஏகதாளம்.

என்னசெய்யலாம் நாம்
என்னசெய்யலாம் அம்மணி
ஏதுசெய்யலாம்
இனிமனம் வருந்தினல்
என்னலாபம் என்னலாபம் என்ன.
சிந்தைவாடியே நீ
வருத்தப்படாதே அம்மணி
தேகம்நில்லாதே
சிவன்செயல் சிவன்செயல்
தெரிச்சோகந் தீருவாயே என்ன.
எப்போதாயினும் நாம்
இறக்கவேண்டுமே அம்மணி
ஏனழுகிறாய்
இறைவியே இறைவியே
போதும் போதும் நீயழாதே என்ன

வசனம்.

இரஞ்சிதை, நீ இனிவருந்தியாவதென்ன? என்றைக்கிருந்தாலும் இறப்பது நிச்சயம். எல்லாம் ஈசன்செயலென்றிருக்கவேண்டுமேயொழிய நாம் வருந்தி இதில்பெறக்கூடியலாபம் ஒன்றும் இவ்வுலகில் வைக்கப்படவில்லையே.

---

இருபத்தேழாங்களம்.

எலப்பனே தான்கண்ட கனவை தோழனிடந்தெரிவித்தல்.

லாவணி.

கண்டகனவையென்சொல்வேனடா தோழா என்தோழா
கருத்தினுஞ்சேராதேதோவகைப்பேய்கொளுமெனத்தோழா என்தோழா
அங்கென்னகேர்ந்ததோ அறிகிலேனினி நானே இனிநானே
அகத்தில்பூதங்களிரண்டு நகைப்பதைக்கண்டேனே கண்டேனே

ஓர்பசுவைப்பூதங்கள்பற்றியிழுத்திடக்கண்டேன் நான்கண்டேன்
பசுவின்கன்றுகளிரண்டைக்கொல்லவுங்கண்டேன் நான்கண்டேன்
அந்தபசுவைக்கட்டியேபிடித்திடக்கண்டேன் நான்கண்டேன்
பாழுங்குளத்திலே தாவித்தள்ளவுங்கண்டேன் நான்கண்டேன்

வசனம்.

தோழரே, நான் எப்படிச்சொல்வேன், என்மனந்தத்தளிக்கிறதே. ஒரு பொல்லாதகனவைக்கண்டேன். அதுமுதல் என்மனம் தளம்புகிறது. அங்கே என்ன நடந்ததோ, அந்தச்சண்டாளன் ஏது செய்தானோ தெரியவில்லை. நமதுவீட்டில் இரண்டுபூதங்கள் நுழைந்து ஒருபசுவைப்பற்றியிழுத்து கன்றுக்குட்டிகளைக்கொன்று அந்தப்பசுவையுங் கட்டிக் குளத்திலே தள்ளக்கண்டேன். அந்த கனவின் பலன் அவ்வளவு நன்மையைத் தரத்தக்கதென்று எண்ணமுண்டாகவில்லை.

தோழர் வசனம்.

பகைகளிலும் மனங்கலக்காத தாங்களே இப்படி வருந்தலாமோ. கனவெல்லாம் உண்மையென்று எப்படிநம்பலாம். நினைவே கனவென்பது தங்கட்குத்தெரியாதா? இதற்கெல்லாம் மனந்தளராமல் காரியமுயற்சியில் மனதைச்செலுத்தி நடத்தினால் சீக்கிரத்தில் நமக்கு ஜெயமேயுண்டாகும்.

எலப்பளீ சந்தம்.

அடதாளசாபு.

எனக்கிசைத்தஉயிர்தனையினித்திருக்கும்புத்தமுதை
மனத்தில்வளர்மடவனத்தைமடமயிலைமாங்குயிலை
கனத்தன்தனக்காதலையக்கண்மணியாம்பாலர்களைச்
சினக்கொடியன்துயரேதுசெய்தனனோதெரிந்திலனே.

கற்பகத்தைக்கற்பகத்தின்கனிரசத்தைக்கண்களிக்கும்
பொற்பகத்தையான்பயந்தபுண்ணியத்தைபுண்ணியத்தின்
நற்பயனைநற்றுணையைநற்றவத்தின்புத்திரரை
சொற்பனத்தில்கண்டதுபோல்துயரேதுபுரிவானோ.

கண்மணியைக்கண்மணியிற்கலந்தாடும்பாவையையென்
பெண்மணியைக்குலமணியைப்பெருங்கருணைக்குணமணியை
உண்மணியைத்தவமணியாயுதித்தவென்றன்பாலர்களை
வன்னைநகர்விடுத்துவந்தேன்வன்மனத்தனேனே.

வசனம்.

தோழரே, நீர்சொல்வது சரிதான், அந்தக்கொடியன் நமது இரஞ்சிதபூஷணியைக் கருதினவனாதலால் அவன் உடன்படாததை நோக்கி அவனுக்கு கோபமுண்டாகாமலிருக்க முடியாது. அவன் கோபம் நாமுமங்கில்லாதவேளையில் சாமானிய அளவோடு அடங்கிவிடாது. அதற்கேற்க இந்தக்கனவும் சாந்தியடையத்தக்கதாய்க் காணப்படவுமில்லை. இரஞ்சிதபூஷணியையென்செய்தானோ? அவளைமுன்னிட்டு நமது அருமைமக்களையும் மனைவியையுந் துயர்செய்கின்றானோ நான் அவர்களை அங்குத்தனியேவிட்டுவந்தேனே. என்னைப்போலக்கன்மனத்துச் சண்டாளர் யாருளார்.

தூதுவர் விருத்தம்.

ஐயனேயெம்மையாளும்அதிபனேநின்தாள்போற்றி
தூயனேஎன்னசொல்வேம்சொல்லநாவெழவுமில்லை
வையமீதறியவேந்தன்வருத்தமேமுடிந்ததின்று
கையிலேதந்தவிந்தக் கடிதத்தைப்பாருமையா.

வசனம்

ஆண்டவரே, சண்டாள அரசன் நினைத்தபடி முடித்துவிட்டான், அந்த அநியாயத்தைச் சொல்லவும் நாவெழவில்லை, இந்தக் கடிதத்தைப் பாருங்கள், (கடிதத்தைக்கொடுக்க)

ஏலப்பன் கடிதத்தை வாசித்துப்பார்த்துப்புலம்பல்.

தரு.

இராகம் - முகாரி - தா - ஆதி.

அங்கந்துடி துடிக்கவும் அன்னையுமலறிடக்க
அரும்பாவிநான்விட்டேன் அப்பாவிப்பாதகம்
அடா பெயலை விடாதடா

உங்கள்மணமயக்க மின்றுயிரைவாளால்வதைக்க
உம்மைவிட்டுவந்தேனடா அப்பாவெப்போதினி
நான்காண்பேனடா.

உதிரவெள்ளம்பெருகதாய் உருகிக்கண்ணீர்பெருக
உரல்தன்னிலிடிபட்டுமே அப்பா அப்பா நீர்
உயிர்மாண்டீர்களா.

வசனம்.

ஐயோ, என் உடல்கொதிக்குதே. அப்பா பிள்ளைகளே உங்கள் தலைவிதி அப்படியாமுடிந்தது. உங்களை மோசமாக்கவிட்டதும் உரலில்

போட்டிருக்கவும் நீங்கள் பசிதக்கவும் உதிரவெள்ளம் பெருகவும் ஒருதயையுமின்றி பெற்றதாய் வருந்தவும் விட்டுவந்த இந்தப்பாதகன் ஆன்மாகதியடைவேனோ?

பிரியே, நீயுமாண்டனையா, குமாரியாயி, என்னைவிட்டுப்பிரிந்தனையா? சண்டாளர் மனந்துணிந்து தள்ளும்பொழுது என்னை நினைவோடு குளத்தில் விழுந்தனையோ? நீ பெற்ற மக்களை உன் இனிய கரங்களால் இறுப்பிக்கும்பொழுது உன்மனம் என்னபாடுபட்டதோ? பரமகுருவே, இது உன் திருவிளையாடலா.

தரு.

இராகம் - காம்போதி - தாளம் - ரூபகம்.

எனிந்தத்துயர்படைத்தனையோ சிவமே
இது விதி விதி விதி விதியோ ஐயோ — எனிந்த

மகனே உலகில்பவமென் செய்தேனோ ஈசா ஜெகதீசா
ஈசா ஈசா அடியவர்நேசா நேசா யிக்கொடியனை — எனிந்த

காதற்கிளியே — கண்மணியேசெழுங்
கன்னற்சுவையே — கறகண்டேகரும்பே
மாதர்க்கரசே — மாமயிலேயெந்தன்மானே
என்மானே மானே மானே யின்பதேனே யென்றுருக — எனிந்த

காலகதிப்படியாமென் — றெண்ணேனே
காதலியைவிட்டுத் — தெருவில்தின்றேனோ
பாலர் தம்மையும் — பாரிலிழக்தேனே
நான்பாவி பாவி — பாவிபவன் தானும்பாவி பாவி — எனிந்த

முல்லையரும்பே — முகிழ்முலைப்பெண்ணே
மோகசமுத்திரமே — முத்தேசெம்பொன்னே
செல்வத்திருவே — சித்தத்தில்நீங்காததேவி
என்தேவி தேவி தேவி — யெந்தன் ஆவி ஆவியென்று — எனிந்த.

வசனம்.

இந்தத்துன்பத்திற்காக என்னை ஆளாக்க வேண்டும். நான் என்னபாவஞ்செய்தேனோ? இப்படிவருமென்று நான்முன்நினைக்கவில்லையே. கொஞ்சமேனுந் தெரிந்திருந்தால் விட்டுவருவேனோ?

விருத்தம்.

கொடுங்கோலின்மன்னர்க்குநீதிசொல
அன்னவன்கோபித்ததற்கழுவனோ
குமரிமேல்காதலாலென்றசெய்தியின்
கொடுமையைநினைந்தழுவனோ.
திடங்கொண்டென்மனைவியையழைத்தவன்
மதியாமல்சீறினசெயற்கழுவனோ
நிரமாய்மக்களைக்கொலைசெய்த
பாதகச்செய்தியைக்கேட்டழுவனோ
இடங்கொண்டதாய்கையிலுலக்கையைப்
பெற்றேயிடித்திட்டதற்கழுவனோ
இடித்தபின்னவளைக்குளத்தினிற்றள்ளிய
யிரும்பழிதனக்கழுவனோ
மடங்கொண்டமைத்துனியின்கெதி
என்னமோவென்றுவழியேநினைந்தழுவனோ
வஞ்சனேன்மரமானநெஞ்சினேனினியேதை
மனதில்நினைந்தழுவனோ.

தோழன் வசனம்.

ஐயா, எவ்வளவு சொல்லியுங் கேளாமலென்கிறீர்களே. இனி அழுதாற் பயனென்ன? நொந்தாற்பயனென்ன? தைரியத்தைதவிடலாமோ? பழிக்குப்பழி வாங்குவதல்லவோ வீரம். விசனம் வேண்டாம். எழுந்திருங்கள் இதையும் ஆங்கிலேயமன்னரிடஞ்சொன்னால் அவருக்கின்னுங் கோபமதிகமுண்டாகும் அப்படி அந்தச்சண்டாளனைப்பழிவாங்காமல்நாமிங்கிருந்து கவலைப்படுவதிலென்னபயன்

எலப்பளி.

சரி, போவோம், வாரும். இனி அவனை எதுசெய்தால்தானென்ன? என்குடும்பம் அழிந்ததற்கு குறைவில்லையே.

---

இருபத்தெட்டாங்களம்.

இடம்—இலங்கை.

எலப்பளி இலங்கை அரசனிடம் முறையிடுதல்.

தரு.

இராகம் - தேசிகதோடி - தா - ஆதி.

என்னசொல்வேன் என்குறையை
பன்னருந்தர்மதுரையே

அன்னிதமாய்மன்னவன் ஐயோஎந்தன்மைந்தரை
சென்னிகள் துணிபடவேச்சிறிவாளால்வெட்டினான் என்ன.

வெட்டுபட்டமைந்தரை பெற்றதாயின்கையாலே
பொட்டிடவுரலிலவன் போட்டிடிக்கச்சொல்லினான் என்ன.

பெற்றவளிடித்தானபின்பு பற்றியேஅவளையும்
சற்றுமிரங்காமலே தான்குளத்தில்தள்ளினான். என்ன.

என்கதியிந்தகதியான தென்னசெய்குவேன்
உன்னைநம்பிவந்தயான்உலகிலெப்படியுய்வேன் என்ன.

வசனம்.

மகத்துவம்பொருந்தியதுரை அவர்கள்சமுகத்தில்இந்தஏழை ஒருவிண்ணப்பம். கண்டி அரசன் சண்டாளன் என்பிள்ளைகளை வாளால் வெட்டிவெட்டித் தலைகளையுரலிலிட்டு என் மனைவியைக் கொண்டு இடிப்பித்தானும் என்மனைவியையுங் குளத்தில்தள்ளிக் கொன்றுவிட்டானும். சமுகத்தை நம்பிவந்த என்கதி யிப்படி முடிந்தது.

இலங்கை மந்திரி வசனம்.

எலப்பனே, விசனப்படாதே. துரை அவர்களுக்கு நீர்சொன்னது நன்றாய்விளங்கவில்லை, விளங்கும்படிசொல்லும்.

எலப்பனே வசனம்.

மாட்சிமைதங்கிய துரை அவர்களே, இந்தஏழையின் குறையெல்லா முறையிட்டுவிட்டேன். இனி நான் முறையிடவேண்டுவதொன்றுமில்லை. என் மனைவிமக்களை கொடுமைசெய்த அந்தக்கொடும்பாவியைச் சேனைகளுடனே இப்பொழுதே புறப்பட்டுத் தொலைத்தாலொழிய உலகம் தன் பத்தினின்றும் நீங்காது. தங்களை விடவேறுதிக்கில்லை காக்கவேண்டும்.

இலங்கைமந்திரி சந்தம்.

ஆதிதாளம்.

துரையே எலப்பனேயின் மனையாள் தனையும் புதல்வர் தமையுந் துணிவாய், விரைசேர்பொழில்சூழ் தருகண்டியில்வாழ் கொத்தன வசிதாமுடையாளதனைக், கெடுகொலைகொய்தானெனவே சொடுதம்பரிவித் தனராம்தனுவிவர்தான், உரமாய்மனமேமிகவொத்திவல்லவர்க்குத் தமிசதியுரைத்தனனே.

வசனம்.

கண்டி மாநகரை அரசாளும் இவரது அரசன் இவர் பிள்ளைகளின் சிரசை வெட்டி இவர் மனைவியைக் கொண்டு உரலிலிட்டு இடிக்கச்செய்தும் அன்னவளையுங் குளத்திற்றள்ளி கொன்றுவிட்டானும். இது செய்தி நானவர் கொண்டுவந்த கடிதத்தாலறிந்து மனம் நொந்து வாடுகிறார் இதுதானவர் வாக்குமூலம்.

ஆங்கிலேய அரசனும் மந்திரியும் கண்டிக்குப்புறப்படயோசித்தல்.

ஆங்கிலேயமந்திரி சந்தம்.

ஆதிதாளம்.

கண்டிக்கேகும்வழியில்மலையுங்காடுமுளதால்படை[illegible]
அண்டுந்துயரெனரசன்மனதில் ஆலோசனைசெய்வதுமல்லாமல்
சண்டைபுரியுந்தநிவிற்சேனை சமரிற்சேதப்படுமென்றும்
விண்டிக்குன் சம்மதிகேட்கின்றார்விரைவிற்பரிவாய்ப்புகல்வீரே.

வசனம்.

ஐயா, எலப்பனா அதிகாரம், கண்டிக்குப்போகும்வழியில்சாடும்மலைகளும் மிகுதியாயிருப்பதால் சைனியங்களுக்கு துன்பங்களேதேனும் நேரிடுமோவென்று அரையவர்கள் யோசிக்கிறதோடு உன் சம்மதமும் கேட்கும்படி தெரிவிக்கிறார். சீக்கிரந் தெரிவிப்பீர்.

எலப்பனா சந்தம்.

அடதாளசாபு.

ஏவலர்கள் முதல்சேனையாவுமிங்கேகுமார்க்கமுன்சொல்கிறேன்
இனியபடைகளுக்குணவு முதலியயாவும்நானேயளிக்கிறேன்
காவலர்க்கொருகுறைவராமலேகாக்கிறேனுயிர்க்காக்கிறேன்
கண்டிநகரிலேவென்றவர்க்குயர்கனகமகுடமுஞ்சூட்டுகிறேன்
சேவகதொழில்செய்துமன்னவன்செப்புஞ்சொற்படிகேட்கிறேன்
இன்மையானதளங்கள்தம்மையுஞ்சேதமின்றியேசேர்க்கிறே [ன்
தாவிவந்தவென்மீதிரங்கியேசதியிலில்லாவேண்டுமே
கடைசொலாமலென்னுடனடந்திடிசையப்புரிந்திடவேண்டுமே.

வசனம்.

துரைகளே, சேனைகள்முதல்யாவருக்குங்கண்டிக்கேகும்வழி காட்டி அவர்களுக்கு உணவுமுதலானவைகளுங் கொடுத்து நானே காக்கிறேன். இவைவருக்கும் ஒரு குன்றவுநேராமல்காத்து நீங்கள் கண்டி அரசை மகுடஞ்சூட்டுகிறேன். என்மீது தயைபுரிந்து தடையொன்றுஞ்சொல்லாமலென்னுடன்செய்ய வரவேண்டியது.

எலப்பர் ஆங்கிலேயமன்னருடனும் சேனைகளோடும் கொழும்பிலிருந்து புறப்பட்டு சப்ரகாமம்வந்து சேருதல்.

---

இருபத்தொன்பதாங்களம்.

இடம்—சப்ரகாமம்.

எலப்பரின சத்தம்.

ஏகதாளம்.

காவலா சப்ரகாமத்தில்வந்தனம்
தீவிரத்துடன்கண்டிக்குச்சென்றுநாம்
தாவியேசண்டைசெய்தச்சத்துருவுடனே
மேவிப்பற்றிஜெயவெற்றியடைகுவோம்.

வசனம்.

துரைகளே, நாமிப்போதுசப்ரகாமம்வந்துவிட்டோம்இனி தாமதிக்காமல் கண்டிக்குச்சென்று அந்த துஷ்டனுடன் யுத்தஞ்செய்து ஜெயமடையலாம் வருவீர்கள்.

---

முப்பதாங்களம்.

இடம்—கண்டி.

சேநாயகன் கண்டி அரசனுக்குச்சொல்

தரு.

இராகம்—சுருட்டி. தாளம்—ஆதி.

எலப்பரிலங்கை அரசன் நகரை அடைந்தே
சேனைப்படையுடனே குதிவந்தாரையா,
சப்ரகாமத்தில் தங்கி இருக்கிறார்
இப்போதுநாமும் எதிர்த்திடவேண்டுமையா,
அந்தச்சேனைகள் அனைத்தையும்வெட்டியே
நானேயவர்களை நாசமதாக்குறேன்,
வந்தெதிர்த்திடுமுன்னே வளைந்துகொண்டேயவனை
சிந்தைகலங்கவே சிதறவடிக்கிறேன்.

வசனம்.

அரசே, எலப்பர் ஆங்கிலேய அரசனையும் அவன்சைன்யங்களையும் அழைத்துக்கொண்டு தன்னுடன் சப்ரகாமத்திலிருக்கிறுராம். தாம் உத்திரவுகொடுத்தால் இப்போதே நமதுசேனைகளோடு சென்று அவர்களுடன் போர்புரிந்து அவர்கள்சிரத்தைவெட்டிச்சிதறி ஓடிப்போகும்படிசெய்துவருகிறேன்.

அரசன் முள்ளிக்கொடைக்குச்சொல்

சந்தம்.

ஆதிதாளம்.

முள்ளிக்கொடையேநன்னாவர்வந்து மூயன்றூரே
எள்ளத்தனையுந்தாமதமில்லாதிப்போதே
கள்ளத்தனமாய்வந்தவர்தம்மைக்கதிர்வாளால்
துள்ளச்சயமேசெயவுன்சம்மதிசொல்வாயே.

வசனம்.

முள்ளிக்கொடை அதிகாரம், அந்த துஷ்டப்பயலாகியவெலப்பனை எனக்கு கெடுதிசெய்ய ஆங்கிலேயமன்னனேயும் அவன் சேனைகளையுங்கூட துணைகொண்டுவந்திருப்பதால் இப்போதே அவர்களுடன் யெதிர்த்து போர்புரியவேண்டும். இதற்குஉன்சம்மதத்தை தெரிவிப்பாய்.

முள்ளிக்கொடைசந்தம்.

ஏகதாளம்.

இந்தவேளைவந்தசேனேயெந்தன்கையிலம்பினால்
சிந்தைநொந்துபஞ்சபோலசிதைந்திடுஞ்சிதைந்திடும்
கந்தவேளைநெஞ்சில்நெண்ணிசைகலந்துவெஞ்சமர்
தந்தமாகச்செய்யவுத்தரங்கிடைக்கவேண்டுமே.

வசனம்.

மகாராசா தாங்கள் உத்திரவுகொடுத்தால் இந்தக்ஷணமேபோய்ச் சென்று இப்போது வந்திருக்கிற ஆங்கிலேயருடைய சேனைகளையெல்லாம் பஞ்சாகப்பறக்கடித்து நாசஞ்செய்துவிட்டுவருகிறேன்.

அரசன்சந்தம்.

ஏகதாளம்.

பயம்விடுத்தெனதுடனெதிர்த்திடப்படப்பொருதவுமுடன்
சயமனத்தினில்அமரியற்றிடறாணிவுருத்தியண்மருவிய
வயமதற்றிடுபயலேவெட்டியேவுயிர்வதைத்திடசொடியிலே
ஜயமிகுத்திடும்படைநடத்தியேசமர்செய்திக்கணம்வருகவே.

வசனம்.

பயமற்று என்னுடனெதிர்த்து படைபடைப்ராய் யுத்தஞ்செய்ய வந்த துஷ்டப்பயலை ஒரு நொடிக்குள் நமது இரதகஜதுரகபதாதிகளுடன் சென்று சண்டைசெய்துகொன்றுஜெயம்பெற்றுவருவீர்.

முள்ளிக்கொடை அதிகாரம், நிசாநாயகன் முதலியவர்கள் சேனைகளுடன் சென்று ஆங்கிலேய அரசனோடியுத்தம்புரிந்து தோற்றுப்பின்னப்பட்டு ஓடிப்போய்விடுதல்.

---

முப்பத்தோராங்களம்.

இடம்— கண்டியில் இராஜன் அரண்மனை.

தூதவர் கண்டி அரசனுக்குச்சொல்

சந்தம்.

ஆதிதாளம்.

அரசேதளமுடன்விரைவாய்ச்சென்றே அமர்செய்திடவேநின்றோமே
அரசே ... தன்சேனையநம்மை அரைநொடிதனிலேவென்றாரே
அரசேமுள்ளிக்கொடையுந்திசைநாயகனும்பயந்தவர்சென்றாரே
அரசேஇதனைஅறிவீர் அரண்மனைக்கவர்கள்நெருங்கியேவாராரே.

வசனம்.

பிரபு, யுத்தஞ்செய்யப்போன முள்ளிக்கொடை, நிசாநாயகரும் நமது சேனைகளெல்லாம் எதிரிகள் கட்ட துபாக்கிக்குண்டுக்கும் பயந்தோடி யொளித்துக் கொண்டார்கள். அன்றியும் எதிரிகள் நமது அரண்மனையை நாடி நெருங்கிவருகிறார்கள்.

இராஜன் இராணியிடம் சொல்லப்பாடல்.

தரு. இராகம் - அபுருபம் - ஆதிதாளம்.

நாமினியென்செய்வோம்பெண்மணி நம்மை
நாடிவந்ததேசேனை கண்மணி நாயினி.
மாசாதேயினி
நமுசஞ்செய்யவு
போயொளிப்போமினி
நாவியேகுகையினில்
சற்றுஞ்
சாபமோகொலைசெய் பாபமோ
பாலருடனேவாராய் நாயினி.
சாலஞ்செய்யாமல்நேராய்
ஆங்கிலேயரசனை
எப்படிசென்று
வமர்செய்யவந்திட்டான்
ஆனசேனையுடனே
இங்கே
ஆகுமோ இருக்கலாகுமோ
ஒளித்துக்கொள்வோம் நாயினி.
ஆருமறியாமலேபோயவ
யாசகனு
வாழ்நாளின்றேசெரி
வன்செயல் தெய்வத்திற்கும்பொறுக்காமலேபோச்சுதே
பெண்ணே
மாயமோ என்னது பாபமோ
வாழ்வுஞ்சிறிதுகாலம் தாழ்வுஞ்சிறிதுகாலம் நாயினி.

வசனம்.

பெண்ணே, இனிநாமென்ன செய்வோம் யாரிட்டசாபமோ கொலைசெய்தபாபமோ நமது வாழ்நாளின்றோடுமுடிந்தது. நான் செய்தகொடுமை தெய்வம்பொருக்கவில்லை, எவரையோ ஆங்கிலேய மன்னனை துணைகொண்டு நமதுசைன்யங்களெல்லாம் வென்று அன்னுட்டரசனும் அரண்மனையில் பிரவேசித்து வருகிறனும், இனி நாமதஞ் செய்யப்போகாது. நமது பிள்ளைகளை அழைத்துக் கொண்டு எங்கேயாகிலும் ஓடி ஒளித்துக்கொள்ளலாம்.

இராணி துயரப்படல்.

தரு.

இராகம் - அபுருபம் - அடதாளசாபு.

என்னசெய்வோம்பிராணேசா ஐயோ
ஏங்குதேமனம் என்

அநீதம்நீசெய்ததாலேயோ ஆசைநாயகா இப்போ
சின்னப்படவந்தெய்வஞ் செய்ததோசெல்வநாயகா என்

பாவம்யாவும்வந்துசூழ்ந்ததே பகைவிளைந்ததே உந்தன்
கோவமேகொடுங்கூற்றாய்நேர்ந்ததே கேடுவந்ததே என்

சொன்னசொல்லைகேளாமற்போனீரேதுயர்க்குளானீரே இப்போ
ஒன்னலரைக்கண்டொளிக்கலானீரே என்

வசனம்.

பிராணேசா, நீர் அன்னியாயஞ்செய்ததெல்லாந்தெய்வம்பொ ருக்காமல் உம்மை சின்னப்படசெய்துவிட்டது. அன்றியும் நீர் செய்தபாபமெல்லாம் உமக்கு பகையாகநேர்ந்துவிட்டது, நான் சொன்னதை மறுத்ததாலல்லவோ பகைவர்களைக்கண்டு ஒளித் துக்கொள்ள காலம்வந்தது. (அடாது செய்தால் படாது படுவார்) என்று சொல்லும் பழமொழிபோலே நேர்ந்துவிட்டது. இனிநாம் செய்யலாவது யென்ன, உம்முடைய இஷ்டம்போல் செய்யும்.

அரசன்தரு.

இராகம் - முகாரி. தா - ஆதி.

ஆராலும்என்னைவெல்லலாகாதென்றிருந்தேனே
அல்லல்வந்துநேர்ந்ததே முருகா
காரார்பொழில்சூழ்கதிர்காமவடிவேலாநின்
கருணையில்லையோ முருகா

அல்லும்பகலுமுன்றன் அடியிணையேகதியென்
றடிபணிந்திருந்தேனே முருகா
கல்லுமுருகுமுன்றன் கருத்துமுருகிடாதோ
கதவைதிறக்கச்செய்வாய் முருகா

செய்தபிழையனைத்தும் திருவுளத்தில்பொறுத்தே
சிறியேன்றனையாதரிப்பாய் முருகா
வெய்யபகைவர்வந்து சிறைக்கேகவொருங்கினதால
மேவியொளிக்கலானேன் முருகா

இராஜன் முருகனை துதித்தல்.

தேவாரம்.

எந்தையேகதிர்காமத்தின் இறைவனேபுரையொன் றில்லாத
கந்தையேதாயேயென்றன் றன்னருட்கு நீயேயென்றுஞ்
சொந்தமாமெம்மையாளுந்தெய்வமே துணையொன்றின்றி
நிந்தையேபுரிகின்றேன் திருவருள் புரியெங்கோவே.

கொன்றனன்குமரர் தம்மைகொண்கணைக்குளத்திலிட்டேன்
வென்றனன்பகையைபெரிதிலையனான் இழுமைப்புற்றேன்
நின்றனன் தனியாய்த்தாரேசரணெருங்கிபுற்றேர்
உன்றனைத்தஞ்சமென்றேன் உவந்தருள் புரியெங்கோவே.

பாதகன்மாதராசை பற்றியே பதியன்றூர்
பாதமேகதியென்றென்னை பலினிலெப்பாவியானேன்
நிதமும்வெங்கோலேச்சி நின்னைசமக்கப்பெற்றேனை
வேதனைப்பகையைநீக்கிவிரைந்தருள் கதிர்காமேசா.

இராணி துதித்தல்.

தே

முகநோக்கியாசை வைத் தளமலேந் துவாடி
முகநோக்கிமிக்கமெய்வுறும்பைங்கூழ்போன்றே
முகநோக்கிப்பாடும்பாவலர்பழிச்சொ ணுகின்
ன்முகநோக்கிவந்தோர் தயைபுரிகதிர்காமேசா.

---

முப்பத்திரண்டாங்களர்.

இடம்—கண்டியில் கொலுச்சபை.

ஆங்கிலேய அர...ர் கண்டிவேந்தனைப்பிடித்து எலப்பனையின் னைவிமக்களைக்கொன்ற காரணமென்னவென்று கேட்குதல்.

அரசன் விருத்தம்.

மகாராஜராஜராஜஸ்ரீசிலோன்என்னும்வளநகர்பிரதிநிதியாய்
மருவசர்ஹோர்பர்ட்பரவுந்திகெனும்ப்ரபலமகிபரீடுழிவாழி[ எனை
வளநகர்மாந்தர்தமையான்கொடுமைசெய்ததாய்மந்திரி எலப்ப
வலிதிற்கடிந்தனன்யானவன்மீதினில்மனவெறுப்புந்திருத்தே

சிகாதமாய்ச் சப்ரகாமத்தினிலவன் பகுதிக்திபெற்று
னன்றே, தேசமுறவென்னுடன் சொல்லியங்கேசென்றுநில்வ
ழர்க்குடிகளை, நேரினில்ழைத்தென்னை வெல்லவகை தேடினு
நர்ந்ததிங்ஙனமிருக்க, நேர்த்தியா யாரொருதினம் நகரெலா
ற்றிநெறியேவருந்ததியினில.

சுகாநந்த நந்தவனத்தி லவன்மைத்துனி சுகுணரஞ்சிதை
ளென்னைத், தக்கத்தில்வைத்த வொருசெக்கச் சிவப்பிமேல்
லையாதமையல்கொண்டியான், தோகையவள்காலைப்பிடிக்க
... சோகமெல்லாஞ் சொல்லியுந், தாதுவி...
...ச்சோக...ர திரளிக்கல

O-842M58.K
ND6